வெளியீடு 1-11-1999 Issued 1-11-1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 19, 1999 - தொகுதி 63- எண் 2**

**Friday the 19th February, 1999 - Volume 63 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

[Price Rs. 3.00

19–02–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்–விடைகள்–– | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 161-202 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு–– | |
| திருச்சி பாரதீய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்டது | 202-217 |
| திரு. சி. ஞானசேகரன் | 202-204 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 204-208 |
| திரு. சி. வேலாயுதன் | 208-211 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 211-217 |
| 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)–– | 217-218 |
| சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 | 217-218 |
| 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்––தொடர்ச்சி–– | 218-295 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 218-224 |
| *திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 224-230 |
| திரு. ஆர். ஆர். சேகரன் | 230-237 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 237-241 |

பக்கங்கள்

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி--

| | |
|---|---|
| *திரு. அ.வ. அப்துல் நாசர் | 242-247 |
| *திரு. செங்கை சிவம் | 247-252 |
| திரு. சி. வேலாயுதன் | 253-263 |
| திரு. ஜி. கே. மணி | 263-270 |
| திரு. இரா. பெர்னார்ட்டு | 271-276 |
| *திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் | 276-284 |
| *திரு. கோ. மோகனதாசன் | 284-289 |
| திரு. கே. ஆர். இராமசாமி | 289-295 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 295-297 |


220161.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 7, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 பிப்ரவரி 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

கொலை முதலிய கொடுமைகள் புரிவோரை, ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பதைப் போன்றதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**21--**

தொழில் தொடங்கிட சலுகைகள்

*13152--திரு. செங்கை சிவம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1999 பிப்ரவரி 19

(அ) மத்திய அரசு பல்வேறு மாநிலங்களிலுள்ள 53 மாவட்டங்களை மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்தும், புதிய தொழில் தொடங்கிட பல்வேறு சலுகைகள் வழங்கியும், அதில் தமிழ்நாடு இடம் பெறாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மத்திய அரசு, இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களில் 53 மாவட்டங்களை தொழிலில் பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கை வெளியிட்டது. அதில் தமிழ்நாட்டில் எந்த ஒரு மாவட்டமும் இதற்காக வகுக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்யாததால் தொழிலில் பின்தங்கிய பகுதியாக மைய அரசால் அறிவிக்கப்படவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1997-ல் Times of India நாளிதழில் வந்த செய்திப்படி இந்தியாவிலே மேற்கு வங்காளம், இராஜஸ்தான், கேரளா, ஒரிசா போன்ற மாநிலங்களில் 1991-ன் கணக்கு எடுப்புப் பிரகாரம்தான் 53 மாவட்டங்களை தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. இதிலே தொழில் தொடங்குபவர்களுக்கு மாநில அரசு அறிவிக்கின்ற சலுகைகளோடு 100 சதவீதம் வருமான வரி விலக்கும் மைய அரசு அளிக்கிறது. தமிழகத்திலே 24 மாவட்டங்களில் 217 பிளாக்குகளை பின்தங்கிய பகுதிகளாகவும், 16 மாவட்டங்களில் 72 பிளாக்குகளை மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவும் அறிவித்து, தமிழக அரசு வணிக வரி உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை அளிக்கிறது. மேலும், இந்தப் பகுதிகளை பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசு அறிவித்தால், வருமான வரி சலுகையும் கிடைக்கும். தொழில் முனைபவர்கள் அதிகமாக நம் தமிழகத்திற்கு வருகை தர வாய்ப்பாக இருக்கும். எனவே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி, இது 1991-ல் எடுக்கப்பட்ட கணக்கு எடுப்பு; சமீபத்திய கணக்கு எடுப்புப் பிரகாரம் நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளாக சில மாவட்டங்களை அறிவிக்க அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் ஒன்றிய அளவில் பின்தங்கிய பகுதிகள், மிகவும் பின்தங்கிய பகுதிகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன, மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இது மாவட்ட அளவிலே இல்லாவிட்டாலும், முதலில் பகுதி அளவிலே தொடங்கி, பிறகு வட்ட அளவிலே தொடர்ந்து, பிறகு ஒன்றிய அளவிலே இப்போது இருக்கிறது. இங்கே கேள்வி பின்தங்கிய மாவட்டங்கள் என்பதைப் பொறுத்ததாகும். 1994 ஆம் ஆண்டில் மத்திய அரசினுடைய வருமான வரித் துறை மாநிலங்களிலே உள்ள பின்தங்கிய மாவட்டங்கள் எவை எவை என்று கண்டறிந்து கூற குழு ஒன்றை நியமித்தது. இந்தக் குழுவினுடைய அறிக்கையின்படி இந்தியாவில் உள்ள மாநிலங்களில் 53 மாவட்டங்களைத் தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களாக 1961 வருமான வரிச் சட்டம் பிரிவு 80-Iஏ-ன்கீழ் 3-9-1997 நாளிட்ட அறிவிக்கை எண் 10404-ல் மத்திய அரசு அறிவித்தது. இந்த அறிவிக்கை 1-10-1994 முதல் அமலுக்கு வருவதாக மைய அரசு அறிவித்தது. அதன்படி பீகார் மாநிலத்திலே 20 மாவட்டங்களும், மேற்கு வங்கத்தில் 6 மாவட்டங்களும், ஒரிசாவில் 2 மாவட்டங்களும், உத்தரப் பிரதேசத்தில் 11 மாவட்டங்களும், இராஜஸ்தானில் 5 மாவட்டங்களும், மத்தியப் பிரதேசத்தில் 5 மாவட்டங்களும், மராட்டியத்தில் 1 மாவட்டமும், குஜராத்தில் 1 மாவட்டமும், கேரளாவில் 2 மாவட்டங்களும் என மொத்தம் 53 மாவட்டங்கள் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக மைய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தென் மாநிலங்களில் கேரளாவில் மாத்திரம்தான் 2 மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்தங்கிய மாவட்டங்கள் என்பதற்கான தகுதி, இந்த மாவட்டங்களினுடைய பொருளாதார நிலை, தொழில் நிலைகள் எல்லாம் பலவீனமாக எந்த அளவு இருக்கின்றன என்பவைதான்; பலவீனமாக இருப்பதுதான் பின்தங்கிய மாவட்டங்களுக்கான தகுதியாக நிர்ணயிக்கப்படுகிறது. அந்தத் தகுதியிலே தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்கள் வராத காரணத்தால் அவை பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்படவில்லை.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

[1999 பிப்ரவரி 19

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுக்கான பட்டியலில் தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்கள் தகுதியில்லாததால் வரவில்லை என்று மத்திய அரசு அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். அவற்றிற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது என்பதை இந்த அவைக்கு அறிவிப்பதோடு, இந்தியாவிலேயே மிகமிகப் பின்தங்கிய மாவட்டம் ஒன்று இருக்கிறதென்றால் அது இராமநாதபுரம் மாவட்டமாகத்தான் இருக்க முடியும் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதி, அதை மிகப் பின் தங்கிய மாவட்டமாக அறிவிப்பதற்கு முயற்சிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களில் உள்ள மாவட்டங்களை, தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க சில விதிமுறைகளை மைய அரசு கடைப்பிடிக்கின்றது. அதாவது, ஒரு மாவட்டத்தின் மொத்தக் குறியீட்டு எண் (Total Weighted Index Count) 250 அல்லது அதற்கும் குறைவாக இருக்க வேண்டும். மொத்தக் குறியீட்டு எண் என்பது கடன் வசதி, நிதி வைப்பு, நகர்ப்புற வசதிகள், தொலைபேசிகளுடைய எண்ணிக்கை, மின்சாரம், சாலை வசதி, தொழிலாளர்களுடைய எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு--இந்த மொத்தக் குறியீட்டு எண்--நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு மாவட்டம் தொழிற்சாலை இல்லாத மாவட்டமாக இருக்க வேண்டும். ஒரு மாவட்டம் தொடர்புகொள்ள வசதியில்லாத மலைப்பகுதி மாவட்டமாக இருக்க வேண்டும். 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் என்ற அளவில், ஒரு மாவட்டத்தில் இரயில் தொடர்பு வசதி இல்லாமல் இருக்க வேண்டும். இவையெல்லாம் சேர்ந்தாற்போல் இருந்தால் இந்தத் தகுதியை அது பெற முடியும். இந்த வழிமுறைகளின்படி, தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்களினுடைய மொத்தக் குறியீட்டு எண்ணை 250 என்று வைக்கிறார்கள்.



1999 பிப்ரவரி 19]

| | |
|---|---|
| திருவண்ணாமலை மாவட்டம் | - 551 ஆக இருக்கிறது |
| தென்னாற்காடு (விழுப்புரம், கடலூர் இரண்டும் இணைந்த மாவட்டம். அப்போது எடுத்த கணக்கெடுப்பின்படி) | - 683 ஆக இருக்கிறது |
| புதுக்கோட்டை | - 707 ஆக இருக்கிறது |
| தஞ்சாவூர் | - 737 ஆக இருக்கிறது |
| சிவகங்கை (பசும்பொன்) | - 1,122 ஆக இருக்கிறது |
| தருமபுரி | - 1,153 ஆக இருக்கிறது |
| நெல்லை | - 1,245 ஆக இருக்கிறது |
| திண்டுக்கல் | - 1,341 ஆக இருக்கிறது |
| ஈரோடு | - 1,452 ஆக இருக்கிறது |
| திருச்சி | - 1,547 ஆக இருக்கிறது |
| கன்னியாகுமரி | - 1,560 ஆக இருக்கிறது |
| மதுரை | - 1,619 ஆக இருக்கிறது |
| சேலம் | - 1,723 ஆக இருக்கிறது |
| வட ஆற்காடு (வேலூர் மாவட்டம்) | - 1,822 ஆக இருக்கிறது |
| காஞ்சிபுரம், பழைய செங்கல்பட்டு | - 2,542 ஆக இருக்கிறது |
| தூத்துக்குடி (சிதம்பரனார்) | - 2,821 ஆக இருக்கிறது |
| நீலகிரி | - 2,837 ஆக இருக்கிறது |
| விருதுநகர் | - 3,451 ஆக இருக்கிறது |
| சென்னை | - 9,866 ஆக இருக்கிறது |
| கோயம்புத்தூர் | - 11,258 ஆக இருக்கிறது |

குறியீட்டு எண் 250-க்குக் குறைவாக இருக்க வேண்டுமென்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன அவருடைய இராமநாதபுரம் மாவட்டத்தின் குறியீட்டு எண் 647 ஆக இருக்கிற காரணத்தால் இதிலே இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(திரு. இரா. தாமரைக்கனி உட்கார்ந்தபடியே கையை உயர்த்திக்கொண்டு, பேசிக்கொண்டிருந்தார்.)*

[1999 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தெரியும், நான் பார்த்தேன், கையைத் தூக்கும்போதெல்லாம் கூப்பிட வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

வினா எண் 22, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**22--**

### காவலர்களுக்குக் குடியிருப்புகள்

***15762--திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர் காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு ஆணை (நிலை) எண் 35, உள் துறை, நாள் 9-1-1998இல் 1997-98 ஆம் ஆண்டில் காவல் துறைக்குச் சொந்தமான இடங்களில் 2,500 காவலர் குடியிருப்புகள், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மூலம் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் திருவாரூர் மாவட்டம், கோட்டூர் காவல் நிலையத்திற்கு 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர், 30 தலைமைக் காவலர் மற்றும் காவலர் குடியிருப்புகள் ஆக மொத்தம் 33 குடியிருப்புகள் கட்ட ரூ. 88.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் கட்டும் பணி விரைந்து நடைபெற்று வருகிறது. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை காவல் நிலையங்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர போதிய நிலம் காவல் துறை கைவசத்தில் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், காவலர் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 பிப்ரவரி 19]

முற்பகல் 9-40

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல முத்துப்பேட்டை காவல் நிலையமும், அதனுடைய குடியிருப்புப் பணியும் விரைவாக நடைபெற்று வருகின்றது. அதுபோன்று திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை போன்ற இடங்களில் ஏற்கெனவே நிலங்கள் இல்லாத சூழ்நிலை இருந்து, தற்போது நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, விரைந்து கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மூலம் எனக்குத் தரப்பட்டுள்ள விவரத்தில் 'போதுமான அளவுக்கு நிலம் காவல் துறையின் கைவசம் இல்லை' என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி சொல்வதைப்போல அரசின் நிலங்கள் அங்கே இருக்குமானால், அவற்றை இதற்குப் பயன்படுத்திக்கொள்ள இயலுமா என்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, காங்கேயம் காவல் நிலையம் மற்றும் மகளிர் காவல் நிலைய காவலர்களுக்கு நிதியாண்டு 1999-2000 இல் காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்புகள் கட்டித் தர அரசிடம் கருத்துரு உள்ளதா? அப்படியிருந்தால் அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருள்கூர்ந்து நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 1999-2000 பற்றி கேட்கிறார். அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்.

[1999 பிப்ரவரி 19

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை காவலர் குடியிருப்பு 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அது தற்போது இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. அதைப் புதுப்பித்து புதிய கட்டடமாகக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புவதுடன், காவல் நிலையமும் அதே சூழ்நிலையில் இருப்பதால், அதையும் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 60 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தினால், அதற்கு ஒரு மணி விழா நடத்தி விட்டு, அடுத்து புதிய மனை விழா நடத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பல மகளிர் காவல் நிலையங்களைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்ததில், என்னுடைய தொகுதியில் தாராபுரம் நகரில் மகளிர் காவல் நிலையம் கட்டிக் கொடுக்க ஆவன செய்தமைக்கு நன்றி தெரிவிப்பதோடு, மகளிர் சுமார் 85 கி.மீ. தொலைவிலிருந்து வருவதால், மகளிருக்கு முன்னுரிமை அடிப்படையில் குடியிருப்புகள் கட்டித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி தனியாக அரசுக்குக் குறிப்பு அனுப்பினால் அதுபற்றி கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரில் மிகப் பழமையான காவலர் குடியிருப்பு பழுதடைந்த நிலையில் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நேரடியாக கோரிக்கையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வாண்டுத் திட்டத்தில்



1999 பிப்ரவரி 19]

அதனைச் சேர்த்து காவலர் குடியிருப்பும், அதுபோல துணை ஆய்வாளர், ஆய்வாளர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கான குடியிருப்புகளையும் நவீன முறையில் கட்டித் தருவதற்கான முயற்சிகளை முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதுபற்றி தரப்பட்டுள்ள விண்ணப்பம் அந்தத் துறையினுடைய ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏற்ற முடிவு, முடிந்த வரையில் விரைவில் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு ஒவ்வோர் ஆண்டும் புதிதாக காவல் நிலையங்களை உருவாக்கி வருகிறது. அதுபோல சென்ற ஆண்டு உருவாக்கப்பட்ட காவல் நிலையங்களில் உள்ள காவலர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா? அதிலும் கிராமப்புறங்களில் உள்ள காவலர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். கிராமப்புறங்களுக்கு தனி உரிமை கொடுக்கின்ற நிலை இருக்கிறதா என்று முதல்வர் அவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தற்பொழுது காவல் துறையில் பணியாற்றுகின்ற 88,683 காவல் பணியாளர்களில் 28,792 காவல் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டிருக்கின்றன. இது காவலர்களுடைய குடியிருப்புத் தேவையில் 32.46 சதவிகிதம் ஆகும். 1992 ஆம் ஆண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆணை பிறப்பித்தது. 1996-97 இல் அது 1,500 என உயர்த்தப்பட்டது. 1997-98 இல் 2,500 என்று உயர்த்தப்பட்டது. இந்தக் குடியிருப்புகள் இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 408 குடியிருப்புகள்தான் சென்னையிலும், 2,092 குடியிருப்புகள் பிற மாவட்டங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, தொடர்ந்து கட்டப்படுகின்ற சூழ்நிலையில் கிராமப்பகுதிகளும் கணக்கிலே கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

[1999 பிப்ரவரி 19

முற்பகல் 9-45

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் நவீன வசதிகளுடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருந்தது. அதன்படி காவலர் குடியிருப்புகள் நவீன வசதிகளுடன் கட்டிக்கொடுக்கப்படுகின்றனவா? குறிப்பாக, காவலர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பதற்காக தனி மீட்டர் பொருத்திக் கொடுக்கப்படும் என்று சென்றமுறை கூறினார்கள். தற்போது கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்புகளில் தனித் தனி மீட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து காவலர் குடியிருப்புகளுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது. மின் விசிறி வசதி செய்து தரப்படாமல் இருந்த 11,140 காவலர் குடியிருப்புகளுக்கு 1.67 கோடி ரூபாய் செலவில் மின் விசிறிகள் பொருத்த ஆணையிடப்பட்டு, அனைத்து குடியிருப்புகளுக்கும் மின் விசிறி வசதி செய்து தரப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தற்போது கட்டப்பட்டு வரும் அனைத்து காவலர் குடியிருப்புகளிலும் தனித் தனி மின்சார மீட்டர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. தனி மின்சார மீட்டர் வசதி இல்லாத 13,932 பழைய காவலர் குடியிருப்புகளுக்கு தனி மின்சார மீட்டர் வசதி ரூ. 4.18 கோடி செலவில் பொருத்த ஆணையிடப்பட்டு, அந்தப் பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. காவலர் குடியிருப்புகள் அனைத்துக்கும், குடியிருப்பு ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு 20 யூனிட் மின்சாரம் இலவசமாகத் தரப்படுகிறது. அனைத்து காவலர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2,751 காவலர் குடியிருப்புகளில் அரசு ஆணை எண் 844, நாள் 12-6-1997-ன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபடி 5.23 கோடி ரூபாய் செலவில் நவீன கழிப்பிட வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இவை எல்லாம் நவீனமாகச் செய்யப்பட்ட காரியங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.



1999 பிப்ரவரி 19]

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட சாத்தூர் நகரிலே காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்சமயம் அது பழுதடைந்த காரணத்தால், அந்தக் கட்டடத்திலே பணி செய்ய முடியாமல், காவல் நிலையம் வேறு வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. மீண்டும் பழைய கட்டடம் இருந்த இடத்திலேயே, புதிதாக நவீன முறையிலே காவல் நிலையத்தைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வினா, காவலர் குடியிருப்பைப் பற்றியது. உறுப்பினர் காவல் நிலையத்தைப் பற்றிக் கேட்கிறார். ஒவ்வொரு உறுப்பினரும் இப்படியே கேட்பார்கள். எனவே, எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்து நான் சொல்லுகின்ற பதில், 'தனிக் கேள்வி போடவும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சிவகிரி காவல் நிலையம், வாசுதேவநல்லூர் காவல் நிலையம், புளியங்குடி காவல் நிலையம் என்று 3 காவல் நிலையங்கள் இருக்கின்றன. இந்த 3 காவல் நிலையங்களிலும் உள்ள காவலர்களுக்கு 24 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. இது குறித்து சென்ற ஆண்டு தொடர்புடைய துறைக்கு நான் மனு செய்திருக்கிறேன். வரும் நிதியாண்டிலாவது, அந்த 3 காவல் நிலையக் காவலர்களுக்கும் 24 வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் பொதுவாக, காவலர்களுக்காக எவ்வளவு குடியிருப்புகள் கட்டித்தரப்பட இருக்கின்றன, அவை எந்த அளவில் முன்னேற்றத்தில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். அதில் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கான பதிலும் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1999 பிப்ரவரி 19

**23--**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

***15311--திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உசிலம்பட்டி தொகுதியில் கே. நாட்டாபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதியில் கே. நாட்டாபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடக் கோரி 1998-99-ல் கருத்துரு பெறப்பட்டது. இந்தப் பள்ளி சார்பில் பொதுமக்கள் பங்குத் தொகை ரூ. 1.00 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும் எட்டாம் வகுப்பில் நிர்ணயிக்கப்பட்ட அளவு மாணவர் எண்ணிக்கை இல்லை. 50 பேர் இல்லை. இந்நிலையில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை இப்பள்ளி பூர்த்தி செய்யாததால் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த உயர்மட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்படாததால் தரம் உயர்த்தப்படவில்லை.

முற்பகல் 9-50

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. உசிலம்பட்டி தொகுதி கல்வி ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதி. 40 சதவிகிதம் முதல் 45 சதவிகிதம் வரைதான் அங்கே மக்கள் படிப்பறிவு பெற்றிருக்கிறார்கள். நமது அரசு கல்லாமையை இல்லாமையாக்கிட தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. கல்வித் துறையின் மேம்பாட்டிற்குத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இதே கே. நாட்டாபட்டி ஊராட்சிப் பள்ளிதான் இரண்டு I.A.S. அதிகாரிகளைத் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கிறது. சுப்புராஜ், I.A.S. ஜெயக்கொடி, I.A.S. ஆகிய இரண்டு I.A.S. அதிகாரிகள்



1999 பிப்ரவரி 19]

இந்த கே. நாட்டாபட்டி ஊராட்சிப் பள்ளியிலே படித்தவர்கள்தான். எனவே, படிக்கின்ற ஆர்வம் அந்த வட்டாரத்தில் அதிகம் இருக்கின்ற காரணத்தாலும், இப்போது விதிமுறைகளுக்கேற்ப, மாணவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கின்ற காரணத்தாலும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து கே. நாட்டாபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது நடுநிலைப் பள்ளியாக இருக்கின்ற நிலையிலே I.A.S. அதிகாரிகள் உருவாகி வந்திருக்கிறார்கள். ஒருவேளை உயர்நிலைப் பள்ளியாகி அந்த வாய்ப்பு தவறிப்போனால் என்ன செய்வது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் ஒன்று; இந்த ஆண்டு பட்டியலில் அதேபோல வருகிற பின்தங்கிய பகுதிகளிலுள்ள பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமானால், அந்த வாய்ப்பு இயல்பாக வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**24--**

**மேல்பாதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

***15347--திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மேல்பாதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

[1999 பிப்ரவரி 19

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மேல்பாதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடக் கோரி 1998-99-ல் கருத்துரு பெறப்பட்டது. இப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் 50 மாணவர்கள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை. இந்நிலையில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை இப்பள்ளி பூர்த்தி செய்யாததால் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த உயர்மட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்படவில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, 1998-99.ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட 50 மாணவர்களுக்குக் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 55 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். எனவே, அரசு மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டாவது மேல்பாதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அறிவிக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவது ஆண்டுதோறும் பரிசீலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வேண்டுகோளாக வருகிற, உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட வேண்டிய பள்ளிகளில் மாணவிகள் அதிக எண்ணிக்கையில் உள்ள பள்ளிக்கு முதல் உரிமையும், அடுத்து மாணவர்கள் உள்ள பள்ளிக்கு இரண்டாவது உரிமையுமாக, கட்டட வசதியைக் கருதி உயர்மட்டக் குழு பரிந்துரை வழங்குகிறது. இப்போது எட்டாம் வகுப்பிலே 55 மாணவர்கள் இருப்பார்களேயானால், இந்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட நல்ல வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 19]

**25--**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

***13812--திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தளி தொகுதி, தளி ஒன்றியம் மற்றும் கெலமங்கலம் ஒன்றியத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி தொகுதி, தளி மற்றும் கெலமங்கலம் ஊர்களில் 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**THIRU S. RAJAREDDY:** Hon. Speaker Sir, the land acquired for building a sub-station has already been transferred from Revenue Department to Electricity Department, but the work has not yet been started. Similarly, Sub-station is not sanctioned for Kelamangalam Union. The transformer provided in the Health Centre is not functioning properly and it breaks down frequently. I request the Hon. Minister to provide two sub-stations in such areas.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலிருந்து அங்கே transformer சரியாக இயங்கவில்லை என்று தெரிகிறது. இப்போது ஊர் மக்கள் transformer அமைப்பதற்கும், அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும், துணை மின் நிலையம் கட்டுவதற்கும் சேர்த்து இலவசமாக நிலத்தைத் தந்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு துணை மின் நிலையம் புதியதாக கட்டித் தரப்படும். transformer-ஐப் பொறுத்தவரையில் உடனடியாக மின் வாரியம் நடவடிக்கை எடுத்து, மார்ச் மாதத்திற்குள் புதிய transformer பொருத்தப்படும்.

[1999 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 9-55

**26--**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

***18729--திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, முடுக்கங்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் முடுக்கங்குளம் கிராமம் உள்ளது. காரியாப்பட்டி ஒன்றியத்தின் மக்கள்தொகை அடிப்படையில் செயல்படும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானது என்பதாலும், முடுக்கங்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 16 கிலோமீட்டர் தூரத்தில் நரிக்குடி மற்றும் காரியாப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும் மேற்படி கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய முடுக்கங்குளம் கிராமம் சுமார் 3,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய கிராமம் ஆகும். அது தவிர



1999 பிப்ரவரி 19]

சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 25 கிராமங்களுக்கு அது தாய் கிராமமாக விளங்குகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையிலே காரியாப்பட்டியைத் தனி தாலுகாவாக்கி இப்போது அது சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மறுபரிசீலனை செய்து காரியாப்பட்டி மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியும், முடுக்கங்குளத்திலே இருக்கக்கூடிய துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக அமைக்கவும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரியாப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக உயர்த்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, முடுக்கங்குளத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமானால் ஏற்கெனவே காரியாப்பட்டியிலே இருந்த அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கே மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**27--**

**மேலகரம் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டம்**

***12214--திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 பிப்ரவரி 19

(அ) ஆம்.

(ஆ) திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள் முடிந்ததும் மேலகரம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்ட முன்வடிவு தயாரிக்கப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முடிக்கப்படும் என்றும், ஜனவரி 1999-ல் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், டிசம்பர் மாதம் 2001-ல் பயனுக்கு கொண்டுவரப்படும் என்றும் அறிவித்தார்கள். ஆனால் ஆய்வுப் பணிகள் இன்றுவரை முடிக்கப்படவில்லை. விரைவாக ஆய்வுப் பணிகளை முடித்து அமைச்சர் அறிவித்த காலத்திற்குள் அந்தத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், நீராதாரத்தைத் தோற்றுவிப்பதற்கும் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்கின்ற விவரங்களையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீராதாரத்தைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தால்தான் காலதாமதமே தவிர, பணியால் ஏற்பட்ட காலதாமதமல்ல. 10,500 மக்கள் தொகை தற்போது இருக்கிற அந்தப் பேரூராட்சிக்கு தொடக்கத்திலிருந்து ஏறத்தாழ 30 ஆண்டுகளில் மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கிட்டு, விரைவாகவே பணி முடிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த ஆய்வு மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.37 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மூன்று திறந்தவெளிக் கிணறுகள் அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு விட்டன. பணிகள் தொடங்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. கிணறு அமைக்கப்பட்டு நீர் கூடும் திறன் கணக்கிடப்பட்டவுடன் மேலகரம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்படும்.



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. ச. அழகிரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28--**

### சிதம்பரம் நகருக்குக் குடிநீர்த் திட்டம்

***14045--திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொள்ளிடம் ஆற்றிலிருந்து, சிதம்பரம் நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொள்ளிடம் ஆற்றிலிருந்து சிதம்பரம் நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டு முடிவுறும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987 ஆம் ஆண்டிலிருந்து பரிசீலனையில் இருக்கிறது. சென்ற ஆண்டு இதற்காக குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்றது. தரமற்றக் குழாய்கள் பதிக்கப்பட்ட காரணத்தால் சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தக் குழாய்கள் பதிக்கப்பட்டு தண்ணீர் சோதனை ஓட்டம் விடப்பட்டபோது அந்தக் குழாய்கள் எல்லாம் சிதறுண்டு போனதாகச் சொல்கிறார்கள். எனவே, இப்போது மீண்டும் பதிக்கப்படுகிற குழாய்கள் தரமான குழாய்களாக அமைக்கப்படுமா? தரமற்றக் குழாய்கள் பதிக்கப்பட்டதற்கான காரணம் என்ன? தரமற்றக் குழாய்கள் எப்படி குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கிடைத்தன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகவே தெரியும். காரணம், இரண்டு முறை இப்படிப்பட்ட குழாய் பிரச்சினை அங்கே ஏற்பட்டு, அவை அத்தனையையும் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளக்

[1999 பிப்ரவரி 19

கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் இந்த அவையில் அறிவித்திருக்கிறேன். 1987-லே தொடங்கப்பட்டது என்று உறுப்பினர் குறிப்பிட்டார். அதற்கும் இந்த அரசுக்கும் எந்தவிதமான பொறுப்பும் இல்லை. காரணம், ஏற்கெனவே இருந்தவர்கள் அந்தப் பிரச்சினையை உருவாக்கி, அதற்குப் பிறகு மாற்றி, திருத்தி அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால்தான், காலதாமதம் என்று ஏற்கெனவேகூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். 12.410 கிலோ மீட்டர் நீளம் பிரதானக் குழாய்கள் அமைக்கப்பட்டு, நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றிகள் மூலம் நீரேற்றி, பின்னர் 17 கிலோ மீட்டர் நீளம் பகிர்மானக் குழாய்கள் மூலம் சிதம்பரம் நகராட்சிக்குக் குடிநீர் நிச்சயமாக வழங்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**29--**

### பருத்தி விவசாயிகளுக்குச் சிறப்புச் சலுகைகள்

*13015--**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க பருத்தி விவசாயிகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கும் செய்றகுறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் உதவியுடன் தீவிர பருத்தி பெருக்கத் திட்டத்தின் கீழ், பருத்தி பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் பல திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பருத்தி சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டத்தின்கீழ் 375.00 மெட்ரிக் டன் சான்று விதைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்ட திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் பருத்தி விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்கு உதவி செய்யப்பட்டு வருகின்றது.



1999 பிப்ரவரி 19]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி விளைச்சலை அதிகரிப்பதற்காக, காசநோயை உருவாக்கக்கூடிய கிருமியினுடைய உயிரணுவையும், பருத்தி விதையினுடைய உயிரணுவையும் இணைத்து ஒரு புதிய விதையை உருவாக்கி வருவதாக அறிகிறோம். அந்த விதையை நடைமுறைப்படுத்துகிறபோது, அதை உணவாகக் கொள்கிற மாட்டிலிருந்து பெறப்படுகிற பாலிலும் அத்தகைய நோய்க்கு இடமளிக்க வாய்ப்பிருக்கும் என்ற அச்சம் நிலவுகிறது. எனவே, அத்தகைய முயற்சியை மாநில அரசு மேற்கொண்டிருப்பது உண்மையா? இதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால், அமெரிக்கக் கம்பெனி ஒன்று, இதே தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும், அதேபோல் மதுரை மாவட்டத்தில் தேனி பகுதியிலும் genetically modified seeds என்று சொல்லப்படுகிற ஒரு விதையை உருவாக்கி, அரசின் அனுமதி பெறாமலேயே சில தனியார் பண்ணைகளிலே பரிசோதித்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அந்த விதை மலட்டுத்தன்மை கொண்ட விதை என்றும் சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தை மாநில அரசு கவனத்தில் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, பருத்தி விளைச்சலை அதிகரிக்க, பருத்தி விவசாயிகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் கேட்ட கேள்வியை தனிக் கேள்வியாக எழுப்பினால் அதற்குரிய பதில் தர இயலும். பொதுவாக, தமிழ்நாட்டில் மானாவாரி மற்றும் இறைவைப் பயிராக, 2 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேரில் பருத்திச் சாகுபடி செய்யப்படுகிறது. அதற்கு மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து, தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ. 2 கோடியே 92 இலட்சம் மானியமாக விவசாயிகளுக்கு எல்லா மாவட்டங்களிலும் வழங்குகிறது. இந்த மானியம் பெறக்கூடிய பருத்தி இரகங்கள் எம்.சி.யு. 5 வி.டி., எம்.சி.யு.-7, அஞ்சலி, சுப்ரியா, எல்.ஆர்.ஏ., 5166, எம்.சி.யு. 5, போன்றவைதான். மாண்புமிகு உறுப்பினர் அமெரிக்க நிறுவனத்தின் 'மான்சாண்டோ' பருத்தி, மலட்டுத் தன்மையைப் பற்றி இங்கே ஓர்

ஐயத்தை எழுப்பினார். நம்முடைய தமிழக அரசின் சார்பிலும்கூட மத்திய அரசுக்கு அந்தக் கருத்து எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த terminator பருத்தி விதை மலட்டு விதை மட்டுமல்ல; விஷத் தன்மை உள்ளதாகவும் இருப்பதாக அறியப்படுகிறது. இதைப்பற்றி மத்திய அரசு தீர ஆராய்ந்து இறுதி முடிவிற்கு வந்த பிறகுதான் இது போன்ற விதைகளை இந்தியாவில் உற்பத்தி செய்ய அனுமதியளிக்க வேண்டும். குறிப்பாக தமிழகத்தில் என்று மாநில அரசாங்கத்தின் சார்பில் ஒரு கருத்தை மத்திய வேளாண்மைத் துறையின் இணை அமைச்சருக்குக் கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சார்பாக நான் எடுத்து வைத்திருக்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியை ஒட்டியேதான் நான் துணைக் கேள்வியைக் கேட்டேன். பருத்தி விளைச்சலை அதிகரிப்பதற்குரிய யுத்திகளில் இதுவும் ஒன்று. எனவே, அந்த யுத்திகளில் அமெரிக்காவின் தலையீடு என்பது தமிழ்நாட்டின் விவசாயத்தைப் பாழ்படுத்துகிற அம்சம் உள்ளடங்கி இருக்கிறது என்ற கண்ணோட்டத்துடன்தான் விளக்கம் பெறுவதற்காக அந்த விஷயத்தைக் கேட்டேன். இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய தமிழ்நாட்டில் பருத்தி என்பது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கியமான பங்காற்றுகின்ற ஒரு மூலப் பொருளாகும். ஆனால், நம் தேவையில் எட்டில் ஒரு பங்குதான் தமிழ்நாட்டில் விளைகிறது. தமிழ்நாட்டினுடைய பருத்தித் தேவைக்குப் பிற மாநிலங்களை எதிர்பார்த்து இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதிலே ஒரு சிக்கலான நெருக்கடி என்னவென்றால், பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக பருத்தி விளைகிற மாநிலங்களில், பஞ்சாலைத் தொழில் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அந்தந்த மாநிலத்தின் பஞ்சாலையின் தேவைக்கு அந்தந்த மாநில பருத்திகளை எடுத்துக் கொள்கிறபோது, தமிழ்நாட்டின் பருத்தித் தேவைக்கு நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்பதால் தமிழ்நாட்டில் பருத்தி விளைச்சலை அதிகரிப்பதற்குரிய யுத்திகள் என்னவென்பதையும், அந்த யுத்திகளை மேற்கொள்வதன் மூலம் பருத்தியின் விளைச்சல் எந்த அளவிற்கு அதிகரிக்கும் என்பது பற்றியும் மாநில அரசு ஏதாவது மதிப்பீடு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மானாவாரி இறைவைப் பாசன பருத்தி பயிரிடக்கூடிய மொத்த நிலப்பரப்பு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ஹெக்டேர்தான். இதிலே பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காகத்தான் 375 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளை நாம் கொள்முதல் செய்து, மானியமாக இரண்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சம் ரூபாயை எல்லா மாவட்டங்களிலும் நாம் வழங்குகின்றோம். அந்த அடிப்படையிலேதான் இப்போது பருத்தி உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நாம் சலுகையை வழங்குகிறோம். இதைத் தவிர வேறு விவரம் எதுவும் என்னிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**30--**

**குளக்கரையை பலப்படுத்தி அலகுகள் அமைத்தல்**

***7333--திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியிலுள்ள இடையர்காடு, வாழைவெட்டி குளக்கரையை பலப்படுத்தி அலகுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் இதற்கான மதிப்பீடு ஒப்புதலளிக்கப்பட்டு, ஒப்பந்தம் 4-2-1999 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. வரும் காலத்தில் பணிகள் ஆரம்பித்து

[1999 பிப்ரவரி 19

முடிக்கப்படும். அலகுகள் ஆரம்பிக்கும் பணி அடுத்த நிதியாண்டின் நிதிநிலைமைக்கு ஏற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**31--**

### புளியஞ்சோலையில் நீர்த்தேக்கம்

*10539--டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உப்பிலியாபுரம் தொகுதியிலுள்ள புளியஞ்சோலையில் நீர்த்தேக்கம் அமைத்து பாசன வசதியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புளியஞ்சோலையில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சோலை கொல்லிமலையின் அடிவாரத்திலே இருக்கிறது. அங்கு கோடைக்காலத்திலேகூட தண்ணீர் வற்றுவதில்லை. மழைக்காலங்களில் மழை நீரைத் தேக்கி வைக்க வழியில்லாமல் நீர் வீணாகும் சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அங்கே பெரிய நீர்த்தேக்கத்தினை அமைத்தால் அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். மேலும் அறிவியல் வல்லுநர்கள் ஏற்கெனவே கொல்லிமலைப் பகுதியிலே ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் மின்சாரத் துறையும் இணைய வாய்ப்பிருக்கிறது. நீர்த்தேக்கம் அமைத்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. மேலும், கொல்லிமலையிலே நீர்த்தேக்கம் அமைப்பதால் சுற்றுலாத் துறைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதிக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அங்கே ஒரு பெரிய நீர்த்தேக்கத்தினை அமைத்து அதன்மூலம் பாசன வசதியைப் பெருக்கிட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சோலையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், அந்த நிலத்தை ஆய்வு செய்தபோது அது Fault Zone என்று கண்டுபிடிக்கப்பட்டது. Fault Zone என்று சொன்னால் அணையைக் கட்டினாலும் தண்ணீர் வெளியே வந்துவிடும். அதாவது தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு அந்த மண்ணிற்கு அவ்வளவு பலம் இல்லை. உழல் மண்ணைப்போல இருக்கும். இருந்தாலும், அந்தப் பகுதியிலே ஓர் அணையைக் கட்ட வேண்டுமென்பதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக என்ன செய்யலாம் என்று அரசு யோசித்து தளுகைபாதர்பேட்டை என்கிற ஒரு இடத்திலே ஏரியினை அமைக்கலாமா அல்லது நீர்த்தேக்கம் அமைக்கலாமா என்பது குறித்து அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. ஏரி அமைத்தால் ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சம் ரூபாயாகும். தற்போது இருக்கின்ற நிலைமையில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது குறித்து ஆய்வு செய்கிறபோது 20 கோடி ரூபாய் வந்துள்ளது. அது மேலும் கூடலாம். எனவே, இரண்டில் எதைச் செய்யலாம் என்பது அரசின் ஆய்வில் உள்ளது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. கோ. தளபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**32--**

### மதுரை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்தல்

*11433-- திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 பிப்ரவரி 19

மதுரை விமான நிலைய விரிவாக்கத்திற்கு 60 ஏக்கர் புஞ்சை நிலங்களை மதுரை விமான நிலைய ஓடுபாதை விஸ்தரிப்புக்காக, நில எடுப்புச் சட்டம் 4(1)-இன்கீழ் நில எடுப்பு செய்ய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே சர்வதேச விமான நிலையம் அமைப்பேன் என்று சொல்லி, நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டு வாங்கியவர், இப்போது சட்டத்தை மீறிய செயல்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால், நமது அரசின் தீவிர முயற்சியின் காரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள். மற்றவை எல்லாம் தேவையில்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசின் தீவிர முயற்சியால் இப்போது அந்த விமான நிலையத்தினுடைய விரிவாக்கப் பணி செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெயரைச் சொல்லவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து அந்தப் பணியைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுபடுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு அரசு பரிந்துரை செய்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இராமநாதபுரத்தில் ஒரு விமான நிலையம் அமைப்பதற்கு--ஏற்கெனவே இராமேஸ்வரத்திற்கு இந்து



1999 பிப்ரவரி 19]

யாத்திரிகர்களும், ஏர்வாடிக்கு முஸ்லீம் யாத்திரிகர்களும் போகிற காரணத்தினாலும், சேது சமுத்திரத் திட்டம் அங்கு வருகிற காரணத்தினாலும், அதிகாரிகள் அடிக்கடி அங்கு செல்கிற காரணத்தினாலும், இராமநாதபுரத்தில் ஒரு விமான நிலையம் அமைப்பதற்கு--மாநில சர்க்கார் மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யுமா? ஏற்கெனவே தூத்துக்குடியில் உள்ள விமான நிலையம் செயல்படாமல் இருக்கிறது. சேது சமுத்திரத் திட்டமெல்லாம் வருகிற காரணத்தினால், அதைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு பகுதிகளிலிருந்து விமான நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்கும் அவருடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும், தூத்துக்குடி விமான நிலையத்தைப் பொறுத்தவரை, மாநில அரசு மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. மற்றவற்றை உரிய காலங்களில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள எனது ஓமலூர் தொகுதியில், விமான நிலையம் அமைக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகள் ஆகியும். அது இன்னும் செயல்படாமல் இருக்கிறது. நம்முடைய மாநில அரசு, மத்திய அரசிற்கு வலியுறுத்தி அங்கு விமானப் போக்குவரத்து நடைபெற ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், மாநில அரசு பரிந்துரைதான் செய்யலாம், நடைபெறச் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சொல்லி, அதை நாடாளுமன்றத்திலே வலியுறுத்தி, அதைப் பெறுவதற்கு உதவியாக இருப்பார்களானால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

[1999 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**33--**

**மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்**

**3953*--**திரு ஜி.பி. வெங்கிடு:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*பன்னாரி மாரியம்மன் கோயில் உபரி வருவாயைக் கொண்டு ஒரு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பன்னாரி அம்மன் திருக்கோயில் நம்முடைய தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களிலும், அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலும் இருக்கிற மக்கள் அதிகம் வந்து வணங்குகிற, வருமானம் அதிகம் உள்ள திருக்கோயில் ஆகும். அந்தக் கோயில் உபரி வருமானத்தில் நம்முடைய தமிழக அரசு பெண்களுக்கென்று மகிழ் ஊர்திகளும், ஆட்டோக்களும் தந்து, ஓட்டுநர்களாகவும் நியமிக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கெல்லாம் அந்தத் தொழிலில் சிறப்பான பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தினால், அந்தத் தொழில்களுக்கென்று--ஒரு தனிக் கல்லூரியோ அல்லது நிறுவனமோ அமைத்து அவர்களுக்குப் பயிற்சி தர வேண்டும். அதற்காக பன்னாரி அம்மன் திருக்கோயில் நிதி பெருமளவு உதவும் என்ற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு கல்லூரியை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அறநிலையத் துறையினுடைய பழைய சட்டங்களின்படி கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று பழனியில் மட்டும் இயங்குகிறது; 1981-82 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு, இதுவரைக்கும் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி எதுவும் தொடங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், பன்னாரி அம்மன் கோயிலுக்கு இருக்கிற ஆண்டு வருமானம் 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஆகும். ஒரு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குத் தேவை ரூ. 1.29 கோடி. எனவே 40 விழுக்காடு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுத்துவிட்டு, 40 விழுக்காடு கோயிலினுடைய அன்றாட நடவடிக்கைகளுக்கும், ஆண்டுதோறும் நடக்கிற திருவிழாக்களுக்கும் செலவிடப்பட்ட பிறகு, உபரி நிதி என்பது மிகக் குறைவாகத்தான் இருக்கும். எனவே, ஒரு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்கி ஆண்டாண்டுக்கும் தொடர் செலவினத்தை மேற்கொண்டு, அந்தக் கல்லூரியை நடத்தக்கூடிய வாய்ப்பு அந்தக் கோயிலில் இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு அருள்மிகு கருமாரி அம்மன் கோயிலில் உபரி வருமானம் அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே அந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலம்கூட கோயிலுக்குப் பக்கத்திலே 15, 16 ஏக்கர் இருக்கிறது. அந்த உபரி வருமானத்தைக்கொண்டு ஒரு கலைக் கல்லூரி, ஒரு சுயநிதி கலைக் கல்லூரியாவது தொடங்க அரசுக்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் அரசினர் கலைக் கல்லூரிகள் 65 இருக்கின்றன. அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகள் 167 இருக்கின்றன. சுயநிதி கல்லூரிகள் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்டவை இருக்கின்றன. எனவே, அவற்றிலெல்லாம் இடம் கிடைக்காது மாணவர்கள் இடர்ப்படுகிறார்கள் என்று உறுதியாகத் தெரியுமானால், தங்களுடைய கருத்து ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அறநிலையத் துறையின் மூலம் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் எத்தனை இருக்கின்றன? அவை யாவை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்கள் 5 கல்லூரிகள், 2 தொழில்நுட்பக் கல்லூரிகள், 12 மேல்நிலைப் பள்ளிகள், 10 உயர்நிலைப் பள்ளிகள், 2 நடுநிலைப் பள்ளிகள், 10 ஆரம்பப் பள்ளிகள், 2 மெட்ரிக் பள்ளிகள், காது கேளாதோர், வாய் பேசாதோர் பள்ளி 1, ஆக 44 நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பன்னாரி அம்மன் கோயிலுக்கு ஆண்டு வருமானம் ரூ.1 கோடி வருகிறது என்று கூறினார்கள். எனது தொகுதியிலேதான் பன்னாரி அம்மன் கோயில் இருக்கிறது. ஏற்கெனவே ரூ.10 கோடி அளவில் அந்தக் கோயிலுக்கு பணம் இருக்கிறது. அதனால்தான் ஒரு ஐ.டி.ஐ.-ஆவது ஆரம்பித்துக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தருகிறார். ரூ.10 கோடி எந்த இடத்தில் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஏற்கெனவே அதில் கையிருப்பில் இருக்கின்ற, நிதித் துறையில் இருக்கின்ற ரூ. 4 கோடிதான் இருக்கிறது. நீங்கள் சொல்வதுபோல் ரூ.10 கோடி இல்லை. அது நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு, அதன் வாயிலாக திருப்பணிகள், மற்ற பணிகளுக்குச் செலவிடப்படுகின்றது. எப்போதுமே நிரந்தர வைப்பு எடுக்கப்படுவதில்லை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை



அமைச்சரவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே ஒரு சில கல்வி நிறுவனங்களே நடத்தப்படுவதாக அவருடைய உரையிலே குறிப்பிட்டார்கள். இந்து சமய அறநிலையத்திற்கு கோடிக்கணக்கான சொத்துகள் இருக்கின்றன. வருவாயும் வருகிறது. அவற்றை மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, கிருத்துவர்கள் எப்படி கல்வி, மருத்துவத்திற்கு மிக அதிக அளவிலே தங்களுடைய தொகையினைச் செலவிடுகிறார்களோ, அதைப்போல இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலேயும் கல்வி, மருத்துவத்திற்கு அதிகமாகச் செலவு செய்வதற்கு துறை முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, திருக்கோயிலினுடைய நிர்வாகத்தின் தலையாய கடமையே ஏற்கெனவே இருக்கின்ற 36,253 கோயில்களையும் நிர்வகிப்பதுதான். உள்ளபடியே பார்த்தால் ரூ.1,000-க்கும் குறைவாக வருமானமுள்ள கோயில்கள் 21,732 கோயில்கள்; ரூ.2,000-க்கும் குறைவாக வருமானமுள்ள கோயில்கள் 27,811 இருக்கின்றன. எந்தவகைச் சூழ்நிலையிலும், அங்கேயே அன்றாடம் ஒரு காவலருக்கும், ஒரு அர்ச்சகருக்கும் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையில்கூட இந்தக் கோயில்கள் இல்லை. எனவே, மேலே இருக்கின்ற, வருவாய் அதிகமாக இருக்கின்ற, கோயில்களிலிருந்துதான் பல கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்கு எல்லாம் உதவி செய்யப்படுகிறது. எனவே, திருக்கோயில் நிர்வாகத்தை முதலில் கவனித்துவிட்டுத்தான் பிற பணிகளைச் செய்ய முடியும் என்ற அளவில், மேலும் கல்வித் துறைக்கு என்று தனியாக பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு, கல்வி நிறுவனங்கள் நடைபெறுவதனால் ஏற்கெனவே திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் இருக்கின்ற கல்வி நிறுவனங்களைச் சிறப்பாகப் பேணுவதற்கான வாய்ப்பை மட்டுமே உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டிற்குச் சொன்னால், திருவெண்காட்டிலே இருக்கின்ற கோயிலுக்கு 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் வருவாய் என்பது வெறும் வாயாக இருக்கிறது. எனவேதான், அங்கேயிருக்கின்ற 2 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படையான கழிப்பறை வசதிகள்கூட இல்லாத அளவிற்கு நிலைமை மோசமாக இருக்கிறது. இப்போது அதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. புதியதாக கட்டடங்கள் கட்டப்படுவதற்கு வேறு கோயில்களிலிருந்து வருமானம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

[1999 பிப்ரவரி 19

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. கு. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**34--**

## தொழிலாளர்கள் ஓய்வு இல்லம் அமைத்தல்

*19381--**திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இயற்கைச் சூழல் நிறைந்த மாவட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் ஓய்வு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இயற்கைச் சூழல் நிறைந்த குற்றாலம், வால்பாறை மற்றும் மாமல்லபுரம் ஆகிய மூன்று இடங்களில் ஓய்வு இல்லம் அமைத்து செயல்பட்டு வருகின்றன. மேலும் இயற்கைச் சூழல் நிறைந்த இராமேஸ்வரம், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய மூன்று இடங்களில் ஓய்வு இல்லம் கட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 3 இடங்களில் இருக்கின்றன. தற்போது மேலும் 3 இடங்களில் ஓய்வு இல்லம் அமைக்க ஏற்பாடு செய்து வரும் அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இந்த நேரத்திலே தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலே இரண்டாவது இடத்திலே இருப்பதை தொழிலாளர்கள் அனைவரும் வரவேற்கும் நல்ல வேளையிலே தமிழ்நாட்டிலே சுற்றுலா தலங்கள் இருக்கும் அனைத்து இடங்களிலும் தொழிலாளர்கள் ஓய்வு இல்லம் அமைக்க அரசு முன்வருமா?



999 பிப்ரவரி 19]

தர்மபுரி மாவட்டத்திலே தொழிலாளர்கள் அதிகமாக வருகை தரும் ஒகேனக்கல்லில் இந்த ஆண்டு சுற்றுலா தலம் சிறப்புற அமைய, தொழிலாளர் ஓய்வு இல்லம் அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய 3 ஓய்வு இல்லங்களை சரியாக கவனித்து வரவும், மேலும் 3 இல்லங்கள் கட்டுவதற்கான திட்டமும் நடைமுறையில் இருப்பதால் முதலில் இவற்றைச் சரிவர செய்துவிட்டு பிறகு உறுப்பினர் கேட்டதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா என ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. லா. சந்தானம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**35--**

## நீதிமன்றம் அமைத்தல்

*15728--**திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டத்தை மையமாகக் கொண்ட வாடிப்பட்டிக்கு வட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே ஒவ்வொரு வட்டத்திலும், வட்டத்தின் தலைநகரிலே நீதிமன்றம் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; வருகின்ற காலத்தில் படிப்படியாக அந்த நீதிமன்றங்களை அமைத்துத் தரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனது தொகுதி வாடிப்பட்டி வட்டம் என்பது

[1999 பிப்ரவரி 19

மிகுந்த ஜனத்தொகை அதிகம் உள்ள இடம்; வளர்ந்து வருகின்ற நகரம். எங்களது மாவட்டத்திலே அனைத்து வட்டங்களிலும் இந்த நீதிமன்றங்கள் இருக்கின்றன. எனவே, வாடிப்பட்டி வட்டத்திலும் இந்த நீதிமன்றத்தை அமைப்பதற்கு மீண்டும் அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு அமைப்பதற்கு முன்வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்த கொள்கையின் அடிப்படையில்தான் கடந்த ஆண்டில் ஏறத்தாழ 26 நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில வட்டங்களிலே நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கில்லை என்பது உண்மை. அதற்கான முயற்சி எடுக்கப்படும். நிதி ஆதாரங்கள் சரியாக இருக்கும்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு வாடிப்பட்டியை வாடாதபட்டியாகப் பார்த்துக்கொள்ள அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில், சாத்தான்குளத்திலே 2 ஆண்டுகளுக்கு முன்னால் Civil Court-ம், Criminal Court-ம் வருவதாக Order வந்திருந்தது. கட்டடங்கள் தயாராகிவிட்டன. ஆனால் இதுவரைக்கும் திறக்கப்படாமல் தாமதப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது அந்த Court திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்தில் நீதிமன்றம் அமைப்பதற்கு ஏற்கெனவே அரசு சுமார் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கி 8-6-1998-லே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த நீதிமன்றத்தை திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டிலே நீதிமன்ற வளாகத்திற்காக இடம் கையகப்படுத்தப்பட்டு இப்போது தனியார் ஆக்கிரமிப்பு அதிகரித்து



1999 பிப்ரவரி 19]

வருகிறது. மேலும், திருச்செங்கோடு வட்டம் கோட்டமாக அறிவிக்கப்பட்டு இருப்பதால் Sub-Court அமைப்பதற்கான மதிப்பீடுகளும் தயாராக இருக்கின்ற இந்த நேரத்திலே அங்கே நீதிமன்ற வளாகம் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலேயிருந்து செயற்குறிப்பு வந்த பிறகு அரசால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் Sub-Court ஒன்று நிறுவ வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. இந்த ஆண்டிலாவது அதை உருவாக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, பரமக்குடியிலே Sub-Court அமைப்பது தொடர்பாக வழக்கறிஞர் சங்கத்திலேயிருந்தும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும், மாண்புமிகு உறுப்பினரிடத்திலிருந்தும் வேண்டுகோள் வந்திருக்கிறது. என்றாலும், நிதி ஆதாரம் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் இப்போது அதைத் தொடங்க முடியவில்லை என்றாலும், இதற்காக முயற்சிப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி ஒரு பெரிய தொழில் நகரம்; வளர்ந்து வருகிற வட்டாரம். வாணியம்பாடியில் இதுவரையில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் இல்லை. பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அண்மையிலேகூட நீண்ட நாட்கள் வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தம் செய்து வேலைகளெல்லாம் தேக்கமடைந்திருந்தன. நான்கூட அவர்களைச் சந்தித்து, மாண்புமிகு அமைச்சர் மீதும்

[1999 பிப்ரவரி 19

மாண்புமிகு முதலமைச்சர் மீதும் நம்பிக்கை வைத்து, நான் எடுத்துச்சொல்லி வாங்கித் தருகிறேன் என்று வாக்குறுதி தந்த பிறகு அவர்கள் அந்த வேலைநிறுத்தத்தினை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். எனவே, அருள்கூர்ந்து இந்த ஆண்டிலாவது அதை நிறைவேற்றித் தருவார்களா என்பதை நான் வற்புறுத்திக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்தினுடைய பகுதியிலும் நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பதிலே அரசுக்கு இரண்டுபட்ட கருத்து இல்லை. என்றாலும், நீதித்துறையிலேயிருந்து நாம் எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் கிடையாது. ஒரு காலகட்டத்தில் நீதித்துறைக்காக நாம் எவ்வளவு செலவு செய்தோமோ அந்த அளவுக்கு வருமானமும் வந்தது. ஆனால், இப்போது நிலைமை என்னவென்றால், நீதித்துறையிலேயிருந்து சுமார் 60 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால், செலவு 125 கோடி ரூபாயாக இருக்கிறது. எனவே, இவற்றிலெல்லாம் சில மாற்றங்கள் செய்தால்தான் அரசு விரும்புகின்ற கொள்கையை மிக விரைவிலே துரிதமாகச் செயல்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**36--**

### வனத் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*9605--**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வனத் துறை ஊழியர்கள் தாமாக ஓய்வு பெறும்போது, ஓய்வூதியப் பயன்கள் உடனடியாகக் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாமாக ஓய்வு பெற வேண்டி விண்ணப்பங்கள் தற்போது ஏதும் அரசிடம் வரப்பெறவில்லை. அத்தகைய விண்ணப்பங்கள் பெறப்பட்டால் உரிய விதிமுறைகளின்படி உடன் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே ஓய்வு பெற்று ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படாமல் மேற்குறிப்பிட்ட பிரிவினைச் சார்ந்த யாரும் இல்லை. எனினும் ஏதாவது நேர்வுகளில் ஓய்வூதியப் பயன்கள் கிடைக்க தாமதமாவதாக இருந்தால் அது பற்றிய சரியான தகவல் வழங்கும் பட்சத்தில் தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாத காரணத்தினாலே, சந்தன மரக் கடத்தலைத் தடுப்பது போன்ற பணிகளைச் செய்கிறபோது இடையூறுகள் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே, போதுமான பணியாளர்களையும் அவர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கருவிகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் தற்போது உதவி வனப் பாதுகாவலர் பணியிடங்கள் 8, வனச் சரகர்கள் பணியிடங்கள் 5, வனக் காப்பாளர் பணியிடங்கள் 450, வனக் காவலர்கள் பணியிடங்கள் 393 ஆகிய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. வனக் காப்பாளர்கள் மற்றும் வனக் காவலர்களுக்கான பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்புவதற்கு அரசு கடந்த 2 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் பணியாளர்கள் மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து தடையாணை பெற்றுள்ளதால், பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. எனவே, தடையாணையை நீக்குவதற்காக அரசு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 19

**37--**

**அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுதல்**

***7070--திரு. த. பூவேந்தன் :**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பழனி தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) அரசுக்குச் சொந்தமான தக்க நிலம் கிடைக்கப்பெற்றவுடன் திட்டம் தொடங்க பரிசீலிக்கப்படும்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி சித்த மருந்துவக் கல்லூரிக்கு 38 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. ஆனால் அந்த சித்த மருத்துவக் கல்லூரி சென்னைக்கு மாற்றப்பட்ட காரணத்தினால் அங்கே 38 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலத்தைக் கேட்டு பரிந்துரை செய்து அனுப்பினால், அந்த நிலம் கிடைக்கப்பெற்றவுடன் அதிலே குடியிருப்புகள் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



1999 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**38--**

**வேலூரில் திருமுருக கிருபானந்த வாரியாருக்கு கோட்டம் அமைத்தல்**

***9647--திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் திருமுருக கிருபானந்த வாரியாருக்கு வேலூரில் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தனியார் நிறுவனத்தால் சமாதியுடன் கூடிய மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. எனவே, அரசால் மற்றுமொரு மணிமண்டபம் கட்டும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**39--**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

***5924--டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1999 பிப்ரவரி 19

மேல்மலையனூரிலுள்ள தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்கள் தங்கும் விடுதிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிநிலைமைக்கேற்ப எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி இதுவரையில் கிடையாது. என்னுடைய தொகுதி மக்களாகிய ஆதிதிராவிட மக்கள் நீண்டகாலமாக தொகுதிக்கு ஓர் ஆதிதிராவிடர் நலப் பள்ளி வேண்டும் என்று கோரிக்கையை விடுத்து வருகின்றார்கள். அந்த வகையில் இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் என்னுடைய தொகுதிக்கு ஓர் ஆதிதிராவிடர் நலப் பள்ளி வழங்குவதற்கு முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டது கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஐயப்பாட்டின் காரணமாகக் கேட்கிறார். அவர் முதலில் கேட்டது மாணவர்கள் விடுதி கட்டப்படுமா என்று. ஆனால், இப்போது பள்ளிக்கூடம் திறக்கப்படுமா என்று கேட்கிறார். ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக பழங்குடி மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு மட்டும் உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் நலத் துறையின் பள்ளிகள் தொடங்கும் நடைமுறை தற்போது இல்லை. ஆனால், கடந்த ஆண்டு கல்வித் துறையின் மூலமாக 168 பள்ளிகள் தொடங்கப்பட்டு, ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளில் மட்டும் 14 பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 300 மக்கள்தொகை உள்ள பகுதிகளில் கட்டாயமாக ஒரு பள்ளிக்கூடம் தொடங்கப்படும் என்று அருமையான ஒரு திட்டத்தினை மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மூலமாக தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாகப்



1999 பிப்ரவரி 19]

பள்ளிக்கூடங்கள் திறக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, கல்வித் துறை மூலமாக, உரிய அதிகாரிகள் மூலமாகக் கருத்துருவை அனுப்பினால் கல்வித் துறையால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**40--**

### விருத்தாசலத்தில் விடுதிகள்

*15910--**திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விருத்தாசலத்தில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலத்தில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழர்களால் கட்டப்பட்ட அருள்மிகு விருத்தகிரீசுவரர் ஆலயம் இந்திய அளவிலே யாத்திரீகர்கள் வரக்கூடிய ஆலயமாக விருத்தாசலத்தில் உள்ளது. பக்கத்திலே புகழ்பெற்ற கொளஞ்சியப்பர் திருக்கோவிலும், வீரமாமுனிவர் அவர்களால் கட்டப்பெற்று, பாடப்பெற்ற அன்னை மாதா கோவிலும் இருக்கின்றன. பக்கத்திலே ஜெயங்கொண்டத்திலே பழுப்பு நிலக்கரி ஆலை இப்போது தொடங்க இருக்கின்றார்கள். புகழ்பெற்ற இரண்டு சிமெண்ட் ஆலைகள் இருக்கின்றன. இவையெல்லாம் அகல இரயில் பாதை மூலம் விருத்தாசலத்தில்தான் இணைக்கப்படுகின்றன. மேலும், முக்கிய தலைவர்கள், விருந்தினர்கள் வந்தால் விருத்தாசலத்தில் தங்குவதற்கு இடமில்லை. எனவே, இந்தக் குறைபாட்டினைப் போக்கிட, பக்கத்திலே சுற்றுலா மையங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை

220/61

[1999 பிப்ரவரி 19

செய்து பரிந்துரையில் இதைச் சேர்த்து, அரசுக்குப் பரிந்துரை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நிதி நிலைமையைப் பொறுத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருச்சி பாரதீய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. திருச்சி மாவட்டத்தில் டாக்டர் ஸ்ரீதர் படுகொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. சி. வேலாயுதன், திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிப்ரவரி மாதம் தொடங்கியவுடன் திருச்சி மாநகரத்தினுடைய பா.ஜ. கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஸ்ரீதர் அவர்கள், அவருடைய பீம நகர் Clinic-லிருந்து அண்ணாமலை நகரிலுள்ள தன்னுடைய இல்லத்திற்கு மோட்டார் சைக்கிளில் இரவு 10-30 மணிக்குச் சென்று கொண்டிருந்தபோது ஒரு மர்ம கும்பல் அவரை வழிமறித்து, அவரைக் கண்டந்துண்டமாக வெட்டி கொலை செய்து ஒரு பெரிய நிகழ்ச்சியை நடத்திவிட்டார்கள்.



1999 பிப்ரவரி 19] [திரு. சி. ஞானசேகரன்]

முற்பகல் 10.35

அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்தவுடன், பலயிடங்களிலே மீண்டும் மத வாதம் இங்கே தலை தூக்கியிருக்கிறதா என்கிற ஒரு கேள்விக்குறி எழுப்பப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சியிலே பழனிபாபா முதலிலே கொலை செய்யப்பட்டார். பிறகு மதுரையிலே இராஜகோபாலன், பிறகு பரமசிவம், பிறகு திருச்சியிலே டாக்டர் ஸ்ரீதர் என்று இப்படி ஒரு தொடர் சங்கிலியைப்போல கொலைகள் தமிழகத்திலே ஆங்காங்கே மதவாதத்தை வைத்து எழுப்பப்படுகிறதா என்கிற ஒரு நிலை வருகிறபொழுது இதில் காவல் துறை தமிழகத்திலே என்ன செய்து கொண்டிருக்கிறது? உளவுத் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? கோவை குண்டுவெடிப்பில் ஈடுபட்டிருந்த இன்னும் சில குற்றவாளிகள் கைது செய்யப்படவேயில்லை என்கிற ஒரு செய்தியும் இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே கோவை குண்டு வெடிப்பில் பங்கு கொண்டிருக்கக்கூடிய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டால் இரண்டு இலட்சம் ரூபாய் பரிசளிக்கப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்ட அந்தக் கைதிகளே இன்னும் கைது செய்யப்படவில்லை. அதே கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய சில பேர் இந்தக் கொலையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது உண்மையா?

ஏற்கனவே ஐந்து பேர் இந்த வழக்கிலே கைது செய்யப்பட்டு, அவர்களில் 4 பேர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவரை போலீஸ் custody-யிலே எடுத்து, அவர் மூலமாக இந்த விசாரணையைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே பத்திரிகைகளிலேகூட, சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய தொழிலதிபர் இதுபோன்ற குற்றவாளிகளுக்கு அடைக்கலம் தந்துகொண்டிருக்கிறார்கள், அவர்கள்தான் இந்தக் கொலையைச் செய்யத் தூண்டினார்கள் என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு கொலையைச் செய்பவர்கள் எப்படித் தூக்குத் தண்டனைக்கு உட்படுவார்களோ அதேபோல, கொலையைச் செய்யத் தூண்டியவர்களும், அவர்களுக்கு அடைக்கலம் தந்துகொண்டு, பக்கபலமாக இருந்து கொண்டிருக்கிறவர்களும் நிச்சயமாகக் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். ஆகவே, நாம் கொலையாளிகளை மட்டும், அதிலே யார் கத்தியால் வெட்டினார்கள்,

[திரு. சி. ஞானசேகரன்] [1999 பிப்ரவரி 19

யார் கழுத்திலே வெட்டினார்கள் என்பதைவிட, அதன் பின்னணியிலே இருக்கக்கூடிய கயவர்களைப் பிடிப்பதில், எப்படியாவது மாண்புமிகு முதல்வரவர்கள் காவல் துறையை முடுக்கிவிட்டு, இதை வேரறுக்கவில்லையென்று சொன்னால், இது தொடர் சங்கிலியாக மாறி தமிழகத்தையே உலுக்கக்கூடிய நிகழ்ச்சிகளாக வந்து கொண்டிருக்கும். ஆகவே, நான் நம்முடைய அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், காவல் துறை இன்னும் கொஞ்சம் விழிப்போடு இருக்க வேண்டும். காவல் துறை, உளவுத் துறை போன்றவையெல்லாம் இப்பொழுது செயலிழந்து விட்டனவோ என்கிற அச்சம் நமக்கு இருந்து கொண்டிருக்கிறது. இப்படித் தொடர் நிகழ்ச்சிகள் வரக் கூடாது. அதை முழுக்க முழுக்கத் தடுத்து நிறுத்தி, அதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, இந்தக் குற்றவாளிகள்-கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்திலே ஈடுபட்டவர்களெல்லாம் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை?-- அவர்கள்தான் இந்தக் கொலையிலும் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை முதல்வரவர்கள் கண்டறிந்து, இந்த மத சம்பந்தப்பட்ட கொலைகள் தடுக்கப்பட இனி தமிழகத்திலே, ஜாதியின் பெயராலோ அல்லது மதத்தின் பெயராலோ எந்தவிதமான கலவரங்களும் இருக்கக்கூடாது; பேரணிகளும் இருக்கக்கூடாது என்று சர்வகட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் முழுக்க முழுக்கத் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு, மீண்டும் அமைதி தவழும் ஒரு தமிழகமாக இதை மாற்றியமைக்க மாண்புமிகு முதல்வரவர்கள் போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர், பாரதீய ஜனதா கட்சியினுடைய மாவட்டத் தலைவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இது மிகவும் வருந்தத்தக்கதுதான். தமிழகத்தில் தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையிருக்கிறது. ஏற்கனவே, ரூசோ, ஏழுமலை, பழனிவேல், பரமசிவம், இராஜகோபால், பழனிபாபா போன்ற அரசியல் கட்சித் தலைவர்களும், மதத் தலைவர்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அன்புச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுமாதிரி, உளவுத் துறை செயல்படாமல் இருக்கிறதோ என்ற சந்தேகம், அச்சம் தமிழக



1999 பிப்ரவரி 19] [திரு. இரா. தாமரைக்கனி]

மக்கள் மத்தியில் இருக்கிறது. ஒரு தனிப்பட்ட மனிதனுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையிருக்கிறது. கடற்கரைக்குக் காற்று வாங்க போகக்கூடப் பயமாக இருக்கிறது; பின்னாலேயிருந்து கூலிப்படை எவனாவது வந்து போட்டு தள்ளிவிடுவானோ என்கிற பயம் இருக்கிறது. சர்க்கரை வியாதிக்காரன் நடந்துபோனால், அவனுக்குக்கூடப் பாதுகாப்பு இல்லாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது.

இப்பொழுது ஸ்ரீதர் கொலை வழக்கிலே அல்-உம்மாவைச் சேர்ந்த 4 பேரைக் கைது செய்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு பேரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். டாக்டர் ஸ்ரீதரை அல்-உம்மா இயக்கத்திலே உள்ளவர்கள்தான் கொலை செய்தார்களா என்பது சந்தேகத்திலே இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மத்தியிலே ஒரு பீதி நிலவுகிறது.

முற்பகல் 10-40

ஏதோ மத்திய உள்துறை அமைச்சர் திரு. அத்வானி telephone-ல் பேசியதற்காக, இங்கேயுள்ள காவல் துறை அவசர கோலத்தில் பெயருக்கு அல்-உம்மா மீது பழி போடுவதற்காகக் கைது செய்திருப்பதாகப் பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறது. அந்தப் பகுதியில் ஆர்.எஸ்.எஸ். தொடர்புள்ள சில எம்.எல்.ஏ.க்களையும், அந்தப் பகுதியில் உள்ள மந்திரிகளையும் C.B.,C.I.D. காரர்கள் விசாரித்ததாகவும் தெரிகிறது. இதில் உண்மையான நிலையை அறிய மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி, உண்மையான குற்றவாளி யார் என்று கண்டுபிடிப்பதற்கு C.B.I. விசாரணையை வைக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரை நாடினால்தான் நன்றாக இருக்கும். இந்தக் கொலையை உண்மையிலேயே அல்-உம்மாகாரர்கள்தான் செய்தார்களா என்று தெரியவில்லை. இதுபோன்ற கொலையாளிகளுக்குக் கூலிப் பணம் கொடுப்பவர்கள் யார்? அதுபோன்ற இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிற அந்தப் பெரிய சக்தி யார்? இந்த இயக்கத்தை யார் பின்னால் இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கவேண்டும் என்றால், அதற்கு C.B.I. விசாரணை வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள எல்லா மதக்காரர்களாலும், எல்லா சாதிக்காரர்களாலும்தான்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் சாதிக் கலவரமோ, மதக் கலவரமோ ஒழிக்கப்பட வேண்டுமென்றால் சில விஷயங்களை அரசு செய்ய வேண்டும். இப்போது மதக் கலவரம் என்று எடுத்துக்கொண்டால், ஜிகாத் கமிட்டி மற்றும் அல்-உம்மா அமைப்புகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றுக்குத் தடை விதித்திருக்கிறீர்கள். இதேமாதிரி வேகமாக இருக்கக்கூடிய R.S.S. அமைப்புக்குத் தடை விதித்தால்தானே நன்றாக இருக்கும்? அதற்கும் நீங்கள் தடை விதியுங்கள். தமிழ்நாடு மட்டத்திலாவது அதற்குத் தடை விதித்தால்தான் மதக் கலவரம் முடிவுக்கு வரும். நான் நாட்டின் நலன் கருதி இதைச் சொல்கிறேனே தவிர, அரசியல் நோக்கததோடு பேசவில்லை. அப்படி இருந்தால்தான் முதலமைச்சர் அவர்கள் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் ஒரு சமமான முதலமைச்சர் என்று மக்கள் மத்தியில் நல்ல கருத்தை ஏற்படுத்த முடியும். அந்தக் கருத்து நிலவும். இப்போது மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்களா சபாநாயகர்? திரு. வேலாயுதன் குறுக்கிட்டால் நீங்கள் பதில் சொல்லக்கூடாது. அந்தப் பதிலை நான் அவருக்குச் சொல்ல வேண்டும். நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதனால், வன்முறையாளர்கள் சாதி ரூபத்தில் இருந்தாலும் சரி, மத ரூபத்தில் வந்தாலும் சரி, அவர்களை ஒடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கும்போது, அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். ஆனால் தீவிரவாதிகளுக்கு நீங்கள் கொஞ்சம் பாதுகாப்புக் கொடுக்கிறீர்கள். தீவிரவாதிகளையும். குற்றவாளிகளையும் பிடிப்பதற்குத் தனிப் படை அமைக்க வேண்டும் என்று சொன்னால், நீங்கள் தீவிரவாதிகளையும் குற்றவாளிகளையும் பாதுகாப்பதற்குத் தனிப்படை அமைக்கிறீர்கள். இதுதான் தமிழ்நாட்டின் நிலைமையாக இருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய திரு. ஞானசேகரன் சொன்னார். கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இன்னும் பலபேர் கைது செய்யப்படவில்லை; அவர்களுடைய சதிச்செயலாக இருக்குமோ என்று. உதாரணமாக ஆயிஷா, அவருடைய கணவன் இப்ராகீம் ஆகியோர் அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் என்று



போலீசாரால் அடையாளம் காட்டப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் அவர்களைப் பற்றிய சுவரொட்டி ஒட்டப்பட்டு, அவர்களைப் பிடித்தால் ரூ. 2 லட்சம் என்று சொல்லி விளம்பரம் செய்திருக்கிறார்கள். I.G.-யாக இருக்கும் திரு. காளிமுத்துகூட அறிக்கையெல்லாம் விட்டார். அவர்கள் எல்லாம் போலீசாரால் தேடப்படுகிறவர்கள் என்று அறிக்கை எல்லாம் விட்டார். இப்போது கூடுதல் D.G.P. இராஜகோபால் என்ன சொல்கிறார்? அவர்கள் இந்தக் குற்றவாளிப் பட்டியலில் இல்லை, ஆயிஷா வெடிகுண்டு பெண்மணி அல்ல, அப்பாவிப் பெண் என்று இப்போது சொல்கிறார்கள். அதற்கு ஏன் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பணம் செலவு செய்து விளம்பரம் செய்ய வேண்டும்? ஏன் ஆந்திராவிலும், கர்நாடகத்திலும், இன்னும் பிற இடங்களிலும் தேட வேண்டும்? ஏன் பணத்தை வீண் விரயமாக்கவேண்டும்? ஆயிஷா குடும்பத்தில் உள்ளவர்கள் தி.மு.க. குடும்பம் என்று சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்குத்தான் இந்த அரசு முயற்சி பண்ணுகிறது. அதேமாதிரி சிதம்பரம் பழனிவேல் கொலையிலும்கூட கூலிப்படைத் தலைவன் பகலவன் என்ற தீவிரவாதி ஒருவன் இருக்கிறான். அவனையும் இந்த case-லிருந்து விடுவிக்க முயற்சி பண்ணுகிறீர்கள். அவனும் தி.மு.க. அனுதாபி. இப்படியெல்லாம் இருக்கக்கூடாது. யாராக இருந்தாலும், எல்லா சாதியிலும், எல்லா மதத்திலும் சமூக விரோதிகள், தீவிரவாதிகள், தப்பு பண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். இதில் அரசியல் சாயம் பூசாமல், தப்பு பண்ணியவன் யாராக இருந்தாலும், அவனைக் கண்டுபிடிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, போலீசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த, முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி, அவர்களை நடவடிக்கை எடுக்க விட்டால்தான் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலையாக இருக்கும். இதில் கொலை செய்தவனும் சிபாரிசுக்கு வருகிறான். எல்லாமே சிபாரிசிலேயே இருக்கிறது. முதலமைச்சர் கருணை உள்ளத்தோடு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே சிபாரிசு பற்றி எல்லாம் பேச வேண்டாம். சீக்கிரம் பேசி முடியுங்கள். கருத்தைச் சொல்லுங்கள் என்றால் ஏதோ உரை நிகழ்த்திக்கொண்டு இருக்கிறீர்களே?

**திரு. இரா. தாமரைக்கனி:** கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஆயிஷா, அவளுடைய கணவன் இப்ராகீம் இன்னமும் தேடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். அதையும் நீங்கள் விசாரணை பண்ணவேண்டும். உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மாநில சர்க்கார், C.B.I. விசாரணை நடத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

*முற்பகல் 10-45*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல ஆண்டுகளாக எங்களுடைய இயக்கத்தின் தலைவர்கள் மீது குறிவைத்து தாக்குவது என்பது, குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு ஒன்று என்ற முறையாக நடந்துகொண்டு இருப்பதைப் போன்ற சூழ்நிலை வந்துவிட்டது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி திருச்சி நகர பாரதிய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கும் ஒருசில மாதங்களுக்கு முன்னால் பத்தமடையில் பாரதிய ஜனதா கட்சித் தலைவர் மாடசாமி அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கோவையில் கடந்த வருடம் பிப்ரவரி 14 ஆம் தேதி அத்வானிஜி அவர்கள் வந்தபோது நடைபெற்ற சம்பவங்களுக்குப் பின்னர் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, அதிலிருந்து ஓரளவுக்கு தமிழகத்தில் குற்றவாளிகளைக் கைது செய்ய முயற்சி எடுத்திருப்பது பாராட்டத்தக்க விஷயம்தான். இருந்தாலும், தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே அதற்கு என்ன காரணம் என்று நாம் ஆராயும்போது, இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை.

இன்னொன்று, கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே, நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படும்போதும் சரி, சிறைச்சாலையில் இருக்கும்போதும் சரி, அவர்கள் பெரிய அரசியல் கைதிகளைப் போல நடத்தப்படுகின்றார்கள். சுகபோகமான வாழ்க்கை அவர்களுக்குச் சிறையில் கிடைக்கின்றது. காவல் துறை அதிகாரிகள் சொல்லும்போது, அந்தக் கைதிகளை நாங்கள் கோர்ட்டுக்குக் கொண்டுவரும்போது புதுமாப்பிள்ளை மாதிரி அவர்கள் வருகிறார்கள்.



நாங்கள் என்ன செய்வது என்று வேதனைப்படுகிறார்கள். வெளியிலே இருக்கக்கூடியவர்கள்கூட அந்த அளவுக்கு இருக்கமாட்டார்கள், உடம்பில் அத்தர் போன்ற பல வாசனைத் திரவியங்களைக்கூட பூசிவருகின்றார்கள், Cellular phone கையில் வைத்துக்கொண்டு சிறையிலிருந்து பேசக்கூடிய வாய்ப்புகள் எல்லாம் அவர்களுக்கு இருக்கின்றன என்று காவல் துறை அதிகாரிகள் வேதனைப்படக்கூடிய வகையில் பல இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, இதுபோன்ற கொலையாளிகள், தேசத் துரோகிகள், இவர்களை எப்படி நடத்த வேண்டுமோ அந்த வகையில் நடத்தினால்தான் அவர்களுக்குப் பயம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

இன்னொன்று, சாதாரணக் குற்றத்தை செய்த ஒருவன் கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்தால், அவனைக்கூட அவனுடைய சொந்தக்காரர்கள் பார்க்கச் செல்வது கிடையாது. காரணம் பயம்தான். எங்கே, அவனைப் பார்க்கச் சென்றால், ஒரு வேளை நம்மையும் சந்தேகப்பட்டுவிடுவார்களோ என்று பயந்து பார்க்கச் செல்வது கிடையாது. ஆனால், இந்தப் பயங்கரவாதிகளை, அரசியல் தலைவர்கள் பார்க்கச் செல்கிறார்கள்; பெரிய பெரிய செல்வந்தர்கள் பார்க்கச் செல்கிறார்கள். அப்படிப் பார்க்கச் செல்பவர்களுக்கும் அவர்களுக்கும் அரசு மரியாதை அளிக்கப்படுகிறது என்றெல்லாம் பேச்சு அடிபடுகின்றது. இவையெல்லாம் உண்மைதானா என்பதைக் கண்டறிந்து, இனிமேல் இந்தக் குற்றவாளிகள் வேதனைப்படக்கூடிய வகையில், அவர்களைப் பார்க்கச் செல்பவர்களும்கூட பயப்படக்கூடிய வகையில் கடுமையான நடவடிக்கை இருக்க வேண்டும்.

இன்னொன்று, நீ இப்படிக் கொலை செய்தால் உனக்கு மோட்சம் கிடைக்கும்; உனக்கு நல்ல கதி கிடைக்கும்; உன்னுடைய குடும்பத்தை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்; வழக்கை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம் என்றெல்லாம் தூண்டிவிட்டு, கோடிக்கணக்கான பண உதவிகளைச் செய்கிறார்கள். கோவையில் கைதாகிய ஒரு கைதி பேசியதுகூட பத்திரிகையில் செய்தியாக வந்திருந்தது. ஒருசில நாட்களுக்குள் எங்களுக்குப் பல கோடி பணம் கிடைத்தது என்று பேசியிருந்தார். காவல் துறை அதிகாரிகள்கூட, பணம் கொடுப்பது யார் என்று எங்களுக்குத் தெரியும் என்று சொல்லியிருந்த செய்தியும் வந்திருந்தது. இப்படி, பணம் கொடுக்கக்கூடியவர்களை உண்மையிலேயே கண்டுபிடிக்க

முடியவில்லையா அல்லது கண்டுபிடித்தும் அவர்களைக் கைது செய்ய முடியவில்லையா? ஆகவே, இதன் பின்னணியில் இருக்கக்கூடிய, கிரியா ஊக்கியைக் கைது செய்தாலொழிய, தக்க நடவடிக்கை எடுத்தாலொழிய, தமிழகத்தில் அமைதி திரும்புவது என்பது சிரமம்தான்.

திரு. தாமரைக்கனி அவர்கள் R.S.S. பற்றிச் சொன்னார்கள். R.S.S.-ஐப் பொறுத்தமட்டில், மூன்று தடவை தடைசெய்யப்பட்ட ஸ்தாபனம். மூன்று தடவையும் குற்றம் நிரூபிக்கப்படாமல் நேர்மையான, தேசபக்தி உள்ள ஸ்தாபனம் என்று உச்சநீதி மன்றமே தீர்ப்புச் சொல்லி அது வெளியிலே வந்திருக்கிறது.

இன்னொன்று, பாரத நாட்டில் தமிழகத்தில் மட்டுமல்ல, எந்த இடத்திலேயும் சரி, பொதுவான பிரச்சினை என்று சொன்னால், வெள்ள அபாய காலத்தில் ஆந்திராவில் மோர்வி அணை உடைந்தபோதும், சமீபத்தில் இரண்டு இஸ்லாமிய நாட்டினுடைய விமானங்கள் மோதிக்கொண்டபோதும், கேரளத்தில் அஷ்டமுடிக்காயலில் இரயில் கவிழ்ந்தபோதும், தமிழ்நாட்டில் பஞ்சம், வெள்ளம் போன்ற காலங்களில் எல்லாம் தானாகவே வந்து சேவை செய்த ஸ்தாபனம் என்று கடந்த மத்திய விமானப் போக்குவரத்திற்கான இணை அமைச்சர்--அவர் ஒரு இஸ்லாமியர், அவர் பெயரை மறந்துவிட்டேன்--அவர்கூடப் பாராட்டிய செய்தி பத்திரிகையிலே வந்திருந்தது. மற்ற எந்த அமைப்புகளைப் போலும் அல்லாமல், திடீரென்று ஏற்படக்கூடிய அசம்பாவிதச் சம்பவங்களுக்கு ஓடோடிச் சென்று உதவிடக் கூடிய ஸ்தாபனம் Rashtriya Swayam Sevak Sangh என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, நான் கேட்டுக்கொள்வது, இந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியில் இருக்கக்கூடியவர்களைக் கைது செய்ய வேண்டும்.

சமீபத்தில் எங்களுடைய மாவட்டத்தில், தேங்காய்ப்பட்டணத்தில் தேங்காய் வெடிகுண்டு சிக்கியது. மாண்புமிகு முதலமைச்சர் எங்களுடைய கோரிக்கையை ஏற்று C.B..C.I.D.. விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால், இதுவரை அந்த விசாரணை எப்படி நடைபெறுகிறது, யாரைக் கைது செய்திருக்கிறார்கள் என்ற எந்தத் தகவலும் கிடையாது. தீவிரவாதிகள், அவர்களுடைய பின்னணியில் இருக்கக்கூடியவர்கள், எப்படியாவது, அரசாங்கத்தில் தக்க ஆட்களை வைத்து பேசி தடை செய்து விடுகிறார்களா, அல்லது தாம் தப்புவதற்கு ஏதாவது வழி தேடிக்





கொண்டிருக்கிறார்களா என்ற ஐயப்பாடு பொதுவாக நிலவுகிறது. மற்றபடி மக்கள் ஓரளவுக்கு சுபீட்சமாக வாழக்கூடிய நிலை இருக்கும்போது, இந்தத் தீவிரவாதிகள் பிரச்சினை தமிழகத்தில் பெரிய வேதனையையும், அமைதி இல்லாத சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் அனைவரும் நிம்மதியாக, அமைதியாக, பயமின்றி வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திட, இந்த அனைத்துச் சம்பவங்களையும் விசாரித்து, அனைத்துச் சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்கள்--இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் வெறும் கருவிகளே--யாராக இருந்தாலும் சரி, அவர்களைக் கைது செய்து, கண்டுபிடித்து எந்தப் பெரிய அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, செல்வந்தராக இருந்தாலும் சரி, பொதுமக்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்துவது மட்டுமல்லாமல், இதோடு இந்தத் தீவிரவாதம் தமிழகத்தில் ஒழியக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை முடுக்கிவிட்டு, இதன் பின்னணியைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10-50

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, ஒரு Point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point எல்லாம் கிடையாது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் என்கின்ற பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த முன்னோடி ஒருவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். இத்தகைய வன்முறை நிகழ்ச்சிக்கு இங்கே எடுத்து கூறப்பட்டுள்ள கருத்துக்களின் மைய இழையோடு, நானும் இணைந்து என்னுடைய கண்டனத்தை ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன், மீண்டும் ஒரு முறை இந்த அவையிலும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால்

இத்தகைய பிரச்சினைகளைக் குறித்து பேசுகின்ற அதே நேரத்தில், இதன் தொடர்பாக தமிழகத்திலே ஒரு மத நல்லிணக்கத்திற்கு கேடு பயக்கவும், மதச் சார்பற்ற தன்மைக்கு உலை வைக்கவும், ஒரு சூழ்நிலை உருவாகி விடக்கூடாது என்பதில் நாமெல்லாம் மிகுந்த கவனத்தோடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் ஸ்ரீதர் திருச்சியிலே கொலை செய்யப்பட்டவுடன், போலீஸார் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றாலும்கூட, குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணை முடுக்கி விடப்பட்டு, அந்தத் துறைக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டு, 12 பேர் இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டு இருக்கின்றார்கள் என்று தெரிய வந்ததன் அடிப்படையில், இதுவரையிலே திருச்சி தென்னூரைச் சேர்ந்த அகமத்துல்லா என்பவருடைய மகன் கலிலூர் ரஹ்மானும், இப்ராகிம் என்பவருடைய மகன் முகமது ஃபாரூக்கும், நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த காஜா மொய்தீன் என்பவருடைய மகன் பாதுஷாவும், சாகுல் அமீது என்பவருடைய மகன் ஐ.டி. என்கின்ற தமிமுன் அன்சாரியும் 12-2-1999 அன்று கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். தலைமறைவாகியுள்ள மற்றும் சிலரை கைது செய்ய குற்றப் புலனாய்வுத் துறையினுடைய 4 தனி காவற்படைகள் அமைக்கப்பட்டு, தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நடவடிக்கை ஏதும் இல்லை, காவல் துறை தூங்குகிறது என்றெல்லாம் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் அழகான விமர்சனத்திற்குத் தேவைப்படுவதாக இருக்குமே தவிர, உண்மையிலேயே இந்த அரசு இவற்றையெல்லாம் கண்டிக்கவோ, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்ற முனைப்புடன் முயற்சி எடுக்கவோ, சிறிதும் தயங்கவில்லை என்பதை நடுநிலையாளர்கள் மிக நன்றாகவே உணர்வார்கள்.

நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசும்போது கோவைச் சம்பவங்களில் பல பேர் இன்னும் வெளியிலே இருக்கிறார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை என்ற ஒரு செய்தியைச் சொன்னார்கள். அது மிக மிக தவறான தகவல். 14-2-1998 அன்று கோவையில் நடைபெற்ற சம்பவங்களின் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 191. அதிலே கைது செய்யப்பட்டவர்கள் 174 பேர். பலபேர் கைது





செய்யப்படவில்லை என்று ஞானசேகரன் கூறியது தவறான தகவல். இந்த 174 பேர் கைது செய்யப்பட்டவர்களில், 166 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 28-9-1998 அன்று இந்த 166 பேர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல அதற்கு முன்பு 1997 நவம்பரில் நடைபெற்ற, போக்குவரத்துக் காவலர் செல்வராஜ் வெட்டிக் கொல்லப்பட்ட அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த கலவரத்தில் 18 முஸ்லீம்களும், 4 இந்துக்களும் உயிர் இழந்தார்கள். இதில் பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகள் 13; கைது செய்யப்பட்டவர்கள் 33 பேர். 33 பேரிலே இந்துக்கள் 23 பேர், முஸ்லீம்கள் 9 பேர், கிறித்தவர் ஒருவர். இந்த 13 கொலை வழக்குகளில் 7 வழக்குகளில் புலன் விசாரணையும், 6 வழக்குகளில் நீதிமன்ற விசாரணையும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அதன் தொடர்பாக எந்த நடவடிக்கையும் இல்லை என்று கூறுகின்ற கூற்று உண்மைக்கு மாறானது அல்லது தகவல் சரியாக அறிந்துகொள்ளாமல் சொல்லப்படுகின்ற கூற்று என்பதை நான் இங்கே கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-55

நம்முடைய தாமரைக்கனி அவர்கள் R.S.S. இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்று இந்த அரசுக்கு ஓர் அரிய யோசனை சொல்லி இருக்கின்றார்கள். R.S.S. இயக்கத்தோடு அதிக தொடர்புடைய பாரதிய ஜனதா கட்சிதான் இப்போது இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியினுடைய ஆட்சிக்கு கூட்டணியிலே இருக்கின்றது தாமரைக்கனியினுடைய அ.தி.மு.க. கட்சி என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. எனவே, அந்தக் கூட்டணியில் உள்ளவர்கள் ஏதேதோ நிபந்தனைகளைப் போடுவதற்குப் பதிலாக--கூட்டணியிலே நீடிக்க என்னென்ன நிபந்தனைகளோ போடுகிறார்கள்.--ஆட்சியைக் கலைக்க வேண்டும், வழக்கை இப்படியெல்லாம் திசைத் திருப்ப வேண்டும் என்றெல்லாம் போடுகின்ற அந்த நிபந்தனைகளைவிட, R.S.S.-ஐத் தடை செய்ய வேண்டுமென்கிற ஒரு நிபந்தனையை தாமரைக்கனி கட்சியினுடைய தலைவர் அவர்கள், பாரதிய ஜனதா கட்சிக்கு விதித்து, R.S.S.-ஐத் தடை செய்வார்களேயானால், ஒரு சின்ன மாநிலம், சுண்டைக்காய் மாநிலம், இந்த மாநிலத்திலே மாத்திரம் அல்லாமல், அகில இந்திய

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 பிப்ரவரி 19

அளவில் பாரதப் பெருவெளியில் R.S.S.-ஐத் தடை செய்த கட்சி, அதற்கு முன்னோடியாக இருந்தது, அ.தி.மு.க. கட்சியினுடைய தலைவர் என்கின்ற பெருமை கிடைக்கும். எனவே, என்னிடத்திலே செய்கின்ற சிபாரிசை தாமரைக்கனி அவர்கள், அவர்களுடைய தலைவர் இடத்திலே செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவர் துணிந்து சொல்லக்கூடியவர் எதையும். ஆகவே அவருக்கு அந்த வீட்டிலே இடம் கிடைக்குமேயானால், வழிவிடப்படுமேயானால், சென்று அதை அவர் சொல்ல வேண்டுமென்று அவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற சம்பவங்கள் ஏதோ, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தோன்றிய பிறகுதான் ஏற்பட்டன என்று சொல்வதற்கு இல்லை. கடந்த காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக பழனிபாபா கொல்லப்பட்டதும், அதன் தொடர்ச்சியாக சில காரியங்கள் நடைபெற்றதையும் நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இந்த ஆட்சி வந்த பிறகுகூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பரமசிவம் என்கின்ற ஒரு பேராசிரியர் மதுரையிலே கொல்லப்பட்டார். அந்தக் கொலை வழக்கில் 6 எதிரிகள் கைது செய்யப்பட்டது மாத்திரம் அல்ல, அவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலிலே வைக்கப்பட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் குறிப்பிட்ட பத்தமடை கொலையில் தங்கவேல் ஆச்சாரி என்பவருடைய மகன் இராஜா என்கின்ற மாடசாமியை தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 15 எதிரிகள் கொலை செய்தார்கள். அந்த வழக்கில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள், ஒருவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். மீதமுள்ள இரண்டு எதிரிகள் தேடப்பட்டு வருகின்றார்கள்.

கடந்தகால ஆட்சியிலேகூட, இதுபோன்ற சம்பவங்கள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. அதற்காக அந்தக் கொலை நடத்தியவர்கள் எல்லாம், அ.தி.மு.க.-வினர் என்று தாமரைக்கனியைப்போல நான் அவசரப்பட்டு ஆராயாமல் சொல்லிவிடமாட்டேன். அவர், இந்த கொலைக்கெல்லாம் காரணம் தி.மு.க.-காரர்கள்தான் என்று இங்கே சொன்னார். அது எவ்வளவு அப்பட்டமான உண்மைக்கு மாறான தகவல் என்பதை நாடு மிக மிக நன்றாக அறியும். தி.மு.க.-காரர்களேகூட கொலையிலே மாத்திரம் அல்ல, எந்த வழக்கிலே சம்பந்தப்பட்டாலும் அவர்களை இந்த அரசு விட்டு



1999 பிப்ரவரி 19] [கலைஞர் மு. கருணாநிதி]

வைத்ததில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். மதுரையில் ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்கு முன்பு லீலாவதி என்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு பெண்மணி, கவுன்சிலர் கொல்லப்பட்டார். இதே அவையிலேதான் சொன்னேன். கொலையாளிகள் தி.மு.க.-காரர்களாக இருந்தாலும் நாங்கள் அவர்களை விடமாட்டோம் என்று சொன்னேன். மறுநாளே தி.மு.க.-வினர் அங்கே கைது செய்யப்பட்டார்கள். முத்துராமலிங்கம் என்ற பெயருடைய ஒரு வட்டச் செயலாளர் கைது செய்யப்பட்டு, ஏறத்தாழ இந்த 1½ ஆண்டு காலத்திலே இன்னும் அவர் ஜாமீனில்கூட வெளி வரவில்லை. வெளிவரமுடியாமல், போலீசார் அவ்வப்போது நீதிமன்றத்திலே அவரை ஜாமீனில் வெளியேவிடக் கூடாது என்கின்ற அளவுக்கு வாதாடி வருகிறார்கள்.

அதுபோல தேவக்கோட்டையில் நடைபெற்ற ரூசோ கொலை வழக்கிலும் தி.மு.கழகத்தைச் சேர்ந்த நகரச் செயலாளரே கைது செய்யப்பட்டிருக்கின்றார். எனவே, தி.மு.க. என்பதற்காக அவர்கள் தவறு செய்தால், அவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுகின்ற ஆட்சி இதுவல்ல. கடந்த ஆட்சியில் கொலை செய்தவர்கள் அமைச்சருடைய காரிலேயே போய்க் கொண்டிருந்தார்கள். அதை இந்த அவையிலே நம்முடைய பழனிசாமி போன்றவர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி நண்பர்கள் எல்லாம் அன்றைக்கு எடுத்துக் கூறினார்கள். கொலை செய்துவிட்டு, C.P.M. தொடர்பு உடையவரை கொலை செய்துவிட்டு, குடவாசலில் கொலைசெய்துவிட்டு, அவர்கள் தப்பித்துக்கொண்டது மாத்திரம் அல்ல, வழக்கே இல்லை. இப்போது இந்த ஆட்சி வந்த பிறகுதான் அந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

கடந்த கால ஆட்சியில் 10-10-1994 அன்று மதுரை திலகர் திடல் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் இராஜகோபாலன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு C.B.I.க்கு மாற்றப்பட வேண்டுமென்று மதுரையிலே உள்ள அத்தனைக் கட்சிகளும் வாதாடின. ஆனால், இந்து முன்னணியைச் சேர்ந்த ஒரு தலைவர் C.B.I.க்கு மாற்ற வேண்டாம் என்று சொன்னார். அதன் மர்மம்

யாதோ, நான் அறியேன் பராபரமே; வேண்டாம் என்றே சொன்னார். இப்போது இந்த ஆட்சி வந்த பிறகுதான், 17-7-1996-ல் அந்த வழக்கு C.B.I.க்கு மாற்றப்பட்டது. முதல் குற்றப் பத்திரிகை செப்டம்பர் 1997-லும், கூடுதல் குற்றப் பத்திரிகை ஆகஸ்ட் 1998-லும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கிலே முக்கிய குற்றவாளியான சுபேர் என்பவர் இந்த ஆட்சியிலேதான் கைது செய்யப்பட்டார். 1994-ல் நடைபெற்ற கொலைக்கு முக்கிய குற்றவாளி சுபேர் 11-10-1998-ல் இந்த ஆட்சியிலேதான் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதையும் தாமரைக்கனி போன்றவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன். அதுவும் இராஜமுந்திரியிலே போய் C.B.,C.I.D. போலீசார் அவரைக் கைது செய்தார்கள்.

அதுமாத்திரமல்ல, சென்னையிலே சேத்துப்பட்டில் R.S.S. அலுவலகம் வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டது. R.S.S. இயக்கத்தைச் சேர்ந்த காசிநாதன் உட்பட 11 பேர் அதிலே உயிரிழந்தார்கள்.

கோவையில் சிவா என்கிற சிவகுமார், இந்து முன்னணித் தலைவர் கொலை செய்யப்பட்டார் 5-9-1991-ல்.

4-12-1992-ல் இராமேஸ்வரம் காவல் நிலைய எல்லையில் இந்து முன்னணியைச் சேர்ந்த முனுசாமி என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.

14-4-1995-ல் சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி அலுவலகமே தாக்கப்பட்டது. பைபிள் சண்முகம் என்பவர் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

15-4-1995-ல் சென்னை எழும்பூர் காவல் நிலைய எல்லையில் புதுப்பேட்டை ஹாரீஸ் சாலையில் இந்து முன்னணியைச் சேர்ந்த பாபு கொலை செய்யப்பட்டார்.

16-4-1995-ல் போத்தனூர் காவல் நிலைய எல்லையில் பா.ஜ. கட்சியைச் சேர்ந்த இராஜேந்திரன் கொல்லப்பட்டார்.

3-7-1995 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் காவல் நிலைய எல்லைக்குள் இந்து முன்னணி மாவட்ட அமைப்பாளர் தங்கமுத்து அவர்களுடைய மனைவி தங்கம் என்பவர் கொல்லப்பட்டார்.





5-7-1995 அன்று அதே நாகூரில் முருகன் என்பவரும் 31-12-1995-ல் மேட்டுப்பாளையம் காவல் நிலைய எல்லையில் பா.ஜ.க.-வைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவரும் கொல்லப்பட்டார்கள். இவை எல்லாம் கடந்த கால ஆட்சியிலே உள்ள பட்டியல். நான் அதற்காக இந்தக் கொலை செய்தவர்கள் எல்லாம் அ.தி.மு.க.-வினர் என்று புழுதிவாரித் தூற்றமாட்டேன். ஆனால், தி.மு.க.-வினர் என்று நம்முடைய நண்பர் தாமரைக்கனி சொல்வதைப்போல் ஏதாவது நடந்திருந்தால், அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக யாரையும் கடந்த கால ஆட்சியைப்போல, காப்பாற்றுகின்ற ஆட்சி இந்த ஆட்சியல்ல என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திருச்சி கொலை வழக்கில் இதுவரையிலும் கைது செய்யப்பட்டவர்கள் போக மீதமுள்ளவர்களும் தேடப்படுகின்றார்கள். உரிய நடவடிக்கை இந்த ஆட்சியில் எடுக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்து, தொடர்ந்து இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் இருக்க அனைத்துக் கட்சிகளும் இணைந்து மத நல்லிணக்கக் கூட்டங்களையும், சமூக ஒற்றுமைக்கான கூட்டங்களையும் இப்போது நடத்தி வருகின்றோம். மேலும், இந்த ஆண்டேகூட தீண்டாமை ஒழிப்பு ஆண்டு, மத நல்லிணக்க ஆண்டு என்று இந்த அரசு அறிவித்து, அவ்வாறு செயல்பட்டு வருகின்றது. அதற்கு, மாண்புமிகு உறுப்பினர்களும், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அனைத்துப் பொதுமக்களும், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1999-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடர்கின்றது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் இன்று தொடங்கி வைப்பார்கள். எந்தவொரு மாண்புமிகு உறுப்பினருக்கும் 10 நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதி தரமுடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு என்னுடைய நன்றியினை நான் முதலிலே கூறிக்கொள்கின்றேன். Internet மூலம் உண்மையிலேயே சர்வதேச தகவல் நிலையத்துடன் இணைவதற்காகவும், இங்கிருந்தே நாம் எல்லா வகையிலும் எல்லா



நாடுகளிடமும் உள்ள தொழில், வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் வியாபாரம் போன்றவற்றைத் தெரிந்துகொள்வதற்காகவும் ஒரு நல்ல வசதியினைக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அடுத்து, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் நாட்டில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்காகவும், நலிந்த பிரிவினருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் இந்த அரசு பல வகைகளிலேயும் நல்ல காரியங்களைச் செய்து வருகின்றது; ஏழைகளுக்கும் துணையாக இருந்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையிலேதான் நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு, பீகார் மாநிலத்தில் சென்ற ஆண்டுகூட 65 தலித் மக்கள் கொல்லப்பட்டார்கள்; இந்த ஆண்டு 16 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்; அதிலே 4 பேர்கள் ஒரு வயதுக்குக் கீழுள்ள குழந்தைகள். இப்படிப்பட்ட சூழ்நிலை நாட்டிலே இருக்கும்போது, நாம் இங்கு பாதுகாப்போடு இருக்கக்கூடிய நல்ல நிலைமையிலே, ஆங்காங்கு வேறுவிதமான சில தவறுகள் நடந்து வருகின்றன. அதோடுகூட ஆங்காங்கு ஒன்றிரண்டு கொலைகள் நடக்கின்றன; நான் இல்லை என்று சொல்லவில்லை. அதுகூட இந்த அரசின் மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலேதான் நடக்கின்றதோ என்று எங்களைப் போன்றவர்கள் அஞ்சுகின்றோம்.

பீகாரில் ரன்வீர் சேனா என்ற நிலப் பிரபுக்களுடைய கையாட்களாக கூலிப்படை இருந்துகொண்டு அரிசன மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருப்பதை நான் இந்த நேரத்திலே கடுமையாக, வன்மையாகக் கண்டித்து, மத்திய அரசு இந்தமாதிரி கொடூரமான நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த அவையின் மூத்த உறுப்பினர் என்ற முறையிலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

பீகாரில் இப்படி இருக்கின்ற நிலைமையில், ஆளுநர் உரையிலே பல நல்ல விஷயங்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதில் bore well போடுவது பற்றி சொல்லி இருக்கிறார்கள். எங்கெல்லாம் தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் bore well போட வேண்டும் என்று பல திட்டங்களை எடுத்து வைத்து இருக்கின்றார்கள்.

இருந்தாலும் அந்த bore well போட்டுக் கொடுப்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல், அரசாங்கமே அந்த வேலையைச் செய்துதர வேண்டும்; நிபுணர்களை அனுப்பி எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து அங்கே bore well போட்டுக் கொடுத்து, தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்து, பிறகு அதற்கான பணத்தை உடனடியாக அவர்களிடமிருந்து வசூல் பண்ணாமல், கொஞ்சம் கொஞ்சமாக 10, 15 ஆண்டுகளுக்குள்ளாக, கிஸ்தி வசூல் செய்கின்றோமே அந்த அடிப்படையில் அதை வசூல் செய்தால்தான் ஏழை எளிய மக்கள் பயன்பெறக்கூடிய அளவிற்கு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது விவசாயிகளுக்குத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டமும் கொண்டு வந்திருக்கின்றோம். பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைக்கும் விவசாயிகள் விவசாயமே செய்வதற்கு ஏற்ற நிலங்களாக இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொல்லி இருக்கின்றேன். ஒவ்வொரு இடத்திலும் 30 ஏக்கர்களை ஒன்றாக நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; அந்த 30 ஏக்கரிலே--அது தரிசு நிலம் யாருக்குமே சொந்தம் இல்லாத நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அந்தமாதிரி நிலங்களை எடுத்து அதிலே பெரிய ராட்சத கிணறை உண்டாக்கி, அதன்மூலம் அங்குள்ள நிலம் இல்லாத ஏழை மக்களுக்குத் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, pump set வைத்துக் கொடுத்து, அவர்களே விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்போமேயானால், எல்லோருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நான் இதைப்பற்றி ஏற்கெனவே பலமுறை சொல்லி இருக்கின்றேன். அப்படிப் பலமுறை சொல்லியும்கூட, எந்த அரசாங்கமும் இதைக் காதிலே போட்டுக் கொள்ளாத ஒரு நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மிக்க வருத்தத்தோடு இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து NABARD SCHEME நபார்டு வங்கியிலே இருந்து நாம் நிறைய பணத்தைக் கடனாக வாங்கி மக்களுக்குப் பல துறைகளின் மூலம் நல்லது செய்து வருகிறோம். அப்படிச் செய்து வரும்போது, நபார்டு வங்கி மூலம் செய்யப்படும் திட்டங்களை ஒருங்கிணைப்புத் திட்டம் என்ற அடிப்படையிலே செய்து கொடுப்போமேயானால்



அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்கின்றேன்.

பாரதீய ஜனதா அரசினால் இப்போது ஏழை மக்கள், அரிசன மக்கள் பிற மாநிலங்களிலே உண்மையிலேயே மிகவும் ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஒருமுறை நான் பத்திரிகையில் படித்தேன்; நம்முடைய இந்திரா காந்தி அவர்களுக்கும், நேரு குடும்பத்திற்கும் ஒரு அவப் பெயர் ஏற்படுத்தக்கூடிய அளவில், மேனகா காந்திகூட அவருடைய அறைக்குச் செல்லும்போது, அங்கே டாக்டர் அம்பேத்கருடைய படம் இருக்கின்றது: அந்தப் படத்தை எடுத்து வெளியே எறியுங்கள்; அதன் பிறகுதான் நான் அறையிலே அமருவேன் என்றெல்லாம் சொல்லி இருக்கின்றார்கள். அதை நான் பத்திரிகையிலே படித்துப் பார்த்து உண்மையிலேயே கண்ணீர் விட்டேன். அவர்கள் யாருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள்? நேருவினுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நேருவினுடைய பரம்பரையிலே வந்தவர்கள் அரிசன மக்களைப் பற்றி கீழ்த்தரமாக நினைக்கக்கூடிய ஒரு தருணம் ஏற்பட்டுவிட்டது என்பதை அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன், வருத்தமுற்றேன், கண்ணீர் விட்டேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளெல்லாம் நாட்டில் வருவது உண்மையிலேயே மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 11-10*

மூன்று அடுக்கு முறையைக் கொண்டு வந்தோம். மூன்று அடுக்கு முறையைக் கொண்டு வந்தால் என்ன பிரயோசனம்? சென்ற முறைகூட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். பஞ்சாயத்துத் தலைவர், யூனியன் கவுன்சிலர்கள், மாவட்டத் தலைவர்கள் என்று மூன்றடுக்கு முறையைக் கொண்டு வந்தோம். இந்த முறை தற்போது மிகவும் வருந்தக்கூடிய நிலையில் உள்ளது. நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்கள், இவர்களுக்குக் கொஞ்சம் அதிகாரம் இருக்கிறது. இரண்டாவது அடுக்கிலே உள்ள கவுன்சிலர்களுக்கு ஒருவிதமான அதிகாரமும் இல்லாமல் அவர்கள் சும்மா உட்கார்ந்து, எழுந்து போகிறார்கள். சென்றமுறை நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே சொன்னார்கள். எப்படியும்

பஞ்சாயத்து கவுன்சிலர்களுக்கு அதிகாரம் வழங்கக்கூடிய நிலையில் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றார்கள். ஆனால் நடைமுறையில் அவர்களுக்கு இன்னும் எந்தவிதமான அதிகாரமும் வழங்கப்படவில்லை. வேண்டாமென்றால் கலைத்து விடுங்கள். கவுன்சிலர்கள் வேண்டாமென்றால் அந்த அமைப்பைக் கலைத்து விடுங்கள். ஏதாவது அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுங்கள். பஞ்சாயத்துக் கூட்டம் நடக்கும்போது இந்தக் கவுன்சிலர்கள் சென்றால், அவர்கள் அங்கே உட்காருவதற்கே அனுமதி மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் இதையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து வெள்ளத் தடுப்பு. 104 பாலங்களைக் கட்டுவதற்காக ரூபாய் 360 கோடியை ஒதுக்கி நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று, வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. என்னுடைய தொகுதியில் 2 பாலங்கள் கட்ட வேண்டிய நிலையிருக்கிறது. அந்த 2 பாலங்களில் ஒன்றினைக் கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது, 35 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பாலம் கட்டப்படவில்லை. டெண்டர் விட்டிருக்கிறார்கள். இன்னும் அந்த வேலையை எடுத்துக் கொள்ளவில்லை. மஞ்சளாற்றில் வத்தலப்பட்டிக்கும் ஆடுசாபட்டிக்கும் இடைப்பட்ட பாலம் அது. அதனை விரைவாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலேயிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். ரெங்கப்பநாயக்கன்பட்டிக்கும் இராமையநாயக்கன்பட்டிக்கும் இடையில் வைகையில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அன்றைக்கு 2¾ இலட்சம் ரூபாய்க்கு estimate போட்டார்கள். ஆனால் இப்போது 67 இலட்சத்திற்கு மேல் செலவாகும். அந்தப் பகுதியில் உள்ள 30,000 மக்களும் வத்தலகுண்டிற்கு வரவேண்டுமென்றால் 25, 30 கிலோ மீட்டர் சுற்றித்தான் வரவேண்டும். இந்தப் பாலத்தைக் கட்டினால் அந்த 30,000 மக்களும் 4, 5 கிலோ மீட்டர் தூரத்திலேயே வத்தலகுண்டிற்கு வரமுடியும். அங்குள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்குவதற்கும், குழந்தைகள் படிப்பதற்கும் இது ஏதுவாக இருக்கும். ஆகையால் இந்த



ரெங்கப்பநாயக்கன்பட்டி-இராமையநாயக்கன்பட்டி பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தடுப்புச் சுவர். பலமுறை நான் இது பற்றி பேசிவிட்டேன். இந்த சபையிலே நான் பேசி கிழவியாகிவிட்டேன். ஒன்றும் நடக்கவில்லை. வெள்ளத் தடுப்புச் சுவர் வேண்டுமென்று பல முறை பேசியிருக்கிறேன். எங்கள் ஊரில் மழை பெய்யாது. நிலக்கோட்டையில் மழை பெய்யாது. வருசநாட்டுப் பகுதியிலே மழை பெய்யும். ஆண்டிப்பட்டியிலே மழை பெய்யும். கம்பம் பகுதியிலே மழை பெய்யும். அங்கு பெய்கின்ற மழை நீரானது வேகமாக வந்து நிலக்கோட்டை தொகுதியிலே உள்ள அத்தனை பகுதிகளையும் அடித்துக் கொண்டு போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த முறைகூட நானும், நம்முடைய அமைச்சர் மாண்புமிகு பெரியசாமி அவர்களும் நீந்திக்கொண்டு செல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. சித்திரகல்நத்தம், மல்லயம்பட்டி, பறையப்பட்டி, சக்கிலியப்பட்டி, குன்னுவாரன்கோட்டை போன்ற ஊர்களெல்லாம் முழுமையாக அடித்துக் கொண்டு போகப்பட்டன. தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று பலமுறை பேசியிருக்கிறேன். அப்போது 1 கோடியே 23 இலட்சம் ரூபாய்க்கு estimate போட்டு அனுப்பினார்கள். ஆனால் அங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்றால், கரையைப் பலப்படுத்த வேண்டுமென்றால் இப்போது 10 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகும். பணம் செலவாவதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவலைப்படாமல், பணம் செலவானாலும் பரவாயில்லை, மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அளவிலே இந்தத் திட்டத்தினை ஏற்று நடத்தி, அந்தப் பகுதி மக்கள் நிம்மதியாக இருக்க உதவிட வேண்டும். கிட்டத்தட்ட 1,200 வீடுகளுக்கு மேலே முழுமையாக கடந்த வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அந்த வீடுகளிலிருந்து சிறு சாமான்கள்கூட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. உயிர்ச் சேதம் இல்லை. ஆகையால் அவர்கள் அத்தனை பேரும் இடம் பெயர்ந்துள்ளார்கள். விரைவில் அத்தனை பேர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

முற்பகல் 11-15

அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது என்ன செய்ய வேண்டுமென்றால், 50 ஆயிரம் ரூபாய் என்றால், அதிலே 30 ஆயிரம் ரூபாயை மானியமாகக் கொடுங்கள். பாக்கி 20 ஆயிரம்

ரூபாயைக் கடனாகக் கொடுங்கள். வட்டியில்லாத கடனாகக் கொடுங்கள். அப்படிக் கொடுத்து அவர்களுக்கு அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்வீர்களேயானால், அந்த மக்களுக்கு இந்த அரசு பாதுகாப்பு அளித்ததாக அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கருதுவார்கள். இல்லாவிட்டால் மனம் நொந்து போய், வேதனைப்பட்டுக்கொண்டு சாகக்கூடிய நிலைமைதான் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களைப் போன்ற சாதாரண மக்களுக்கு, எங்களைப் போன்ற ஏழை மக்களுக்கு, எங்களைப் போன்ற பாதுகாப்பில்லாத மக்களுக்கு. பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். எனவே, கரையை உயர்த்துவதற்குப் பணம் ஒதுக்க வேண்டும். வீடு கட்டிக் கொடுக்கப் பணம் ஒதுக்க வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்களால் முன்மொழியப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. உபயதுல்லா அவர்களால் வழிமொழியப்பெற்றுள்ள ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையைப் பொறுத்த அளவில் ஓர் அரசினுடைய திட்டங்களையும், கொள்கைகளையும்--சாதனைகளையும் வெளிப்படுத்துகின்ற ஒரு அறிக்கை என்று சொல்வார்கள். ஆனால் இந்த ஆளுநர் உரையானது--நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் பின்னாலே இந்த நாட்டு மக்களுக்கு இந்த அவையின் மூலமாக அளிக்கவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு ஒரு முன்னோடியாக, "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பதைப் போல, பல்வேறு குறிப்பிடத்தக்க அம்சங்களை இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், நாட்டின் ஒற்றுமை,



ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம் ஆகிய இவற்றை கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக நிலைநாட்டி, தொடர்ந்து நிலைநாட்ட எடுத்து வரப்படுகின்ற நடவடிக்கைகள் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில், பெரும்பான்மை சமுதாயத்திற்குத் தரவேண்டிய மரியாதையைத் தந்து, சிறுபான்மை சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இந்த அரசு, உரிய நேரத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, இந்த நாட்டிலே சாதி மோதல்கள் உருவாகாத வண்ணம் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்ற அந்த நிலையை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதைப்போல

இருட்டறையில் உள்ளதடா உலகம்-சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே

என்ற ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில் சாதி அரசியல் நடத்தும் கீழ்த்தரமான, நாகரீகமற்ற, சுயநல அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் இந்த அவையின் மூலம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில் அதை எவ்வளவு தூரம் இந்த அரசு காப்பாற்றுகிறது என்பதைப் பற்றி நேற்றையதினம் தினமணி பத்திரிகையில் வந்த ஒரு தலையங்கச் செய்தியை நான் குறிப்பிட விரும்புகிறேன். 'பாபர் மசூதி இடிப்பு நாளன்று அசம்பாவிதம் நடைபெறாமல் இருக்க மேற்கொண்ட விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல பலனை அளித்தன' என்ற பாராட்டுகளை பத்திரிகைகள் வழங்கும் அளவுக்கு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல நேரங்களில், பல இடங்களில் ஓர் ஆதங்கத்தை வெளியிடுவார்கள். 'இந்த நாட்டில் ஒரே துறையில் புலியும், மானும் தண்ணீர் அருந்துகிற நிலையை உருவாக்க முடியாவிட்டாலும், மானும், மானுமாவது தண்ணீர் அருந்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்' என்று சொல்லி வந்த நம்முடைய முதல்வர் அவர்கள், இந்த நாட்டில் மானும் மானும் மட்டுமல்ல, புலியும் மானுமே தண்ணீர் அருந்த முடியும், இன்னும்

சொல்லப்போனால், மனுதர்மத்தின்படி உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலைமையை மாற்றி, எல்லோரையும் ஒரே தண்ணீரை சமத்துவபுரத்தில் குடிக்க வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்தத் திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-20*

இன்னும்கூட சொல்ல வேண்டுமானால் நம்முடைய மைய அரசு அறிவித்த விலைவாசி உயர்வு மாநில மக்களைப் பாதிக்காத அளவுக்கு 160 கோடி ரூபாய்க்கான மானியச் சுமையை நமது மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தொழில் வளர்ச்சியில் 5-ஆவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. ஏகபோக கொள்முதல் திட்டத்தை அறிவித்து விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற 50 ரூபாய் ஊக்கத் தொகையை நமது அரசு அளிக்கிறது.

இதோடு. மிகப் பெரிய பணியான தூர் வாரும் பணியை எங்களுடைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, கூட்டுப் பொறுப்போடு இரண்டு அமைச்சர்கள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளின் எதிர்பார்ப்பை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள், கடன், வட்டி, அபராத வட்டி என்று தாங்க முடியாத ஒரு நிலைமையில் மிகுந்த எதிர்பார்ப்போடு இப்போது இருக்கிறார்கள். முழுமையாக கடனை செலுத்தினால், வட்டியையாவது தள்ளுபடி செய்வார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றித்தர ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சித் துறையைப் பொறுத்த அளவில் நகர்ப்புறங்களைப் போல் கிராமப்புறங்களுக்கும் குடிநீர் இணைப்பு அளிக்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு



போதுமான அதிகாரங்களை வழங்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 'நமக்கு நாமே திட்டம்' 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' ஆகியவை தமிழக கிராமங்களிலே மறுமலர்ச்சியை உண்டாக்கி இருக்கின்றன என்பதை நான் மனதார வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் நான் சொல்ல விரும்புவது, நடக்கப் பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளி, உயிர்காக்க சுகாதாரம் ஆகிய அனைத்தையும் முழுமையாக மக்களுக்குக் கிடைக்கின்ற வரையில் ஓயமாட்டேன் என்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் 'ஓயாத உழைப்பாளி' என்ற பாராட்டைப் பெற்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் நிறைவேற்றப்படுகிற திட்டங்கள் பாராட்டுக்குரியதாகும்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்த அளவில் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் என்னுடைய குத்தாலம் தொகுதியில் எரிவாயு மின் சுழலி மூலமாக மிகப் பெரிய அளவில் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அடிகோலியவர் முன்னாள் மத்திய அமைச்சர் நம்முடைய மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள். அந்தத் திட்டம் 'Letter of Commitment', வழங்கல் உத்தரவு வழங்கப்பெறுகின்ற நிலையில் பெட்ரோலியத் துறை அமைச்சராக மாண்புமிகு வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, எங்களுடைய வேண்டுகோளை ஏற்று பலமுறை வலியுறுத்தி அந்தத் திட்டத்திற்கான வழங்கல் ஒப்பந்தத்தைப் பெற்ற நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இடத்தை நேரிலே சென்று பார்த்து, அதிகாரிகளிடம் கலந்து பேசி ஆவன செய்து கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேம்பாடு. எந்த ஒரு சமுதாயத்திற்கும் கல்விதான் திறவுகோல் என்று கல்வியைப் பற்றிச் சொல்வார்கள். இந்த நாட்டில் 14 வயது வரை உள்ள அனைவருக்கும் கல்வி உண்டு என்ற ஒரு உத்தரவாதம், இந்த நாட்டினுடைய மூல சட்டத்தில், ஆதாரச் சட்டத்தில், அடிப்படைச்

சட்டம் என்று சொல்லப்படுகின்ற அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் அது எவ்வளவு தூரம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறது என்பது விவாதத்திற்கு உரியதாக இருக்கிற நேரத்திலே தமிழகத்திலே, புதுமையாக ஒன்றாம் வகுப்பு முதல், 5 ஆம் வகுப்பு வரை இலவசப் பாட நூல் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கின்ற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், தொடக்கக் கல்வி நிலையங்கள் இல்லாத ஊர்களே இருக்கக்கூடாது என்ற வகையில் திட்டமிட்டுச் செயல்படுகின்ற இந்த அரசுக்கு என்னுடைய முழுமையான பாராட்டுதல்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'I am the mighty State' என்று ZAAR அரசன் சொன்னதுபோல, நாங்களே அரசாங்கம், அரசாங்கம் மக்களுக்காக அல்ல, எங்களுக்குத்தான் என்ற உணர்வோடு கடந்த அரசாங்கம் செயல்பட்டது. அதனுடைய விளைவு இப்போது தனி நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறக்கூடிய வகையில் 46 வழக்குகள், 100 முறைக்கு மேல் வாய்தா, பெரும்பாலான வழக்குகளில் முதன்மை நோக்கிலேயே 'Prima Facie' குற்றத்தின் தன்மை இருக்கிறது என்று நீதிமன்றங்களின் கண்டுபிடிப்பு இருக்கிறது. இவற்றையெல்லாம் தடுப்பதற்காக, ஊழலற்ற நிர்வாகத்தைக் கொடுப்பதற்காக, என்னதான் ஆட்சியைக் கையிலே வைத்து இருப்பவர்கள் நேர்மையாக இருந்தாலும் செயல்படுத்துகின்ற அதிகார வர்கத்தை ஊழலற்றவர்களாக மாற்றுவதாக அறிவித்து, ஊழலற்ற நிர்வாகத்தை செய்வோம் என்ற அறிவிப்பை, உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழகத்தைப் பொறுத்த அளவில், 'Madras is the pioneer State in communal representation' என்று சொல்வார்கள். சமூக நீதிக்கு அடித்தளமாக இருந்த மாநிலம், இந்த மாநிலத்திலிருந்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற ஒரு கோரிக்கை, சமூக நீதிக்கான இட ஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை பாராட்டப்படக்கூடிய ஒன்று.



முற்பகல் 11-25

இன்னும்கூட, நம்முடைய தாய்மொழியான தமிழ்மொழியை அரசமைப்புச் சட்டத்திலேயிருக்கிற, எட்டாவது அட்டவணையிலே இருக்கிற அனைத்து மொழிகளோடு, இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக்க வேண்டும், அனைத்து மொழிகளுக்கும் அந்தத் தகுதி இல்லாவிட்டாலும், எங்கள் தாய்மொழிக்கு அந்தத் தகுதி உண்டு, முதலில் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, இன்னும்கூட Classical language செம்மொழி என்கின்ற அந்தத் தரத்திற்கு நம்முடைய மொழி உயர்த்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்பு, மாநில அரசினுடைய பொறுப்பு, இவற்றிற்கிடையில் மாநில அரசின் எண்ணத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் நிலையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை நான் பாராட்டுவதோடு, என்னுடைய பேச்சின் இறுதியாக நான் குறிப்பிட்டு, விடைபெற விரும்புவது, இந்த நாட்டைப் பொறுத்த அளவில், கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நாட்டில், மாநில சுயாட்சி என்கின்ற அந்தக் கோரிக்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் கோட்டு உருவமாக, தன்னிடத்திலே வழங்கிவிட்ட அந்தக் கொள்கையை இப்போது இந்திய நாட்டினுடைய அரசியல் அரங்கத்தில் நடமாடவிட்டிருக்கிற மிகப் பெரிய பெருமைக்குச் சொந்தக்காரர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், மாநில சுயாட்சி வேறு விதத்திலே கேட்கப்படுகிற பிரிவினை என்று ஒரு நேரத்திலே சொல்லியவர்கள், மாநில சுயாட்சி தேவைதானா என்று கேட்டவர்கள் இப்போது அகில இந்திய ரீதியில் எப்படியெல்லாம் இந்தக் கூட்டாட்சித் தத்துவத்தில் மாநில சுயாட்சியைப் பெறமுடியும் என்ற அளவிற்கு, ஒரு எண்ண ஓட்டத்தைப் பெறக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலையை இந்திய நாட்டினுடைய அரசியல் அரங்கத்திலே உருவாக்கியிருக்கிற ஒரு மிகப் பெரிய அரசியல் தத்துவம் மாநில சுயாட்சித் தத்துவம். இது ஒரு அரசியல் கட்சியினுடைய கொள்கை அல்ல, இது ஒரு அரசியல் கட்சியினுடைய கோரிக்கை அல்ல, இது ஒரு அரசியல் கட்சியினுடைய தத்துவம் என்ற வகையில், இப்போது இந்திய நாட்டிலே உலவவிட்டிருக்கிற மிகப்பெரிய பெருமை நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். அதை ஒரு நிகழ்ச்சி மூலம் சுட்டிக்காட்டி முடிக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய வளர்ச்சியும் தோற்றமும் 'The Rise and Emergence of D.M.K.' என்கின்ற ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையிலே உத்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஸ்நே பிரவாரஸ்டோகி என்கிற ஒரு அம்மையார்--தன்னுடைய ஆய்வுக் கட்டுரையிலே--குறிப்பிடுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உணர்வு எவ்வளவு தூரம் இந்தியா முழுவதும் வியாபிக்கப்போகிறது என்று சொல்கிறபோது சொல்கிறார்,

"The D.M.K. may choose to confine its activities to the States of Tamil Nadu and Pondicherry."

திராவிட முன்னேற்றக் கழகம் அதன் நடவடிக்கைகளை தமிழ் மாநிலத்தோடும், பாண்டிச்சேரியோடும் நிறுத்திக் கொள்ள நினைக்கலாம்.

"But the D.M.K.'s spirit is bound to engulf each and every State of the Indian Union."

இந்தியாவிலேயிருக்கிற அனைத்து மாநிலங்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உணர்வு சூழ்ந்து கொள்ளப்போகிறது என்கின்ற ஒரு மிகப் பெரிய மாநில சுயாட்சித் தத்துவத்தை இந்த நாட்டிற்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களால் படைக்கப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரையை மனமார வாழ்த்தி, பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டுக்கான மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நன்றி கூறும் தீர்மானத்திலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மொழியை மைய அரசிலே ஆட்சிமொழியாக ஆக்குவதற்கும், சமூகநீதி கண்ட, சமதர்ம சமுதாயம் அமைத்திட இந்த அரசு மேற்கொண்டு வருகிற முயற்சிகளுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் தன்னுடைய வரவேற்பையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது. அதேபோல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அரசு வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு முறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை ஆராய்வதற்காக குழு ஒன்று அமைத்தது. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த அந்தச் சமுதாய மக்களுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். அந்தக் குழுவிலே தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்கு இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மக்கள் தலைவர் ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம் இந்த அவையிலே, அந்தக் குழுவினுடைய அறிக்கைகளையும் பரிந்துரைகளையும் அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து இந்தக் கூட்டத் தொடரிலேயே முடிவுகளை அறிவிப்பதாக அறிவித்தார்கள். அவற்றையும் வரவேற்று, அந்தப் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழில் துறையும், விவசாயத் துறையும் இன்றியமையாத துறைகளாகும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற ஆரம்பநாள் முதலே தொழில் துறையிலே பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதில் நல்ல ஆர்வம் காட்டிவருகிறது. அதே நேரத்தில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சிறுதொழிற்சாலைகள் விஷயத்திலும் நாம் இன்னும் சற்று அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக சேலம், தருமபுரி,

ஈரோடு மாவட்டங்களிலே சாயப் பட்டறைகள் சமீப காலமாக மூடிக்கிடக்கின்றன. மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்த வழக்கினால், நீதிமன்ற உத்தரவினால் அவை மூடப்பட்டாலும், இந்தப் பிரச்சினையை நாம் ஒரு சமுதாய கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும். இந்தச் சாயப் பட்டறைகள் குறித்த பிரச்சினைகளை ஆராய்வதற்காக என்னுடைய மரியாதைக்குரிய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அமைச்சரவையிலே இருந்த முன்னாள் அமைச்சர் திரு. பூவராகவன் தலைமையிலே குழு ஒன்றை அமைத்து அதில் மாண்புமிகு உறுப்பினர் வேலூர் ஞானசேகரன், தலைவாசல் இராணி, மற்றும் என்னையும் உறுப்பினர்களாகப் போட்டார்கள். நாங்கள் அந்தப் பகுதியிலே சென்று அந்தப் பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்தோம். அந்தப் பகுதியிலே இது குடிசைத் தொழிலாக செய்து வரப்படுகிறது. குமாரபாளையம், பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் இந்த சாயத் தொழில் நடைபெறுகிறது. மொத்த முதலீடே 25,000 ரூபாய்தான் இருக்கும். கழிவு நீரை அங்கேயுள்ள சாக்கடைகளில் அவர்கள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவர்களுக்குத் தடை விதித்திருக்கிறது. இந்தச் சாயப் பட்டறைகளுக்குத் தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதென்பது இயலாத காரியம். அதற்கு அதிக முதலீடு தேவைப்படும். இந்தத் தொழில் மூடப்பட்டதால் அங்குள்ள நெசவாளர்கள் வாழ்வதற்கு வழியின்றி தங்களுடைய “கிட்னி” போன்ற உடலுறுப்புகளை எல்லாம் அண்டை மாநிலமான பெங்களூருக்குச் சென்று விற்று அவர்களுடைய மனைவி, மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு அவல நிலையை நாங்கள் எல்லாம் பார்த்தோம். அந்த அளவுக்கு ஒரு கொடுமையான சூழ்நிலை. மாசு கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றுதான். அதேநேரத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளையும் மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே 6 கோடி ரூபாய் செலவிலே River Action Plan என்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. சாணார்பாளையம் என்ற இடத்திலே நிலமெல்லாம்கூட ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே பொது சுத்திகரிப்பு நிலையத்தை அரசின் மூலமாக ஏற்படுத்தி அந்தச் சாயப் பட்டறைகளின் கழிவு நீரை அங்கே விடுவதற்கு ஏற்பாடு செய்தால் அந்தத் தொழிலும் நடக்கும், மாசும் கட்டுப்படுத்தப்படும். எனவே அரசு அந்தத் தொழில் தொடர்ந்து நடக்க நடவடிக்கை எடுத்து



அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இந்தக் குடிநீர் வடிகால் வாரியமும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும் ஒருங்கிணைப்பு இல்லாமல் இருக்கின்றன. இரண்டு துறைகளும் இணைந்து இந்தத் திட்டத்தைத் தீட்டினால் அந்தப் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் பயன்பட ஏதுவாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஜவ்வரிசித் தொழில். ஜவ்வரிசி தொழில் என்பது விவசாயத்தைச் சார்ந்த தொழில். சேலம், ஈரோடு, தருமபுரி, தென்னாற்காடு மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி அதிகமாக இருக்கிறது. இங்கிருந்து ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்பட்டு இந்தியா முழுமைக்கும் supply செய்யப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டு மூட்டை ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 180 ரூபாய் வரை விலை இருந்தது. ஆனால் இந்த ஆண்டு 40 ரூபாய் அளவுக்கு விலை குறைந்துவிட்டது. அதற்குக் காரணம் ஜவ்வரிசி ஆலைகள் மூடப்பட்டதுதான். விவசாயத்தைச் சார்ந்த தொழிலாக இருப்பதால் அதையும் நாம் மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்புத் தேடி நகரங்களுக்கும், பெருநகரங்களுக்கும் வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அங்கே விவசாயத்திலே அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லாததுதான். விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச விலையாக நியாயமான விலையை நிர்ணயித்து இளைஞர்களை விவசாயத்திலே ஊக்குவித்தால் வேலைவாய்ப்பும் பெருகும், அதேநேரத்திலே விவசாய உற்பத்தியும் பெருகும். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டிற்காக 25,000 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே இளைஞர்களை பெருமளவு ஈடுபடுத்தி விவசாய விளைபொருளை உற்பத்தி செய்ய வேண்டும்.

அதுபோல கரும்புக்கு குறைந்தபட்ச விலையாக நியாயமான விலையை நிர்ணயம் செய்திருப்பதைப்போல, நெல்லுக்கும், மரவள்ளிக்கிழங்கிற்கும் இன்னும் மற்ற விவசாயப் பொருட்களுக்கும் குறைந்தபட்ச விலையாக நியாயமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதைப்போலவே, இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற பல்வேறு நல்லத் திட்டங்கள். அரசுப் பேருந்துகளைப் பார்க்கும்போது பொதுமக்கள் மனதிலே அடிபட்டுப் போய்விடுகிறது. கிராமப்புறங்களிலே சென்று பார்த்தோமேயானால் பேருந்துகள் மிகவும் மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. காயலாங்கடையில் விற்பதற்குக்கூட இலாயக்கு இல்லாதப் பேருந்துகளில் பொதுமக்கள் இப்போது பயணம் செய்து கொண்டிருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆட்சியிலே போக்குவரத்துத் துறையிலே கொள்முதல் கொள்கையால் ரூபாய் 50/-க்கான பொருளை 100 ரூபாய் கொடுத்து வாங்கிவிட்டார்கள். அப்போது 50 ரூபாய்தான் நட்டம் ஏற்பட்டது. ஆனால், இந்த ஆட்சி மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருப்பதன் காரணமாக, கொள்முதல் செய்யாமல் இருப்பதால், 50 ரூபாய் பொருள் இல்லாததால், 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பேருந்துகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அரசு இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, பேருந்துகள் நல்ல முறையில் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதுபோலவே, சாலைகளை எடுத்துக்கொண்டால், கிராமப்புறங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செய்யக்கூடிய சாலைகள் போடப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையாலும் சாலைகள் போடப்படுகின்றன. ஆனால், இடையிலே இருக்கக்கூடிய Other district roads என்ற அந்த இடைப்பட்ட சாலைகள் போடுவதற்கு நிதி ஒதுக்கிடுவதே இல்லை என்பதுபோல் தெரிகிறது. ஆகவே அவை போடப்படாமல் மிகவும் பழுதடைந்த நிலையில இருக்கின்றன. ஆகவே, அந்தச் சாலைகளையும் அரசு செப்பனிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சட்டம்-ஒழுங்கு. சட்டம்-ஒழுங்கை எடுத்துக்கொண்டால், எங்கள் சேலம் மாநகராட்சியிலே குறைந்தது மாதத்திற்கு ஒரு கொலை, கொள்ளை நடந்து வருகிறது. சென்ற வாரம் கூட ஒரு காவலாளி வங்கியிலே கொலை செய்யப்பட்டு, அங்கே கொலை முயற்சி நடந்திருக்கிறது. அதற்கு முன்பு ஒரு கொலை. இப்படித் தொடர்ந்து 10 நாட்களுக்கு ஒரு முறை கொலை, கொள்ளை சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்தக் கொலைகளுக்கெல்லாம் பின்னணி, அங்கே இருக்கக்கூடிய சந்தனக் கடத்தல்காரர்கள் என்று



மக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே, இந்த விஷயத்திலே அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதைப்போலவே கள்ளச் சாராயம் சேலம் மாவட்டத்திலே பரவலாக இருக்கிறது. குறிப்பாக, சேலம் மாநகராட்சிப் பகுதியில், பள்ளப்பட்டி காவல் நிலைய சரகத்திலே கள்ளச் சாராயம் இல்லை. அங்கே இருக்கக்கூடிய ஆய்வாளர் கடுமையான நடவடிக்கை எடுத்து, அவற்றை அப்புறப்படுத்தியிருக்கிறார். அதற்கு 10 அடி தள்ளி இன்னொரு காவல் நிலைய எல்லையிலே சாராயம் இருக்கிறது. பள்ளப்பட்டியிலே இருக்கக்கூடிய ஆய்வாளரால் முடியும் என்றால், பக்கத்தில் இருக்கிற ஆய்வாளரால் ஏன் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை? ஆகவே, இதற்குக் காரணம் என்ன என்பதை அரசு கண்டறிந்து அங்கு கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கும் சமூக விரோத நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மதுபானக் கடைகள். மதுபானக் கடைகளுக்கு ஓரிடத்திலே அனுமதி பெற்றுவிட்டு, அவர்கள் நான்கைந்து கிளைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) சேலம் நகரில்கூட, ஓரிடத்திலே அனுமதி பெற்று, கடைகளை நான்கைந்து இடங்களிலே கிளைகள் போல வைத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே விற்கக்கூடிய சரக்குகளை எப்படிக் கொள்முதல் செய்கிறார்கள்? அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவற்றை கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கிறது? அங்கே போலி மதுபானங்கள் விற்கப்படுவதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே, இவை எல்லாவற்றையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, உள்ளாட்சித் துறை......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மதுபானங்கள் ஏலம் விடுகிற நேரத்திலே, எந்தக் கடை என்று குறிப்பிட்டு, எந்த எண்ணிலே ஏலம் எடுக்கிறார்களோ, அங்கேதான் மதுபானங்கள் விற்க வேண்டுமே தவிர, அதன் கிளைகளை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி தருவதில்லை. அரசாங்கத்திற்குத் தெரியாமல் அப்படி எங்கேயாவது கிளைகள் நடத்தப்படுமானால், மாண்புமிகு உறுப்பினர் அரசினுடைய

கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. எங்களது மாவட்டத்திலே பல்வேறு கடைகள் இந்தமாதிரி நடத்தப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், அங்கே இருக்கக்கூடிய காவல் துறை துணைக் கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுத்திருக்கிறேன். ஆனால், இதுவரை நடவடிக்கை ஒன்றும் இல்லை. தேவைப்பட்டால், அமைச்சரிடமும் இதுகுறித்து விளக்கமாக எழுதித்தர தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதைப்போலவே உள்ளாட்சித் துறை. உள்ளாட்சித் துறையிலே குடிநீர் வழங்கல் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கிராமப்புறங்களில் மக்கள் குடிநீர்ப் பிரச்சினை இன்றி மிகவும் நிம்மதியாக இருக்கிறார்கள். ஆனால், இந்தக் குடிநீர் இணைப்பு வழங்கும்போது, ஓமலூர் பேரூராட்சியில் ஒரு இணைப்புக்கு 8 ஆயிரம் ரூபாய் வரை செலவாவதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். 4 ஆயிரம் ரூபாய் கட்டணமாகவும், மேற்கொண்டு 4 ஆயிரம் ரூபாயும் கொடுத்தால்தான் குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஓமலூர்-காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்.

அதைப்போலவே கட்டட மையம். சேலம் மாவட்டத்திலே, 1994-ஆம் ஆண்டிலிருந்து 1997-ஆம் ஆண்டு வரை கட்டட மையம் என்ற ஒரு அமைப்பு இருந்து, அரசாங்கத்தினுடைய கட்டடங்களைக் கட்டுவதற்கு அந்த மையம் பயன்பட்டு வந்தது. அதிலே கடந்த ஆட்சியைப்போல, கட்டடம் கட்டாமலேயே ரூபாய் 5 கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனுடைய தொடர் நடவடிக்கை என்ன என்பதை மக்கள் அறிவதற்கு ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். 5 கோடி ரூபாய்க்குமேல் பொதுமக்களுடைய பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அந்த விஷயம்



அமுக்கப்பட்டுவிட்டதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே, அதனுடைய நடவடிக்கையையும் அரசு தெரியப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையில் பல்வேறு சிறப்பான கருத்துக்கள் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதிலும் குறிப்பாக மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து, மாநில அரசின் பொறுப்புகள் மிகவும் கூடியுள்ள இந்த காலகட்டத்தில், மத்திய அரசிடமிருந்து கூடுதலாக நிதியுதவி பெறவேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்து எடுத்த எடுப்பிலேயே சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனைப் பொறுத்தவரையில், நம் அரசினுடைய, குறிப்பாக நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுடைய கருத்தினைப் பிரதிபலிப்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருதுகிறோம்.

*முற்பகல் 11-40*

பல்வேறு பிரச்சினைகள் பற்றி இங்கு குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே பல்வேறு நலத் திட்டங்கள் மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு, அது மக்களுக்கு சென்றடைகிறது என்பது பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது. குறிப்பாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டப் பகுதிகளில், காவிரிப் பாசன வடிகால் பகுதிகளிலே தூர் வாருகிற பணிகளை கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருப்பது விவசாயிகளுடைய வாழ்க்கையிலே பாராட்டத்தக்க ஒன்றாக இருக்கிறது. அதனால் மிகப்பெரிய அளவில் வெள்ளச் சேதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய விவசாயிகள் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாவது தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அந்தத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்குரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள்,

தொடங்கப்பட இருக்கின்றன. இதன் மூலமும் காவிரிப் பாசனப் பகுதியினுடைய விவசாயம் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுவது தடுக்கப்பட்டு, மாறாக நல்ல பலனை அளிக்கும்.

இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியை 98 இலட்சம் டன் அளவிற்குப் பெருக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். மேலும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, புன்செய் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக, 10,000 ஹெக்டேர் நிலத்தில், விவசாயம் செய்வதற்கான முயற்சிகளை எடுத்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இந்தமாதிரியான திட்டங்களின் மூலமாக விவசாயத்தின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத ஒரு நிலை தொடர்ந்து இருக்கிறது. இது மத்திய அரசின் பொறுப்பில், இருப்பதால் என்னதான் இப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கான வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், புயல், வறட்சி மாறி, மாறி ஏற்பட்டுக்கொண்டிருப்பதன் காரணமாக விவசாயிகளுடைய வாழ்க்கை மோசமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. விவசாயிகள் பெற்றிருக்கும் கூட்டுறவுப் பயிர்க் கடன்களாலே மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். குறிப்பாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளைப் பொறுத்தவரையில், இதிலே கட்சி, ஜாதி, மதம் என்றெல்லாம் இல்லாமல், அனைவருமே எதிர்பார்க்கக்கூடிய ஒன்று, இந்த ஆண்டு எப்படியாவது அவர்கள் பெற்றிருக்கக்கூடிய விவசாயக் கூட்டுறவுக் கடன்களுக்கு நிவாரணம் கிடைக்கும், தள்ளுபடி கிடைக்கும் என்பதுதான். இதிலே பல்வேறு சிக்கல்களும் இருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, இருக்கின்ற நிலைமைகளை கருத்திலே கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனத்தை செலுத்தி விவசாயிகளுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான ஆய்வு செய்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க



வேண்டுமென்றும் நான் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலேயும் சரி, இந்தியாவிலேயும் சரி, பலகோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளில் நஷ்டம் ஏற்படும்போது அவற்றிற்கு நிவாரணம் வழங்குகின்ற முறைகள் இருக்கின்றன. அவர்கள் பெற்றிருக்கிற கடன்கள்கூட வராக்கடன் என்று பற்று எழுதி அதனைத் தள்ளுபடி செய்கிற சூழ்நிலை இருக்கிறபோது, விவசாயிகள் பெற்றிருக்கிற கடன்களுக்கும், அவர்களுடைய பொருளாதார சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறை வளர்ச்சியிலே நம்முடைய தமிழகத்தின் நிலைப் பற்றி சொல்லப்பட்டிருப்பது பாராட்டக்கூடிய ஒன்று. பல்வேறு வெளிநாட்டு மூலதனங்கள் இங்கே வந்ததன் காரணமாகப் பல தொழில்கள் தொடங்கப்பட்டு, தமிழகத்திற்கு ஒளியூட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கே இருக்கக்கூடிய தொழில்கள் நசிக்கப்படுவதற்கான முயற்சிகள் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. குறிப்பாக, அசோக் லேலண்டின் உற்பத்தி அநேகமாக 10 சதவிகிதமாகக் குறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மேலும் குறைந்து மூடவேண்டிய அபாய நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. காரணம், ஏற்கெனவே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, Standard Motors தொழிற்சாலையும், M.R.F. டயர் போன்ற தொழிற்சாலைகள் T.I. சைக்கிள் தொழிற்சாலையும் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல், நல்ல முறையில் செயல்படுகின்ற தொழில்கள் நசிந்துவிடுகின்ற அபாயத்தைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நாடாளுமன்ற தொகுதியினுடைய எண்ணிக்கையை, அதாவது 40 நாடாளுமன்ற தொகுதிகள் பாண்டிச்சேரி உட்பட உள்ளதை, 33 ஆகக் குறைப்பதற்கான கருத்துரு இருப்பதாக அறியப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே ஒரு சிறப்பிற்குரிய பணியை நாம் செய்து இருக்கின்றோம். குடும்பக்கட்டுப்பாட்டிலே, இந்தியாவிலேயே சிறப்பிற்குரிய பணியை

நிறைவேற்றிய மாநிலம் தமிழகம் என்ற பாராட்டைப் பெற்றிருக்கிறது. அதிலே நம்முடைய சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களோடு செயல்படுகிற ஆட்சி இருக்கிற காரணத்தினாலே. இது சிறப்பாக நடைபெறுகிறது என்ற காரணத்தினாலேயோ என்னவோ, குடும்பக்கட்டுப்பாட்டுக்கு பாராட்டைச் சொல்லி, நம்முடைய நாடாளுமன்ற தொகுதிக்கும் குடும்பக் கட்டுப்பாட்டை விதிப்பதற்கான முயற்சி நடைபெறுகிறதே, அப்படி இருக்குமானால், அது தடுக்கப்பட வேண்டும். 39, 40 நாடாளுமன்றத் தொகுதிகளாக இருப்பவை 50 ஆக ஆக்கப்பட வேண்டுமேயொழிய, அதைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிற கருத்தைப் பரிசீலித்து, அதற்கு நம்முடைய மாநில அரசின் மூலம் அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்; அப்படிப்பட்ட முயற்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது நம்முடைய மாநிலத்திற்கு ஒரு தண்டனையாக அமைந்துவிடக் கூடாது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

அடுத்தாக, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அறிக்கையிலே சுட்டிக்காட்டி சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்கிறபோது, நம்முடைய தமிழகத்தில் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, கிராமங்கள்தோறும், நகரங்கள்தோறும், குடிநீர்ப் பிரச்சினையே இல்லை என்ற அளவிற்கு மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருப்பது பாராட்டிற்குரிய ஒன்று. அந்தப் பாராட்டுதலோடு, கூடுதலாகவே, நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருப்பது மிகச் சிறப்பிற்குரிய ஒன்று. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில் அது சிறப்பாக நடைபெறுவதற்கான முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதற்காக நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, நான் ஏற்கெனவே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே 2, 3 கருத்துக்களைத்தான் வலியுறுத்தி சொல்லி இருக்கிறேன். குறிப்பாக, நம்முடைய தமிழகத்தில் ஆண்டுகொண்டிருக்கிற திராவிட கட்சிகள், மாறி மாறி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள். இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே இருககிற திராவிட கட்சிகள் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்புவதற்காகத் தனித் துறையை தொடங்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்கெனவே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே வலியுறுத்திச் சொன்னேன். அதைப் பொருத்தமான முறையிலே செய்வதற்குரிய அந்த ஆழ்ந்த சிந்தனையுடைய நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு, பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்புவதற்காக தனித் துறையைக் கண்டிப்பாகத் தொடங்க வேண்டும். காரணம், இப்போது வளர்ந்து வருகிற சமுதாய சூழ்நிலைகள், அரசியல் சூழ்நிலைகள், பல்வேறு கருத்துக்களைப் பார்க்கிறபோது, இந்தக் கருத்துக்கள் ஏனோ மங்கிப்போய் விடுமோ என்ற அபாயம் இருப்பதாக நான் கருதுகிறேன். இந்தக் கருத்துக்கள் மேலும் புத்தொளிபெற வேண்டும். அதற்குரிய முயற்சிகளை எடுப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் துறையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நந்தனாருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று சொல்கிறேன். இதிலே சில அடிப்படையான கருத்துக்களும், கோரிக்கைகளையும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அவருக்குத் தனி நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும். அதேபோல், விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் விவசாய உயர் மட்டக் குழு அமைத்து இருந்தது. விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி அந்தக் குழு அமைக்கப்பட்டிருந்தது. அதேபோல், மீண்டும், விவசாய உயர் மட்டக் குழு, விவசாய சங்கப் பிரதிநிதிகளைக் கொண்டு அமைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அ. துல் நாசர்.

*திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் அறிக்கையிலே, இன்றைக்கு வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றவாறு கம்ப்யூட்டர் இனங்களிலே, தமிழக அரசு முழு கவனத்தையும் செலுத்தியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல, அந்தக் கம்ப்யூட்டர் இனங்களின் வாயிலாக Internet இணையங்கள் போன்றவற்றை நிறுவும்போது, அவற்றின் வாயிலாக 1½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று இந்த அரசு உறுதியளித்திருப்பதை எண்ணும்போது, படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களின் சார்பாக எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, முஸ்லீம் சமுதாயம் மற்றும் அனைத்து சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் குறைந்தது 20 சதவிகிதம் அளவிற்கு, வசித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, கல்வியில் இடம் என்ற அடிப்படையிலும், வேலைவாய்ப்பிலே இடமளிக்கின்ற வகையிலும், மிகவும் படுகீழ் நிலையில் இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் தமிழகத்தில் இருக்கக் கூடிய அரசு வேலைவாய்ப்புகளில், குறிப்பாக முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 1½ சதவிகிதம்கூட இல்லை என்ற ஒரு நிலை தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 11-50

அதேபோல் கல்வியிலும், 10-ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் என்று பார்க்கும்போது அவர்களுடைய நிலை 30 சதவிகிதத்திற்கும் கீழே இருக்கின்றது. பட்டப் படிப்பு என்று பார்க்கின்றபோது மிகக் கீழான நிலை இருக்கிறது. அதாவது அதை அறுதியிட்டுக்கூட சொல்ல முடியாத நிலை இருக்கிறது. இப்படி கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் பின்தங்கிவிட்ட இந்தச் சமுதாயத்தின் மீது தமிழக அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்று சொன்னால் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பின்தங்கியிருக்கின்ற எந்த ஒரு சமுதாயத்தையும் கைதூக்கிவிடுவது அரசின் கடமை என்ற



அடிப்படையிலே இந்தச் சிறுபான்மை சமுதாயத்திற்குக் குறைந்த பட்சம் தமிழக அரசு 10 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அளித்து, அவர்களைக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னேறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கின்ற சட்டமன்றத்திலே அல்லது நாடாளுமன்றத்திலே ஒரு சட்டத்தை, சிறுபான்மையினர் நலனுக்காக இயற்றப்படக்கூடிய ஒரு சட்டத்தை, உச்ச நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோகூட தடுத்து விடமுடியாத நிலை இருக்கின்றது. இன்றைக்குத் தமிழக அரசு மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் ஆதரவோடு இயங்குகின்ற இந்த நேரத்திலே இந்தச் சட்டத்தை இயற்றித் தருமாறு நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கடந்த 1997 நவம்பரிலே நடந்த கலவரத்திற்குப் பிறகு, தமிழகத்திலே அல்-உம்மா மற்றும் ஜிகாத் கமிட்டி போன்ற இயக்கங்கள் எல்லாம் தீவிரவாத இயக்கங்கள் என்று சொல்லி நாம் தடை விதித்தோம். அதையெல்லாம் முழு மனதோடு நாம் வரவேற்கின்ற இந்த நேரத்திலே, இப்படிப்பட்ட இயக்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த இந்து முன்னணி போன்ற சில இயக்கங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து தீவிரவாதத்தை, தமிழகத்தில் மத வெறியை, தங்களுடைய 'மேடைப் பேச்சுக்களின் வாயிலாகவும், பட்டிமன்றங்கள் என்ற அடிப்படையிலே ஆபாச மன்றங்களை எல்லாம் நடத்தி, மக்களின் உணர்வுகளைத் தூண்டி, சிறுபான்மை மக்களுக்குத் தாங்கள் இந்த நாட்டிலிருந்து புறக்கணிக்கப்படுகின்றோமோ, அச்சுறுத்தப்படுகின்றோமோ என்ற மன நிலையை உருவாக்கிவிட்ட காரணத்தினால், இதைப் பயன்படுத்தி, சிலர் தீவிரவாத எண்ணங்களை இளைஞர்கள் மத்தியிலே தூண்டிவிட்ட காரணத்தினால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** On a point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து முன்னணி இயக்கம் இதுவரைக்கும் எந்த இடத்திலேயும் ஆபாசப் பட்டிமன்றங்கள் நடத்தவில்லை. எங்களது தலைவர்கள் கொலை செய்யப்படக்கூடிய நேரத்திலே வேண்டுமானால் எங்காவது வேகப்பட்டு ஒருசில வார்த்தைகள் பேசியிருக்கலாமே தவிர, ஆபாசப்

பட்டிமன்றங்களையோ அல்லது மற்ற சமயங்களில் மோசமாகப் பேசுவது போன்றோ இதுவரைக்கும் எங்கும் நடத்தியது கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இந்து முன்னணியின் சார்பாக சில ஆபாசமான சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள், பேசிய விவரங்கள், எங்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்தினர் போற்றிப் புகழ்கின்ற பல பெரியவர்களைப் பற்றி, நபிகள் நாயகத்தைப் பற்றி, கதீஜா அம்மையாரைப் பற்றி மிக ஆபாசமாகவும், திராவிடர் கழகத்தினுடைய தலைவராக இருந்து மறைந்த அன்னை மணியம்மையாரைப் பற்றியும் ஆபாசமாக வெளியிடப்பட்ட பல துண்டுப் பிரசுரங்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை திரு. வேலாயுதன் அவர்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆபாசப் பட்டிமன்றங்கள் என்பது தமிழக முதல்வர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல காமத்தில் மிஞ்சி இருப்பவர் கதீஜாவா, மணியம்மையா, மேரியா என்ற பல பட்டிமன்றங்கள் இவர்கள் நடத்தியது எல்லாம் மிக நடுநிலையாளராக இருக்கக்கூடிய வேலாயுதன் அவர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இது தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைவருமே உணர்ந்த ஒன்றுதான். அப்படிப்பட்ட இந்து முன்னணியையும், மற்ற கட்சிகளையும் நீங்கள் தடை செய்யும்போதுதான் நிச்சயமாக இந்த நாட்டிலே மதவெறி மாய்க்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிற் துறையிலே நமது தமிழகம் இரண்டாவது இடத்திற்கு வந்திருப்பதாக கவர்னர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மூடிக்கிடக்கின்ற



தொழிற்சாலைகளை எல்லாம், Dunlop Tyres மற்றும் Standard Motors போன்ற தொழிற்சாலைகளை எல்லாம் திறப்பதற்கு இந்த அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல நெசவாளர்களுக்கு 30 சதவிகிதம் கைலிகளுக்காக தள்ளுபடி வழங்கப்படுகிறது. ஆனால் இந்த தள்ளுபடிகள் எல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்குச் சரியான முறையில் பயன்படவில்லை என்பதுதான் உண்மை. எனது தொகுதியிலே பெருவாரியான நெசவாளர்கள் இருக்கின்றார்கள். அங்கு கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக்கூடிய கைலிகள் எல்லாம் சரியான முறையிலே விற்பனை ஆகாமல் இன்றும் தேங்கித்தான் கிடக்கின்றன. நாங்கள் அதைப்பற்றி பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே வற்புறுத்திப் பேசியிருக்கிறோம். இலவச வேஷ்டி சேலைகள் திட்டத்திலே அந்த இலவச வேஷ்டி சேலைகளோடு கைலியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். கைலியையும் சேர்த்து மக்களுக்கு வழங்கும்போது நிச்சயமாக அந்த நெசவாளர்கள் பயன்பெறுவார்கள். நெசவாளர்களுடைய கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள, தேங்கிக் கிடக்கக்கூடிய கைலிகள் எல்லாம் விற்பனை ஆகும். அந்த வகையில் நெசவாளர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்ற முடியும்.

அதேபோல தமிழகத்திலே இப்போது 102 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியிலே இருக்கக்கூடிய பி.முட்லூர்--சி.முட்லூருக்கு இடையேயான ஒரு பாலம் மிக நீண்ட நாட்களாக, 45 வருடங்களுக்கு மேலாக மக்கள் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய பாலம். அந்தப் பாலம் கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டத்திலே வருகிறது. அந்த கிழக்குக் கடற்கரைச் சாலை வேலை கடலூர் வரை முடிந்திருக்கிறது. தொடர்ந்து அந்த வேலையைத் தொடங்கி, வருகின்ற நிதியாண்டிலேயே அந்தப் பாலத்தை அமைக்க அடிக்கல் நாட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சென்ற டிசம்பர் மாதம் வெள்ளம் ஏற்பட்ட நேரத்திலே எனது தொகுதியிலே ராதாவளாகம், தெற்கு பிச்சாவரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாய நிலங்கள் எல்லாம்

பெரும் பகுதி மூழ்கி, மிகவும் சேதமுற்று, விவசாயிகள் எல்லாம் மனம் உடைந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை. அவர்கள் பலமுறை சென்று அதிகாரிகளைச் சந்தித்து கேட்டு இருக்கின்றார்கள். நானும் அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லியும் இதுவரை அந்த நஷ்ட ஈடு அந்த விவசாயிகளுக்குச் சென்று சேரவில்லை. அந்த விவசாயிகளுக்கு உதவித் திட்டங்கள் சென்று சேர்வதற்கும், நஷ்ட ஈடு கிடைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நம்முடைய அரசு 1997 நவம்பர் 29-ந் தேதி ஏற்பட்ட கோயம்புத்தூர் கலவரம் சம்பந்தமாகவும் பிறகு ஏற்பட்ட வெடிகுண்டு நிகழ்ச்சிகள் சம்பந்தமாகவும் கோகுலகிருஷ்ணன் என்ற நீதிபதி தலைமையிலே ஒரு Commission அமைத்திருக்கிறது. அந்தக் Commission அறிக்கையும் சமர்ப்பித்து அது சட்டமன்றத்திலே வைக்கப்பட்டது. அதை நான் படித்துப் பார்த்தேன். நிச்சயமாக அந்த அறிக்கையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என்ற கருத்து எனக்கு இருக்கிறது. அதேபோன்று பரவலாக எல்லோருடைய மத்தியிலும் அந்தக் கருத்து நிலவுகிறது. ஏனென்று சொன்னால் 29-ஆம் தேதி கலவரம் நடந்தபின் நாங்கள் டிசம்பர் 2ஆம் தேதி கோயம்புத்தூருக்கு அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்ல சென்றிருந்தபோது அங்கிருந்தவர்கள் அன்று எங்களிடம் சொன்னார்கள். பால் வண்டி காலையில் வருகின்றபோது பால் வாங்குவதற்காக ஓடிச் சென்ற சிறுவர்களையும், நடுத்தர மற்றும் வயதானவர்களையும் பால் வண்டியிலிருந்து இறங்கிய காவல்துறையைச் சார்ந்தவர்கள், Uniformகூட அணியாமல் சாதா Pant Shirt-டோடு வந்து துப்பாக்கியால் சுட்டுத் தள்ளிய சம்பவம். அதுகூட கோகுலகிருஷ்ணன் அறிக்கையிலே நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதுபோல் உக்கடம் பகுதியிலே அயூப்கான் என்பவர், காவல் துறையினுடைய அத்துமீறல்களையும், அராஜகத்தையும் கண்டு பொங்கி எழுந்து, ஓடி வந்துகொண்டிருந்த மக்களைத் தடுத்து நிறுத்தி அவர்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்த அந்த நேரத்திலே அவரைப் பார்த்து அங்கிருந்த காவல்துறை உயர் அதிகாரி, ** என்பவர் அவரைச் சுட்டுத் தள்ளுங்கள் என்று உத்தரவிட்டதாக

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அங்கிருந்தவர்கள் அன்றைக்கு எங்களிடம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சிகூட இந்த கோகுலகிருஷ்ணன் அறிக்கையிலே நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல காவல் துறையினரும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சிறிய நடைபாதை வியாபாரிகள் கடைகளை எல்லாம் அடித்து நொறுக்கி அவர்களே சமூகவிரோதிகளோடு சேர்ந்து தீ வைத்துக் கொளுத்திய சம்பவங்கள் எல்லாம் உரிய சாட்சிகளோடு வீடியோவில் பதிவு செய்யப்பட்டு, புகைப்படங்கள் எல்லாம் எடுக்கப்பட்டு அந்த கோகுலகிருஷ்ணன் அவர்களிடம் கொடுக்கப்பட்டும் அவர் அதுபற்றி விசாரிக்காமல் தவிர்த்திருப்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக கோகுலகிருஷ்ணன் அவர்களால் ஒரு நீதியான முறையில் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்க முடியாது என்பது தெரிகிறது. அந்த அறிக்கையை அரசு வாபஸ் பெற்றுக்கொண்டு மத்திய அரசிடம் கேட்டு, C.B.I. விசாரணைதான் அதற்குரிய நீதி கிடைப்பதற்கு வழி வகுக்கும் என்ற அடிப்படையில் C.B.I. விசாரணைக்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே ஏராளமான மேம்பாட்டுத் திட்டங்கள், தமிழகத்திற்குத் தேவையான பல்வேறு வளர்ச்சிப் பணிகள் ஆகியவை சொல்லப்பட்டிருந்தாலும்கூட ஒருசிலவற்றை மட்டும் நினைவூட்ட நான் விரும்புகின்றேன்.

தமிழ், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வரலாற்றுக் காவியம் ஆகும். தற்போது 4-ஆவது தமிழாக கணிப்பொறித் தமிழ் உருவாகியுள்ளது. இந்தியாவிலேயே Internet இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ் மொழி ஆகும். தமிழில் மென்பொருளை உருவாக்கும் வாய்ப்பை ஊக்குவிக்க அரசு தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி தொடங்கயிருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ்

இணையத்தின் வளர்ச்சிக்கு, தேவையான ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள 'Tamil Internet Research and Development Centre' உருவாக்கி, அதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கின்றேன். இதன்மூலம் தகவல் துறை புரட்சியைப் பாமர மக்களிடம் கொண்டு செல்லலாம். சமுதாய Internet மையங்கள் அமைக்க இருப்பதை நான் வரவேற்கின்றேன். அதேநேரத்தில் 1,500-க்கு மேற்பட்ட சமுதாய Internet மையங்கள் தமிழகத்திலே அமையவிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக சென்னையிலே சர்வதேச மாநாட்டைக் கூட்டி அறிஞர் பெருமக்களை அழைத்து Key Board and Software ஆகியவற்றில் ஒருமித்த கருத்து ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அந்தப் பணியைத் தலைமையேற்று சிறப்பாக நடத்திய நம்முடைய மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போது கணிப்பொறி வழங்குகிறார்கள். அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த ஆண்டிலேயே கணிப்பொறியை வழங்க வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையோடு நம்முடைய முதல்வர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே 100 ஆண்டுகளுக்கு முன்னால் பச்சையப்ப முதலியார் அவர்கள் கூவம் ஆற்றிலே குளித்துவிட்டு கந்தசாமி கோவிலிலே சென்று வணங்கியதாக வரலாற்றுச் செய்திக் குறிப்பு இருக்கிறது. ஆனால், 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள, 50 இலட்சம் மக்களைக் கொண்ட இந்த சென்னை மாநகராட்சியில், பெருமளவு மக்களுடைய வீட்டுக் கழிவுகளெல்லாம் சாக்கடை வழியாக கூவத்தில்தான் கலக்கிறது. கடந்த 100 ஆண்டுகளாக கூவத்தைச் சீரமைக்க எந்தச் செயல்திட்டமும் வகுக்கப்படவில்லை. ஆனால், நம்முடைய அரசு இதற்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கி, அதில் 252 கோடி ரூபாய் பொதுப் பணித் துறை மூலமாகவும், 48 கோடி ரூபாயை சென்னை மாநகராட்சி மூலமாகவும் நிறைவேற்றத் திட்டம் தீட்டியிருப்பது பாராட்டுக்குரியது. மேலும், தூர் எடுக்கும் பணிக்காக, பக்கிங்காம் கால்வாயைத் தூர்வார 35 கோடி ரூபாயும், கூவத்தைத் தூர் வார 33 கோடி ரூபாயும், அடையாறு ஆற்றை தூர் வாருவதற்காக 31 கோடி ரூபாயும் ஒதுக்கி, இவற்றிற்காக சர்வதேச



அளவிலே குளோபல் tenders கோரப்பட்டிருப்பதும், இப்பணிகளுக்கான முழுச் செலவுத் தொகையான 300 கோடி ரூபாயையும் ஹட்கோ மூலம் நிதியுதவி பெறுவதையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகிறேன். இதன் மூலமாக கழிவுநீர் ஆறுகளைத் தூர் எடுத்தல், கரையோரக் குடிசைகளை அகற்றி அங்கே பூங்காக்களை அமைத்தல், கூவத்திலே படகுகளை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், கரையோரங்களிலே வியாபாரக் கடைகளை அமைத்தல், மேலும் போக்குவரத்து வசதி அமைத்தல், அதுமட்டுமல்லாமல் கூவம் ஆற்றின் ஓரமாக பாதாளக் குழாய்களை அமைத்து சாக்கடை நீரை நேரடியாகக் கடலில் விடுவதற்கான வசதிகளைச் செய்தல், இப்படிப்பட்ட சிறந்த ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன. பக்கிங்காம் கால்வாய் ஆந்திராவிலே ஓங்கோலிலிருந்து மரக்காணம் வரையிலே மிக நீண்ட கால்வாயாக இருந்தது. அந்த பக்கிங்காம் கால்வாய் கடந்த காலத்திலே படகுப் போக்குவரத்தின் மூலமாக வியாபாரத் தலமாக மாறியிருந்தது. ஆந்திராவிலிருந்து அரிசி, விறகு, பருப்பு, கருவாடு போன்ற பொருள்களை அந்த வழியாகக் கொண்டு வந்து மக்கள் வியாபாரம் செய்தார்கள். இன்றைக்கும் Salt Quarters அதற்குச் சான்றாக இருக்கிறது. சால்ட் குவார்ட்டர்ஸ் என்பது உப்பைச் சேர்த்து வைத்த இடம் ஆகும். ஆகவே, நான் விரும்பி வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் மீண்டும் அந்தப் படகுப் போக்குவரத்தை நடத்த வேண்டும் என்பதுதான்.

பிற்பகல் 12-05

சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 பாலங்களுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அவற்றிலே பெரம்பூர் மேம்பாலமும் ஒன்று. என்னுடைய தொகுதியில் 21 கோடி ரூபாய்க்கான அந்த மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணி தொடங்கவிருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். அண்ணா தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட பல அடிக்கல்கள், பல கல்வெட்டுகள் இன்றும் அப்படியே இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு கலைஞர் அவர்கள் இதிலே ஒரு புரட்சியை உண்டாக்கி- Construction கட்டுமானப் பணியையும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே 10 பாலங்களுக்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு இருக்கிறது. எனவே, அந்த

பத்து பாலங்களும் சென்னையை சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்கு மிகவும் சிறப்பான சாதனமாக அமையும்.

இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகப் பல மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு அவையெல்லாம் இப்போது சிறப்புக்குரிய நகரங்களாக இருக்கின்றன. அதைப்போலவே சென்னையில் 115 கோடி ரூபாயில் சற்றேறக்குறைய 10 புதிய பாலங்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. பெரம்பூர் மேம்பாலம் 21 கோடி ரூபாய், பீட்டர்ஸ் சாலை மேம்பாலம் 8.5 கோடி ரூபாய்; பாந்தியன் சாலை மேம்பாலம் 8.5 கோடி ரூபாய்; புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்க 12 கோடி ரூபாய்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மேம்பாலம் 8.5 கோடி ரூபாய்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையிலிருந்து டி.டி.கே. சாலை சந்திப்பு வரையிலே பாலம் அமைக்க 15 கோடி ரூபாய்; சர்தார் பட்டேல் சாலையில் பாலம் அமைக்க 15.5 கோடி ரூபாய். இப்படி 10 பாலங்களுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மற்றொன்றையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பணிகள் யாவும் 18 மாதங்களில் முடிவடைய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அடுத்த ஆண்டிற்கு 12 பாலங்கள் அமைப்பதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதை சென்னை நகர மக்கள் பெரிதும் மகிழ்ச்சியோடு எண்ணி வரலாற்றுச் சாதனையாக வரவேற்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகராட்சியும் இந்தப் பணிகளைச் மிகச் சிறப்பாகச் செய்யவிருக்கிறது; நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடைய தலைமையிலே சென்னை மாநகராட்சி இயங்கி வருகிறது. இந்தப் பாலங்கள் மட்டுமல்லாமல், அடுத்த கட்டமாக சென்னையிலே--இரண்டாண்டுகளுக்கு முன் இதே சட்டப் பேரவையிலே நான் உரை நிகழ்த்துகிறபோது சொன்னேன்-சென்னையில் சேருகிற குப்பையில் 1,500 டன் குப்பைகளைத்தான் அகற்றுகிறார்கள். ஏறக்குறைய இரண்டு ஆயிரம் டன்னிற்கு மேற்பட்ட குப்பைகள் அப்படியே accumulate ஆகி இருக்கின்றன; சேர்ந்துவிடுகின்றன என்று சொன்னேன். ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் சொல்லிக்



கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். காரணம், இப்போது 3,200 டன் குப்பைகள் இரண்டு வாரகாலமாக சென்னையிலே அகற்றப்படுகின்றன. சென்னையை குப்பை இல்லாத சென்னையாக மாற்றுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சென்னை மாநகராட்சியை இந்த நேரத்திலே நான் பாராட்டுகிறேன்.

அடுத்து சிறு சேமிப்பு. 19 கோடி ரூபாய் சென்ற ஆண்டு சிறுசேமிப்பாக வசூலிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 159 கோடி ரூபாய் வசூலித்திருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரிய விஷயமாகும்.

அதுமட்டுமல்லாமல், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சிக்கு அரசால் 2½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அவற்றில் 2.3 கோடி ரூபாய் இதுவரையிலே வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறபோது உண்மையிலேயே சென்னை நகர மக்களின் சார்பாக தமிழக முதல்வர் அவர்களையும், நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களையும் இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்காக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் 100 ஆண்டு காலமாகத் தொடர்ந்து விவசாயிகளின் கூலிகளைச் சீரமைக்க வேண்டும் என்று பலமுறை இந்தச் சட்டமன்றத்திலேயும் பல இடங்களிலேயும் பேசியிருக்கின்றார்கள். அதற்காக நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோலப்பன் குழுவை அமைத்து அதற்கு ஒரு தீர்வினைக் காணவிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மின்சாரத்திற்காகப் புதிய, புதிய மின் நிலையங்களை அமைக்கும்பொருட்டு 900 கோடி ரூபாய் நிதியுதவியிலே 196 மெகாவாட் மின்சார உற்பத்திக்காக பேசின்பாலத்திலே புதிய மின் நிலையத்திற்கான திட்டம்--Vasavi Power Project--நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்படவிருக்கிறது. அதைப்போலவே சற்றேறக்குறைய 20-க்கும் மேற்பட்ட மின்நிலையங்கள் தமிழகத்தில் தொடங்கப்படவிருக்கின்றன என்று இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே சமத்துவபுரத் திட்டம்; இது ஒரு வரலாற்றுச் சாதனை. சமீபத்திலே நம்முடைய வீட்டுவசதித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்களும் நானும் கலந்துகொண்ட சர்வதேச வீட்டுவசதி இணையங்களின் தலைவர்கள் கூட்டத்தில் ஹட்கோ, என்.எச்.பி. போன்ற நிறுவனங்களின் தலைவர்கள் திரு. சுரேஷ் போன்றவர்களெல்லாம் கலந்து கொண்டார்கள். அப்பொழுது சமத்துவபுரத்தைப் பற்றிப் பேசுகின்றபொழுது, வந்திருந்த அனைத்து மாநிலத் தலைவர்களும் சமத்துவபுரத்தைப் பற்றிய விளக்க உரைகளை அமைச்சரவர்கள் அளித்தபொழுது, அவற்றை மிக உன்னிப்பாகக் கவனித்து, இந்தத் திட்டங்களை எங்களுடைய மாநிலங்களிலும் நிறைவேற்ற வேண்டும்; அதற்கான குறிப்புகளை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். இப்படி எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் வரலாற்று நாயகனான நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறபொழுதெல்லாம் நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம், இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

யார் யாரோ பேசுகிறார்கள், எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், நாம்தான் அடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வருவோம் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டேகால் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மட்டுமல்ல; தொடர்ந்து அடுத்தும் ஐந்தாவது முறை டாக்டர் கலைஞரவர்கள்தான் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு வெட்டிக்கு மாரடிக்கின்றவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கடந்த காலங்களில் அமைச்சர் பெருமக்கள் ஏதோ சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள்; மிச்சமீதி ஒன்றுமே கிடையாது; ஆகவே வருங்காலத்திலே மீண்டும் அப்படி வரக்கூடிய வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றன என்ற எண்ணத்திலே பேசிக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த நேரத்தில் நான் தெளிவோடு சொல்லிக்கொள்கிறேன். மக்களுக்கு எண்ணற்ற சாதனைகளை நிறைவேற்றுகின்ற நம்முடைய தமிழக முதல்வரவர்களை, வரலாற்று நாயகனை என்றென்றைக்கும் தமிழகம் மறவாது, மறவாது என்று சொல்லி அமைகிறேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்கள் உரையாற்றுகின்றபோது, ஒரு போலீஸ் அதிகாரியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது தொடர்பான கருத்துக்கள் அவைக்குறிப்பில் இருக்கும். அந்தப் பெயர் மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைமீது எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஆளுநர் உரையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்லியிருப்பது நிச்சயமாக வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது. அதுபோன்று, ரேஷன் பொருள்களின் விலை உயரக் கூடாது என்று சொல்லியிருப்பது, இந்தப் பொருளாதாரச் சிக்கலிலும்கூட அதற்கென்று தனி நிதி ஒதுக்கி ஆவன செய்வோம் என்று சொல்லியிருப்பது பாராட்டத்தக்கது.

அதுபோன்று சமத்துவபுரத்தைப்பற்றி நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதேசமயத்தில் சமத்துவபுரத்தைப்பற்றி என்னைப் பொறுத்தமட்டில் ஒரு கருத்து. சமத்துவபுரத்தில் அனைத்து ஜாதியிலுள்ள ஏழை மக்களுக்கும் சமமாக வீடுகள் கிடைக்கூடிய அளவுக்கு அரசாங்கம் முயற்சியெடுத்தால் அது மேலும் சிறப்பாக அமையும். அதாவது, சமத்துவபுரம் என்று சொல்லிக்கொண்டு, குறிப்பிட்ட ஒருசில சமுதாயத்திற்கு அதிகமான வீடுகள், மற்ற சில சமுதாயங்களுக்கு ஒரு வீடு என்று வரும்பொழுது, அந்த அதிகமான வீடுகள் கிடைக்கக்கூடிய சமுதாயத்திலுள்ளவர்கள் அங்கு தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்த முயற்சிக்கக்கூடும். அரிஜன சமுதாயத்திற்கென்று அரசாங்கம் ஏராளமான வீடுகள் கட்டிக் கொடுக்கின்றது. அதை மேலும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, எல்லாச் சமுதாயத்து மக்களையும் ஒரே இடத்திலே குடியிருக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அதிலும், உயர்ந்த சமுதாயம் என்று சொல்லக்கூடிய பிராமண சமுதாயத்திற்குக்கூட 5 வீடுகள், 6 வீடுகள் என்று ஒவ்வொரு சமத்துவபுரத்திலேயும் இடம் ஒதுக்கப்படுகிறது. மிகவும் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக்

கொஞ்சம் அதிக இடம் அங்கே வழங்கப்படுகிறது. எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, எந்தெந்த சமுதாயத்திற்கு எவ்வளவு இடம் என்பது அல்ல. சிலஇடங்களிலே அதிகமாக விண்ணப்பங்கள் வந்தால் பிராமண சமுதாயத்திற்குக்கூட அதிகமாகத் தருகிறார்கள். எந்த அளவுக்கு விண்ணப்பம் வருகிறதோ அதைப் பொறுத்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிலே முடிவு செய்கிறார்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** நான் கேட்டுக்கொள்வது, எத்தனை சமுதாயங்கள் இருக்கின்றனவோ அத்தனை சமுதாயங்களுக்கும் சமமாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பை நாம் சிந்திக்க முடியுமா என்பதுதான் என்னுடைய கருத்து. வருகிற மனுக்களை வைத்துப் பரிசீலித்து, எந்த அளவுக்குச் செய்ய முடியுமென்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஜாதி, மதப் பிரச்சினைகள் என்பது மிக வேதனையளிக்கக்கூடிய சூழ்நிலையிருக்கின்ற காரணத்தால், அனைத்து மக்களும், அனைத்து அரசியல்வாதிகளும், உண்மையைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், 1947-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் எந்த அளவுக்கு இந்த ஜாதி, மதக் கொடுமைகள் நடந்திருக்கின்றன, எத்தனை கொலைகள் நடந்திருக்கின்றன, யார்யாரெல்லாம் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள், இதனுடைய பின்னணி என்ன என்பதையெல்லாம் விளக்கக்கூடிய வகையில் அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கை கொடுத்தால் அனைத்து மக்களும் புரிந்துகொள்ள முடியும். அனைத்துச் சமுதாயத்தினரும் அதைப் புரிந்துகொண்டு ஓரளவுக்குத் தங்களைத் திருத்தியமைத்துக் கொள்ள வாய்ப்பாக அமையுமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையிலேயே ஒரு வெள்ளை அறிக்கை கொடுப்பது நலமாக அமையுமென்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-15

இப்போது அனைத்துத் துறைகளையும் சேர்ந்த பொறியாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குக் கீழே பணியாற்றக் கூடியவர்களுக்கு சமீபத்திய சம்பள விகிதத்தில் தங்களைவிட அதிகமான சம்பளம் கிடைத்த காரணத்தால் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அலுவலகங்களில் அனைவரும், கீழ் மட்டப் பணியாளர்கள் வரை, சட்டதிட்டங்களைப் பேசுகிறார்களே தவிர, யாரும் பணிந்து நடப்பது அல்லது



சொல்வதைச் செய்வது என்ற சூழ்நிலை சற்றுக் குறைந்துகொண்டிருக்கிற காலகட்டத்தில், கீழே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு எங்களை விட சம்பளம் அதிகமாகப் போகிறது என்ற காரணத்தால், அவர்கள் எங்களை ஒருமாதிரியாகப் பார்க்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது, நாங்கள் சொல்வதைக் கேட்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை எந்த அளவுக்கு நிவர்த்தி செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்வதில் அரசாங்கம் கவனம் கொள்ளவேண்டும். அனைத்து அரசு அதிகாரிகளும் சம்பளம் அதிகம் வேண்டுமென்று போராடிக்கொண்டு இருக்கிறார்கள். 10,000, 15,000 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறவர்களும் சம்பளம் போதாது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டில் கிட்டத்தட்ட 30 சதவிகித மக்கள் தினசரி 50 ரூபாய் வருமானம்கூட இல்லாமல், இரண்டு வேளை கஞ்சிக்குகூட வழியில்லாமல் வாடுகிறார்கள். அவர்களைப்பற்றி அனைத்துத் துறை அரசு அதிகாரிகளும் ஓரளவாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இந்த அளவுக்குச் சம்பளம் வாங்குகிறோம், இந்த அளவுக்கு சுகபோகத்தோடு வாழ்கிறோம், இந்த நாட்டில் நமது பக்கத்து வீட்டில் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்க்கவில்லையே என்று நினைத்துப் பார்க்கவேண்டும். எம்.ஜி.ஆர். ஒரு திரைப் படத்தில் ஒரு பாட்டைப் பாடினார்-

'அண்ணாந்து பார்க்கிற மாளிகை கட்டி
அதன் அருகினில் ஓலைக் குடிசை கட்டி'

என்று. அது நினைவுக்கு வருகிறது. நாம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறோம், எவ்வளவு வசதியாக வாழ்கிறோம், இப்படி வாழ்கிற நாம் சம்பளம் போதாது என்று போராடுகிறோமே, நம்முடைய தெருவில் வாழ்கிற ஏழை எந்த அளவுக்கு வறுமையில் வாடுகிறான், அவனுக்கு என்ன வழி என்று சிந்தித்து, அரசாங்க அதிகாரிகள் தாங்களாகவே முன்வந்து, இனி ஐந்தாண்டுகளுக்குச் சம்பளம் எங்களுக்குக் கூட்ட வேண்டாம், அதன்மூலம் கிடைக்கிற பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்கமுடியுமா, ரேஷன் பொருட்கள் விலையைக் குறைக்கமுடியுமா, ஏழைகளின் வீட்டு வரியை இன்னும் எந்த அளவுக்குக் குறைக்க முடியும், அவர்களுக்கு மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்தில் கொடுக்க முடியுமா என்று சிந்தித்து, அவர்களே அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

இன்னொன்று, என்னைப் பொறுத்தவரையில், இந்த இலவசம், சும்மா என்று சொல்லக்கூடிய திட்டங்கள் என்பது, அந்தப் பழக்கம் என்பது சாதாரண மக்களுடைய மனநிலையைப் பாதித்து விடுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது நாட்டில் ஊதிய உயர்வு கேட்டு அதற்காக ஊர்வலங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அதற்குப் பலரும் தலைமை வகிக்கின்றார்கள். நம்முடைய நண்பர் வேலாயுதன் அவர்கள், ஊதியத்தைக் குறை என்கின்ற கோஷத்திற்குத் தலைமை வகித்து ஒரு இயக்கத்தை நடத்தத் தயாராக இருக்கின்றாரா என நான் கேட்க விரும்புகின்றேன்.

**திரு. சி. வேலாயுதன்:** இப்படி நாம் பேசினோம் என்றால் அனைத்து அரசு அதிகாரிகளும், ஊழியர்களும் நமக்கு எதிராக மாறி விடுவார்கள். நான் என்ன வேண்டுகோள் வைக்கிறேன் என்றால், நாம் இவ்வளவு சம்பளம் வாங்குகிறோமே, மற்றவர்களுக்கு இல்லையே என்று அவர்கள் மனசாட்சிபூர்வமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்மைப் போன்றே அவர்களும் இந்தப் பாரத நாட்டில் பாரதத்தாயின் குழந்தைகளாகத்தான் பிறந்திருக்கிறார்கள். நாம் இவ்வளவு சுகபோகத்தோடு வாழ்கிறோம், எல்லா வசதிகளையும் அரசாங்கம் நமக்குத் தருகின்றது, அது போதாது என்று நாம் மேலும் ஆடம்பரத்திற்காக அதிகமாகக் கேட்கிறோமே என்பதை உணர்ந்து கொண்டு, ஏழைகளுக்கு உதவ நாம் என்ன செய்யவேண்டுமென்று அரசு அதிகாரிகளும், அரசாங்கமும் தாங்களாகவே சிந்தித்து, மனமுவந்து இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். இதற்காக நான் இறைவனைப் பிரார்த்தித்து அந்த மனதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான விஷயம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில், பேரூர் கிராமத்தில் *1995* ஆம் ஆண்டுக்கு முன்னாலே, நில உச்சவரம்புச் சட்டப்படி அரசாங்கம் *17.75* ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது. சில அரசியல் தலைவர்கள், சில அதிகாரிகளுடைய ஊழல் காரணமாக, எங்கெங்கோ தப்பான முறையில் அந்த நிலம் கைமாறிச் சென்றுவிட்டது. அதற்காக



மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் வரை அந்த வழக்கு சென்று, அங்கெல்லாம் அரசாங்கம் கையகப்படுத்தியது நியாயம்தான் என்று தீர்ப்பும் ஆகியிருக்கிறது. இருப்பினும் *1995* ஆம் ஆண்டு நடந்த தவறின் காரணமாக, ஊழல் காரணமாக அந்த இடத்தை இன்னும் அரசாங்கம் கையகப்படுத்த முடியவில்லை. அதை யார் யாரோ என்னென்னவோ செய்து மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமத்துவபுரத்திற்காக நாம் நல்ல நல்ல இடம் தேடி வாங்க முடியாமல் இருக்கிறது. அரசாங்க இடம் என்று பார்க்கிறபோது, புறம்போக்கு இடங்களில் நல்ல வாய்ப்பு இருப்பதில்லை. அங்கே நல்ல கட்டடம் கட்ட வேண்டும், அதற்கான இடம் விலை அதிகம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல இடம் கிடைப்பது முடியாத காரியம். இப்போது நான் சொன்ன இடம் அரசாங்கத்தினுடைய இடம். மூடி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த *17.75* ஏக்கரை எடுத்து, சமத்துவபுரத்திற்கு அரசாங்கம் பயன்படுத்தினால் அது வாய்ப்புள்ள இடம், நல்ல இடம், பாராட்டப்படக்கூடியதாக அமையும் என்பதால், அதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அதன் பழைய சர்வே எண் *1967*-லிருந்து *1983* வரை இருக்கிறது. அந்த அளவுக்கு அந்த இடத்தை மீண்டும் அரசாங்கம் கையகப்படுத்தி, ஏழைகளுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

பென்ஷன்தாரர்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாக்கித் தொகை *2, 3* தடவைகளாகக் கொடுக்கப்படுகிறது என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். அதன் காரணமாக, *58* வயதுக்கு மேல் ஓய்வு பெறும்போது, மகளுக்குத் திருமணம், மருத்துவச் செலவு போன்றவற்றுக்கு அந்தப் பணம் மொத்தமாகத் தேவைப்படும்போது, இந்த ஓய்வூதியத் தொகைகளைத் தவணைகளில் தருவதால், எந்தப் பெரிய காரியத்தையும் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். நியாயமாக *58* வயதில் ஓய்வு பெறும்போது மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அப்படி இருக்கக்கூடியவர்களுக்கு அந்தப் பணம் மொத்தமாகக் கிடைத்தால் சௌகரியமாக இருக்கும். ஆனால், அப்படிக் கிடைக்காததால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பணத்தைக் கொஞ்சம்

கொஞ்சமாகக் கொடுக்கக்கூடிய நிலையில், ஒரு பெரிய காரியத்திற்கென்று வைத்துச் செலவு செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அரசாங்கம், ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு, அவர்களுடைய ஓய்வூதியத்தில் கொடுக்கப்பட வேண்டிய அனைத்துக் கணக்குகளையும் முடித்து, அந்தப் பணத்தை மொத்தமாகக் கொடுத்தால், அவர்களுடைய குடும்பச் செலவிற்கோ, வருங்கால வைப்பு நிதி என்று வைத்தோ அல்லது மகள், மகன் திருமணச் செலவுக்கு என்றோ வைத்துக்கொள்ள, குடும்பத்தில் ஆக்கபூர்வமான பணிக்குச் செலவு செய்ய, அந்தக் குடும்பம் மேலும் சுபிட்சமடைய அது வாய்ப்பாக அமையும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1991* ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்வண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாம்பழத்து ஆறு அணை கட்டவேண்டுமென்று அதற்கான திட்டம் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, அது அறிவிக்கக்கூடிய சூழ்நிலை வரும்போது, சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக, அதை அறிவிக்க முடியாமல் போய்விட்டது. சமீபத்தில் அதனுடைய ஆய்வுத் திட்டங்கள் அனைத்தும் முடிவடைந்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்து இடமெல்லாம் பார்த்துவிட்டு திரும்பினார்கள். எனவே, இந்த நிதியாண்டிலாவது--நான் இங்கே வந்ததிலிருந்து அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். எனக்கு முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்--மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருணைகூர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு இந்த அணையைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆசிரியர்களுடைய வேலை பற்றிய பிரச்சினை. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்தும்போது அங்கே முதலிலே *50* ஆயிரம் ரூபாய், *1* இலட்சம் ரூபாய் என்று தொகையை வாங்கிக்கொண்டு பணி நியமனம் செய்கிறார்கள். சில மாதங்களில் அல்லது சில ஆண்டுகளில், அந்த ஆசிரியர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்விற்கான அழைப்பு அனுப்பப்பட்டு, அவர்களும் அரசு வேலைக்குப் போய் சேர்ந்து விடுகிறார்கள். அப்போது, அதே தனியார் நிறுவனங்கள், திரும்பவும் மற்றவரிடம் *50* ஆயிரம் ரூபாய், *1* இலட்சம் ரூபாய் என்று இலஞ்சம் வாங்கிக்கொண்டு, ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. தனியார் நிறுவனங்கள் இப்படிப்பட்ட



ஊழலைச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே அரசு அங்கீகாரம் பெற்று அரசாங்கத்தினுடைய சம்பளம் கொடுக்கக்கூடிய தனியார் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் மீண்டும் அரசு பள்ளிக்கூடத்தில் வேலைக்கு வரும் வாய்ப்பு வருவதால், வேலைவாய்ப்பே இல்லாதிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எங்களுக்கு ஒரு வேலை கிடைத்து விடாதா என்று நினைக்கக்கூடியவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, அரசாங்கத்தின் உதவி பெறக்கூடிய பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு வேலை கிடைத்தவுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருக்கக்கூடிய அவர்களுடைய பெயர் இரத்து செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் தனியார் நிறுவனத்தில் அல்லது அரசின் நிதியுதவி பெறுகின்ற பள்ளிகளில் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால், அந்த நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால், அவர்கள் வேலைக்குச் சேர்ந்துவிட்டதாக வேலைவாய்ப்புத் தேடித் தருகிற நிறுவனத்திற்குத் தெரிவிப்பது இல்லை. அவர்கள் தெரிவித்தால்தான், வேலை வாய்ப்பு நிறுவனம் அவர்களுடைய பெயரை எடுக்க முடியும். ஆகவே, பெயர்ப் பட்டியலிலே இருக்கிற காரணத்தினால், அவர்கள் தெரிவிக்காத நிலையில், நேரடியாக அந்தப் பட்டியலை வைத்து, அரசு வேலை தருகிறபோது, அவர்களே வேலை பெறக்கூடிய--ஒருவரே மறுபடியும் வேலை பெறக்கூடிய--வாய்ப்பு இயல்பாக அமைகிறது.

இன்னொன்று, *50* ஆயிரம் ரூபாய் அல்லது இலட்சக்கணக்கில் இலஞ்சம் கொடுத்து வேலை வாங்கி விடுவதாகவும், அவர்களே, திரும்ப அரசு வேலைக்கு வருவதாகவும் திரு. வேலாயுதன் அவர்கள் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் மிகப் பெரிய சங்கங்கள் வைத்து, அமைப்புகளை வைத்து, சங்கங்களிலேகூட போட்டி வைத்துக்கொண்டு, போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 'இலஞ்சம் கொடுப்பதில்லை' வேலை முறையாகக் கிடைத்தால்தான் சேருவோம்' என்று சொல்லுகிற அளவுக்கு அந்தச் சங்கங்கள்

மூலமாக ஆசிரியர்கள் ஒரு கட்டுப்பாட்டோடு இருந்து, இலஞ்சம் கொடுத்தாவது வேலை வாங்குகிற அந்தப் போட்டி உணர்வை, தவறான போக்கை ஆசிரியர்கள்தான் களைவதற்கு முன் வரவேண்டும். சுயநிதிக் கல்லூரிகளிலே அல்லது வேறு சில அமைப்புகளிலே, அப்படிச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கக் கல்லூரிகளிலே அப்படிப்பட்ட முறைக்கு வாய்ப்பே இல்லை. ஆகவே, இலஞ்சம் கொடுத்துவிட்டு, வேலை வாங்கிக்கொண்டு, ஒருவேளை திரும்பவும் அவரே அரசு முறைப்படி எடுக்கின்றபோது வேலைக்கு வருவாரேயானால், அதை ஆசிரியர் சங்கங்கள்தான் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் அப்படிச் சேர்த்துக்கொள்ளக்கூடியவர்கள், அவர்களாகவே வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று சொல்லமாட்டார்கள். காரணம் என்னவென்றால், தங்களுடைய பள்ளியிலிருந்து செல்லக்கூடியவர் அரசு வேலைக்குச் செல்லட்டும். மீண்டும் நாம் வேறு நபரை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாமே என்று நினைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் முன்வந்து சொல்ல மாட்டார்கள். எனவே, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில், அரசாங்கமே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருக்கும் அவருடைய பெயரை நீக்குவதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு ஒரு முறையைக் கண்டுபிடித்து, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலைகள் விசேஷமாக ஏதும் இல்லை. அங்கு தீப்பெட்டித் தொழிற்சாலை கொஞ்சம் கொஞ்சம் ஏழை மக்களுக்கு பணி கொடுக்கக்கூடிய வகையில் நடந்துகொண்டிருக்கிறது. 1992 ஆம் ஆண்டு 142 தீப்பெட்டி கம்பெனிகள் இருந்தன; இப்போது 1998-ல் 43 கம்பெனிகள் உள்ளன. மீதி அனைத்தும் மூடப்பட்டு விட்டன. காரணம் என்னவென்றால், தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் புதியதாக ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்றால், அதற்கு போலீஸினுடைய அனுமதி வேண்டும்; பிரச்சினை இல்லை என்று அனுமதி வாங்க வேண்டும்.



அதைப் பெற்று விடுகிறார்கள். ஆனால் வருடா வருடம் புதுப்பிக்கக்கூடிய முறை வரும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், மீண்டும் மீண்டும் போலீஸினுடைய அனுமதி வேண்டும் என்று சொல்லி, ஏதேதோ காரணங்களைச் சொல்லி மாதக் கணக்கில் அனுமதி கிடைக்காத காரணத்தால், தடையில்லாச் சான்றிதழ் கொடுக்காமல் போய்விடக்கூடிய காரணத்தால், முதலாளிகள் இத்தொழிலில் அதிக இலாபம் கிடைக்கவில்லை, ஒரு மாதம் இரண்டு மாதங்கள் மூட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று கருதி, இதை மூடிவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. மற்ற மாவட்டங்களில் ஒருசில நாட்களிலே இது கிடைத்து விடுகிற[illegible] எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் [illegible] வகையில், காலதாமதப்படுத்தாமல், விரைவில் அனுமதி கிடைக்கக்கூடிய வகையில் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் உதவி ஆய்வாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 78 பேர் இன்னும் அவர்களுக்குப் பணி கிடைக்காததால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு வயது வரம்பு கடந்து விடுகிறது. வேறு பணிகளுக்குச் செல்ல முடியவில்லை. உதவி ஆய்வாளராகத் தேர்வாகி விட்டோம் என்று கருதி, திருமணம் வேறு செய்து விட்டோம். குழந்தைகள் வேறு ஆகிவிட்டது. எங்களுடைய நிலை மிகக் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லி, இன்று காலை என்னுடைய அறையில் வந்து வேதனைப்பட்டார்கள். அரசாங்கம் இதை கவனத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாகர்கோவிலில்--ஏழைகளுடைய பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்--அகஸ்தீஸ்வரம் தாலுகாவில வடசேரி கிராமத்தில் *அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 98 வீடுகளைக் கட்டி வசித்துக்கொண்டு வருகின்றார்கள். கிட்டத்தட்ட 200....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட அந்தச் சமுதாயத்தின் பெயரை 'அருந்ததியர் சமுதாயம்' என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**திரு. சி. வேலாயுதன்:** அவர்கள் என்னிடம் அப்படித்தான் சொன்னார்கள்; மாற்றிக்கொள்கிறேன். அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 98 வீடுகளைக் கட்டி வசித்து வருகின்றார்கள். கிட்டத்தட்ட 200 ஆண்டுகளாக அங்கு வசித்து வருகிறார்கள். கேரள அரசாங்கம் அவர்களுக்கு 21 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றது. தமிழ்நாடு அரசாங்கம் 72 வீடுகளை அவர்களுக்குக் கட்டிக்கொடுத்து இருக்கின்றது. ஆனால் இதுவரை அவர்களுக்கு வீட்டிற்கான பட்டா கொடுக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், இந்த settlement காலத்தில், நாகர்கோவில் நகர ஆணையருடைய பெயருக்கு அந்த இடம் எப்படியோ settlement-ல் மாறிவிட்டது. கிட்டத்தட்ட 15 ஆண்டு காலமாக அவர்கள் பலவிதமான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றுவரைகூட வருவாய்த் துறை அமைச்சர், வருவாய்த் துறை செயலாளர், முதலமைச்சருடைய தனிப் பிரிவு இங்கெல்லாம் மனு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு முயற்சி செய்தும்கூட, தலைமைச் செயலகத்தில் ஏனோ கோப்பு நகராமல் இருக்கிறது என்று வேதனைப்படுகிறார்கள். அரசாங்கமே கட்டிக்கொடுத்த வீடு, 200 ஆண்டுகளாக இருக்கிறார்கள், அவர்களுக்குப் பட்டா கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சியில் தினக்கூலிகளாக கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக பணியாற்றக்கூடியவர்கள் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

அதைப்போல குடும்ப அட்டைப் பிரச்சினை என்பது எங்கள் மாவட்டத்தில் மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. எந்த வேலைக்கு ஆனாலும் சரி, எந்தச் சான்றிதழ் வேண்டுமானாலும் சரி, குடும்ப அட்டை இல்லாமல் எங்கும் செல்ல முடியாது; ஆகவே குடும்ப அட்டை இல்லாமல் வேதனைப்படுகிறார்கள். பழைய குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு ரேஷனில் பொருள் வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, பழைய குடும்ப அட்டையை மாற்றாதது பொது மக்களுடைய குறை அல்ல. அரசாங்கம் வெகு விரைவில் குடும்ப அட்டைகளை வழங்க வேண்டும். புதிய குடும்ப அட்டைகளை வழங்கும் வரை, பழைய குடும்ப அட்டைகளுக்கு அவர்கள் அனைத்துப் பொருள்களையும்



வாங்கக்கூடிய வகையில் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித் திருநாடு!

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் செய்யக்கூடிய இந்த நிலையிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொண்டு எங்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் இந்த நாடு சுதந்திரம் பெற்று விட்டால் மட்டும் போதாது. இந்த நாட்டிலே என்று வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முழுமையாக அமலாக்கப்படுகிறதோ அன்றுதான் முழுமையான சுதந்திரம் பெற்ற நாடாகும் என்று சொன்னார். தந்தை பெரியார் அவர்கள் சொன்னமாதிரி நடப்பு நிதிநிலை அறிக்கையிலே, இந்தக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இட ஒதுக்கீட்டினை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி திட்டங்களை அறிவிப்பதாக இங்கே சொல்லியிருப்பதை நாங்கள் முழுமனதாக வரவேற்கின்றோம். வரவேற்கக்கூடிய அதே நேரத்தில், சில கருத்துக்களை மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

அற்பனாகிய, சாமான்யனாகிய என்னைப் பொறுத்தவரை, என்னைவிட சமூக நீதியிலே இட ஒதுக்கீட்டிலே அதிகமாக, ஆழமாகத் தெரிந்தவர், அக்கறை கொண்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

இந்த இட ஒதுக்கீட்டில் இருக்கக்கூடிய குறைபாடுகளையெல்லாம் களைந்து நிவர்த்தி செய்யுமாறு அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, வேலைவாய்ப்பிலே, சமூக அந்தஸ்திலே ஓரளவுக்காவது வளம் பெற வேண்டுமென்று சொன்னால், இந்த இட ஒதுக்கீடு முழுவதுமாகப் பயன் அளிக்கக்கூடிய நிலையிலே இருக்க வேண்டுமென்கின்ற காரணத்தினால் மீண்டும் இதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அதிலும் குறிப்பாக 108 சாதிகளுக்கு 20 சதவிகிதம் என்று இருக்கிறது. வேலைவாய்ப்பிலே 100-க்கு 20 என்று சொல்கிறபோது, 10 வேலை வாய்ப்பு என்று சொன்னால் 2 தான், வர முடிகிறது. ஆகவே, இப்படி 10-க்கு 2 என்று வரக்கூடிய நிலையிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்டநாட்களாக இப்படி ஒரு தவறான தகவல் நாட்டிற்குத் தரப்படுவது நல்லதல்ல. பலமுறை நான் விளக்கமாக இதே அவையிலே அதை மறுத்துக் கூறியிருக்கின்றேன். 108 சாதிகளுக்கு 20 சதவிகிதம் என்று சொல்லும்போது, 'ஏனப்பா 108 சாதிகள் 20 சதவிகிதத்தை எப்படிப் பிரித்துக்கொள்ள முடியும்' என்று கேட்கத் தோன்றும். 108 சாதிகள் என்றால், 1,000 பேர், 2,000 பேர், 10,000 பேர் உள்ள சாதி அமைப்புகளும் அதிலே அடங்கும். இதிலே மிக முக்கியமாக இருப்பவர்கள் வன்னிய சமுதாயத்தினர், முக்குலத்தோரில் பிறமலைக்கள்ளர் என்று சொல்லப்படுகிறவர்கள் சீர்மரபினர், இவர்கள்தான் பெரிய அளவிலே இருக்கின்ற சாதித் தொகையினர் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி சொல்கிறேன். இட ஒதுக்கீட்டில் இருக்கின்ற குறைபாடுகள் களையப்பட வேண்டுமென்பதற்காக, நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா



சமுதாயச் சங்கங்களும் சாதிவாரியாக கணக்கெடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடப்பாண்டிலே அந்தக் கணக்கெடுப்புகளை செய்து மக்கள்தொகை அடிப்படையிலே இட ஒதுக்கீட்டினை வழங்குவார் என்று சொன்னால் அது பயனுள்ளதாக அமையும் என்று சொல்லி அதை செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டில்கூட 20 சதவிகிதம் என்று வருகிறபோது, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மற்றும் பழங்குடியினருக்கு 18 என்று வருகிறபோது, எல்லா துறைகளிலும் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படாமல் உள்ள நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றாக அறிவார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பில் எல்லா நிலைகளிலும், மிகவும் பின்தங்கியவர்களுக்கு 1.2 சதவிகிதம் என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 3 சதவிகிதம் என்று மட்டும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலை எல்லாத் துறைகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் இருக்கக்கூடிய குறைபாடுகளை நடப்பாண்டிலேயே போக்கக்கூடிய வகையிலே, நிரப்பப்படாமல் உள்ள காலி இடங்களை--காலி பின்னடைவு இடங்கள் என்று சொல்கிறார்கள்--காலி பின்னடைவு பணியிடங்களை, மிகவும் பின்தங்கியவர்களாக இருந்தாலும் சரி அல்லது தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், பழங்குடியினராக இருந்தாலும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யார் யாருக்குப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கிறதோ, அவர்களைக் கொண்டு அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே வேலைவாய்ப்பிலே, மத்திய அரசுத் துறையிலே 3 சதவிகிதம், மாநில அரசுத் துறையிலே 1 சதவிகிதம்தான் இருக்கிறது. மற்ற எல்லா வேலைவாய்ப்புகளும் தனியாரிடம் இருந்துகொண்டிருக்கின்றன. இப்படி மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறக்கூடிய அளவில், பொருளாதார ரீதியாக

உயர்வதற்கு ஏற்ற வகையில், இட ஒதுக்கீட்டினை அமலாக்க தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் உரையில் விவசாயிகளுடைய நலன் குறித்து எதுவும் சொல்லப்படாமல் இருப்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியதைப் போல, இன்று அரசு அலுவலகங்களில் பணியாற்றக்கூடியவர்களாக இருந்தாலும், பல்வேறு தரப்பு மக்களாக இருந்தாலும்கூட, வாழ்க்கையிலே ஆண்டுக்கு ஆண்டு முன்னேற்றம் அடைகிற நிலை இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள் நிலை ஆண்டுதோறும் பின்தங்கிச் செல்கிறது. 'உழுவோர் உலகுக்கு அச்சாணி' என்று சொல்வார்கள்.

> "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை"

என்று சொல்வார்கள். இப்படி உழவர்களுக்குப் பெருமைதரக்கூடிய வாசகங்கள் மட்டும் இருக்கின்றனவே தவிர, அவர்களுடைய வாழ்க்கையில் இதுவரை ஒளியேற்றாத காரணத்தாலே, விவசாயிகளுடைய நலன்கருதி நல்ல திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக பயிர்க் கடன் முதலான பல்வேறு கடன்களைப் பெற்று, கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலே அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பல்வேறு சங்கடங்கள், சிக்கல்கள் இருந்தாலும்கூட, தமிழக அரசு இதிலே அதிக கவனம் செலுத்தி விவசாயிகளுடைய கடன்களையெல்லாம் இரத்து செய்ய வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுடைய பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. விலையென்று சொல்கின்றபோது, கரும்பினுடைய விலை குறைவாக இருக்கின்றது, சர்க்கரையினுடைய விலை கூடுதலாக இருக்கின்றது. நெல்லினுடைய விலை குறைவாக இருக்கின்றது. அரிசியினுடைய விலை கூடுதலாக இருக்கின்றது. ஆகவே, இப்படி



உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைக்கவும், அதை வாங்கி பயன்படுத்தக்கூடிய நுகர்வோர்களுக்கு கட்டுப்பாட்டிலே குறைவான விலையில் கிடைக்கக்கூடிய வகையிலே விலை நிர்ணயம் செய்ய நடப்பாண்டிலே ஒரு குழுவை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குழு விவசாயிகள், அதிகாரிகள், பயன்படுத்தக்கூடிய நுகர்வோர், இப்படி மூன்று தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவாக அமைக்கப்பட வேண்டும். இந்த மூன்று தரப்பினருடைய ஆலோசனையைக் கேட்டு ஒவ்வொரு ஆண்டும் விலையை நிர்ணயம் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாடு முன்னேறுவதற்கு கல்வி வேண்டுமென்று சொல்கிறோம். இன்று தனியார் துறையிலே இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்கள் தரமான கல்வியைக் கொடுக்கின்றன. அரசுத் துறையிலே இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்களுடைய தரம் மிகவும் பின்தங்கிய நிலையிலே மோசமாக இருக்கின்ற காரணத்தினாலே, தனியார் துறையிலே இருக்கக்கூடிய கல்வித் தரத்தைப்போல அரசு தரப்பிலே இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்களும் தரமான கல்வியைக் கொடுக்க முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக ஏழை எளியவர்கள் நீண்ட தூரம் சென்று படிப்பதற்காக கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலவச பஸ் பாஸ் வழங்கினார்கள். நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதே நேரத்திலே, பிளஸ் 2 வரையிலே வழங்கியிருக்கிறீர்கள். 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு I.T.I. இரண்டு ஆண்டு காலம் படிக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த பிளஸ் 2 காலம்தான் வருகிறது. அதேபோல Polytechnic என்று வருகிறபோது, ஒரு ஆண்டு கூடுதலாக வருகிறது. ஆகவே, இப்படி I.T.I.யாக இருந்தாலும், Polytechnic-காக இருந்தாலும் மூன்று ஆண்டு கால பட்டப்படிப்பு வரையிலே ஏழைகள் எல்லாம் பயன்பெறக்கூடிய வகையிலே, நீண்டதூரம் சென்று படிக்கக்கூடிய வகையிலே, மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரையிலே இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே கிராமப்புறங்களுக்குக் குடிநீர் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, வரவேற்கிறோம். நகராட்சியிலே பேரூராட்சிக்குட்பட்ட வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு

வழங்குவதுபோல, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய ஏழை எளிய சாதாரண மக்களுடைய எல்லா வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலே வாழக்கூடிய ஏழைகளுடைய பொருளாதாரத்தைக் கணக்கில் கொண்டு மாதக் கட்டணத்தைக் குறைந்த கட்டணமாக 10 ரூபாய் என்ற அளவிலே நிர்ணயம் செய்து தர வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, முன்வைப்புத் தொகை ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டுமென்றிருக்கிறது. அது கூடுதலாக இருக்கிறது. அந்தத் தொகையையும் பாதியாக, 500 ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையிலே, தனியார் நிறுவனங்கள், பெருகி வருகின்றன அது மெட்ரிகுலேஷன் பள்ளியாக இருந்தாலும் சரி, I.T.I., Polytechnic, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி என்று இருந்தாலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தரமான ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். அவர்களுடைய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. 300, 600, 900, 1,500 ரூபாய் என்ற நிலையிலே இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தினால், தனியார் கல்வி நிறுவனங்களிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கக்கூடிய வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பலமுறை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எங்களுடைய தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். நிலத்தடி நீர் புளோரைட் கலந்த நச்சுத் தன்மையுடைய நீராக இருக்கின்ற காரணத்தினாலே அதையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே நடப்புக் கூட்டத்தொடரிலே மாவட்டம் முழுவதும் பயன்பெறக்கூடிய வகையில், காவிரி நீர் என்று சொல்லக்கூடிய வகையிலே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



ஒகேனக்கல்லிலே நீர்மின் திட்டம் கொண்டுவருவதற்கு மிகப் பெரிய வாய்ப்பு இருக்கிறது. அதையும் பலமுறை வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இது கர்நாடக--தமிழக எல்லைப் பிரச்சினை என்று சொன்னார்கள். நான் கடந்த வாரம் மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலே வற்புறுத்திச் சொன்னேன். அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசுங்கள், உடனடியாகத் தமிழக அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றுவிட்டால் அந்தத் திட்டத்தை நடப்பாண்டிலேயே நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, தமிழக முதல்வர் அவர்களும் மின் துறை அமைச்சர் அவர்களும் அந்த ஒகேனக்கல் நீர்மின்திட்டத்தை நடப்பு ஆண்டிலே கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல், பெண்ணாகரம் என்பது மிகவும் பின்தங்கிய பகுதி; எந்தவிதத் தொழில் வசதியும் இல்லாத பகுதி; முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயும் வெளியிலேயும் வாக்குறுதி அளித்து இருக்கிறார்கள். நடப்பாண்டிலே பின்தங்கிய பகுதியான என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை உருவாக்கித் தர வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரு சிறிய அணைக்கட்டு, ஆச்சாரிகிணத்துப் பள்ளம் அணைக்கட்டு என்று சொல்லி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அந்தத் திட்டத்திற்கு tender எல்லாம் கோரப்பட்டு, தடையாணை பெறப்பட்ட காரணத்தினாலே அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், பல அதிகாரிகளிடத்திலும் எடுத்துச் சொல்லியும்கூட, அது முடிக்கப்படாத நிலையிலே இருக்கிறது. அதற்கு நில ஆர்ஜிதம் செய்து அந்தத் திட்டத்தை முடிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பாசனத்திற்குப் பயன்படக்கூடிய மத்தாளப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் என்னுடைய தொகுதியிலே நீண்டகாலமாக--பெருந்தலைவர் காமராசர் காலத்திலிருந்து--

நிலுவையில் இருக்கக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேகூட ஆளுநர் உரையிலே மத ஒற்றுமையைப் பற்றி, நல்லிணக்கத்தைப் பற்றி எல்லாம் சொல்லப்பட்டு இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி முழுமையாக வரவேற்கிறது. அந்த நோக்கத்தை வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அனைத்து சமுதாய மக்களிடத்திலேயும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும், சாதி மத மோதல்களைத் தவிர்ப்பதற்காகவும், மத நல்லிணக்கத்தை வலியுறுத்துவதற்காகவும், சமயப் பெரியோர்களையும், அனைத்து சமுதாயத் தலைவர்களையும் அழைத்து, மாவட்டந்தோறும் ஒவ்வொரு வாரமும் மிகப் பெரிய மாநாடுகளை நடத்தி, அதன் வாயிலாக மாவட்டத்திலே இருக்கக்கூடிய அடித்தட்டு மக்கள், சாதாரண மக்களிடையே ஒற்றுமை வளரக்கூடிய வகையிலே நாங்கள் நடத்தி வருகிறோம் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கேகூட ஊழலைப் பற்றி எல்லாம் எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டிலே எல்லா நிலைகளிலேயும் ஊழல் மலிந்து கிடக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இலஞ்சம் இல்லாத நிலையே இல்லை என்பதை நான் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள்; அவர்களை உள்ளபடியே நாம் பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டும். அப்படி நல்ல அதிகாரிகளைப் பாராட்டுகின்றபோது, வாழ்த்துகின்றபோது, இலஞ்சம் வாங்கக்கூடியவர்களுக்கு அரசு கடுமையான தண்டனை விதிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய பெண்ணாகரம் தொகுதிக்கு நீண்டகாலமாக கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கக்கூடிய கூட்டுறவு நிலவள வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி போன்ற வங்கிகளை வழங்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. பெர்னார்டு.



**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த உங்களுக்கும், பேரவைத் தலைவருக்கும், முதல்வர் அவர்களுக்கும், தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் எப்பொழுது ஆட்சியில் இருந்தாலும் ஆளுநர் உரையும், தொடர்ந்து நிதிநிலை அறிக்கையும், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கும், மொழி உணர்விற்கும், இந்திய இறையாண்மைக்கும் முன்னுரிமை வழங்கி, இந்தியத் துணைக் கண்டத்தின் இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றன என்பதை நல்லோரும், நல்லோர் ஏடும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன; நானும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மத்திய அரசு ஏழையெளிய மக்களின் அன்றாட உபயோகப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, எரிவாயு போன்றவற்றில் கவனம் செலுத்த மறுத்து, சுமையை ஏற்றியபோது, ஏழை மக்களைக் காப்பாற்றுவதுதான் இந்த அரசினுடைய கடமை என்று கருதி, ஏறத்தாழ 160 கோடி ரூபாய் இழப்பு இருப்பதையும் தாங்கிக் கொண்டு ஏழைகளைச் சிரிக்க வைத்த முதல்வர் அவர்களை நான் மனப்பூர்வமாக பாராட்டுகின்றேன்.

'தமிழுக்கும் அமுதென்று பேர்!-- அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று புரட்சிக் கவிஞர் கூறினார். தொன்மையானதும், இலக்கண, இலக்கியம் கொண்டதுமான தனிப் பெரும் மொழியாகிய தமிழை, தாய் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்கிவிடவேண்டுமென்று விரைந்து செயல்படுத்தும் இந்த உணர்விற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் இறையாண்மைக்கும் சமூக நீதிக்கும், சிறுபான்மை மக்களுக்குத் துயரம் வரும்போதெல்லாம் அத்துயரைத் துடைப்பதற்கும் முதல் குரல் கொடுக்கின்ற முதல்வர் அவர்களையும், அரசையும் பாராட்டுகின்றேன்.

அறிவியல் விஞ்ஞான வித்தைகளை அனைத்து மக்களும் பெற்றிட வேண்டும் என்ற தாகத்தில், அறிவியல் வளம் பெற 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இணையங்களை உருவாக்கி, ஏறத்தாழ 1,50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எண்ணியிருப்பது, வேலை கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கின்ற மாணவர்களுக்கு நம்பிக்கையும்

எதிர்காலத்தில் இதைப் படித்தால் பலன் பெறலாம் என்று எண்ணுகிற நல்ல உணர்வும் உருவாக்கும் வகையில் மாணவர் சமுதாயத்திற்கு பெரிய நம்பிக்கையை ஊட்டி இருக்கின்ற நம்பிக்கை நாயகரின் இந்தத் திட்டத்தை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-45

பாசனக் கால்வாய்களைத் தூர் வாருகின்ற திட்டத்திற்காக கூடுதல் நிதி ஒதுக்கி வழங்கியிருப்பதற்காக விவசாயிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள்; பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்று சொல்லப்பட்டு இருப்பதை மாற்றி, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் முகத்தில் கண்ணுடையவர் அனைவரும் கற்றவரே என்ற உணர்வோடு ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கியுள்ளதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது குளச்சல் தொகுதி தொழில் வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய பகுதி என்பதை அனைவரும் அறிவீர்கள். முட்டம், அம்மாண்டிவிளைக்கு இடைப்பட்ட சிவந்தமண் என்ற மணல் மேட்டை மாற்றி அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுப்பீர்களேயானால் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பாக இருக்கும். அந்த உதவியைச் செய்து தர நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கு அறிவில்லையோ அங்கு அறிவைக் கொடுக்க வேண்டும்; எங்கு நல்வாழ்வு இல்லையோ அங்கு நல்வாழ்வைக் கொடுக்க வேண்டும்; யார் வாழ்வின்றி அலைகிறார்களோ அவர்களுக்கு வாழ்வைக் கொடுக்க வேண்டும்; எங்கு ஆதரவு இல்லையோ அங்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று திருமறையில் புனித அகஸ்டின் அவர்கள் கருத்தினை வெளியிட்டிருக்கிறார்கள். அவர் போன்ற நல்லவர்களுடைய எண்ணங்களை இதயத்திலே தாங்கி, அவற்றைச் செயலாக்கிக் கொண்டு வருகிற நமது முதல்வர் அவர்கள், ஒரு காலத்தில் மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாவை ஒழித்தார்கள். கண்ணொளி திட்டத்தினை வழங்கினார்கள். ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு வழங்கினார்கள். அனாதைகளுக்கு



உதவிட அனாதை இல்லங்களை அமைத்து அவர்களுக்கு வாழ்வளித்தார்கள். சாலைப் பணியாளர்கள், நெடுஞ்சாலைப் பணியாளர்கள் ஆகியோர்களுக்குச் செருப்பு கொடுத்து உதவினார்கள். "ஏழைக்கு இரங்குகிறவன் பாக்கியவான்" என்று திருமறையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உதவிகளோடு மட்டுமல்லாமல் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி, ஏழையெளியவர்கள் குடும்பத்தில் யாரேனும் இறந்தால் அவர்களுக்கு ஆகும் செலவிற்கு உதவி, ஆகியவற்றையெல்லாம் வழங்குவதற்காக எல்லோரும் மிகச் சிறப்பாகப் பாராட்டுகிறார்கள்.

அரசியலிலும், பொது வாழ்விலும் கழிவுக வேண்டுமென்று முயற்சி எடுத்து பெரும் வெற்றி பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனிதக் கழிவுகளை மனிதன் சுமப்பது மனித நேயமற்ற செயல்; இறைவன் படைப்பில் ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்பதற்கேற்ப மனிதக் கழிவுகளைச் சுமக்கின்ற சமுதாயத்தின் மீது, இந்தப் பணியைச் செய்கின்ற சமுதாயத்தின் மீது, மிகுந்த அக்கறையோடு இரக்கம் காட்டி, அந்த நிலையை மாற்ற புதிய சட்டம் கொண்டு வந்திருப்பவர் புரட்சி வித்தகர் நம்முடைய மாண்புமிகு முதல்வர். அதற்காக நாடு அவரைப் பாராட்டுகிறது; இந்தியத் துணைக் கண்டமே அவரைப் பாராட்டுகிறது; அதனை வரவேற்கிறேன்.

பெருந்தலைவர் காமராசர் ஒரு காலத்தில் சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களும், அரசின் பல திட்டங்களும் வகுக்கப்பெற்று, செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும், அவை நாங்கள் நினைத்தபடி ஏழையெளிய மக்களைச் சென்றடையவில்லை என்று மிகுந்த ஆதங்கத்தோடு ஒரு காலத்தில் சொன்னார்கள். இன்றைக்கு பெருந்தலைவருடைய ஆதரவாளர்கள், அவரோடு இருந்து இப்போது உயிரோடு இருப்பவர்கள், டாக்டர் கலைஞருடைய, முதல்வருடைய நலத் திட்டங்களை, குறிப்பாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களை ஊராட்சி மன்றங்கள் செயல்படுத்துகின்ற திட்டங்களைப் பார்த்துவிட்டு பாராட்டுகிறார்கள். மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டுகிறார் என்று மாண்புமிகு முதல்வரைப் பாராட்டுகிறார்கள்.

தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில்

இப்போது மிகுந்த பிணைப்பும், இணைப்பும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தினை மேலும் வலிவுபடுத்துகிற வகையில் அதற்கான தொகையை இரட்டிப்பாக்கித் தர வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காற்றிற்கும், தண்ணீருக்கும், சாலைக்கும், மின்சாரத்திற்கும் சாதி, மத பேதம் இல்லை. மனிதனிடம் மட்டும்தான் சாதி மத வேறுபாடு இருக்கிறது. தந்தை பெரியார் வழியிலும், அண்ணா காட்டிய வழியிலும் நின்று, அவர்கள் காட்டிய வழியை நிலைநாட்டுகின்ற வகையில் சமத்துவபுரங்களை அமைத்து சாதி மத பேதங்களை அகற்றி, ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியை எல்லோரும் சேர்ந்து பாராட்டுகிறார்கள், நானும் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதி வளர்ச்சிக்காக, ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரியாக மாற்றித்தர வேண்டுமென்று நானும், என் தொகுதியைச் சேர்ந்த பலரும் கேட்டிருக்கிறோம். அதை விரைவிலே செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் துறைமுகம் வளர்ச்சி அடையுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்; அங்கே வளர்ச்சி ஏற்படும் என்ற எண்ணத்தில் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபோது, எங்களுடைய அன்புத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதை நினைவில் வைத்துக்கொண்டு, அங்கே இருக்கின்ற தனியார் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள், நானும் பாராட்டுகிறேன். அந்த வேலையை துரிதப்படுத்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

முட்டத்திற்கும், கடியப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட பகுதியை சுற்றுலா மையமாக மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திற்கு கடந்த காலத்தில் மேலமணக்குடி, கீழமணக்குடி இணைப்புப் பாலம் தந்துள்ளீர்கள். ஜீவா நினைவு மண்டபம் தந்துள்ளீர்கள். பெருந்தலைவர் காமராசர் நினைவு மண்டபம் அமைக்க இருக்கிறீர்கள். திருவள்ளுவருக்கு சிலை



எழுப்பப்பட்டு வருகிறது. மேலும் மீனவ மக்களுக்குத் தேவையான தூண்டில் வளைவு ஆகியவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் வாழ்கின்ற மீனவப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத்தரம் கருதி, அவர்களையெல்லாம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து சிறப்பு செய்துள்ளீர்கள். அதேநேரத்தில் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறுபான்மை மக்களாகிய பரதர், பரவர் என்ற அந்தப் பகுதியினர் மட்டும் அந்தப் பாக்கியத்தைப் பெறமுடியாமல் அவதிப்படுகின்றார்கள். பலமுறை இந்த மன்றத்தில் நான் தெரிவித்தும் இருக்கிறேன். உங்களுக்கு வேண்டுகோளும் வைத்திருக்கிறோம். ஆகவே, பரதர், பரவர் மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுடைய கவலையைத் தீர்த்து வைத்திட முதல்வர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னை மாநகரை சிங்காரச் சென்னையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை என்னவென்று சொன்னால், 'தென்னங்கீற்று ஓலையை மாநகரப் பகுதிகளில் பயன்படுத்தக்கூடாது' என்று அரசுக்குப் பரிந்துரை செய்ய இருப்பதாக ஒரு செய்தியை வெளியிட்டு இருப்பதால், குமரி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் தென்னங்கீற்றை நெய்து தொழில் செய்து கொண்டு இருப்பவர்கள் மத்தியில் அதற்கு பாதிப்பு வருமோ என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. சென்னையில் தடை விதித்து விடுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட தடையை விதிக்காமல் அவர்களைக் காத்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் படகில் சென்று தொழில் செய்கின்றபொழுது திசை மாறிச் சென்றுவிட்டாலோ அல்லது வேறு விளைவுகள் ஏற்பட்டாலோ விரைந்து காத்திட நம்முடைய அரசு ஏறத்தாழ ஐந்து விரைவுப் படகுகளை விடுவதற்கு முன்வந்துள்ளது. அதில் ஒரு படகை குமரி மாவட்டத்திற்குத் தந்தருள வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு தொழில் துறையில் முன்னேற்றம் காண வேண்டுமென்பதற்காக இலஞ்ச இலாவண்யமற்ற ஒரு நிலையை உருவாக்குவதற்காக முயற்சி எடுத்து, அதனால் உலக நாடுகளிலிருந்து தொழில் தொடங்க பலர் வந்திருப்பதால், தொழில் வளர்ச்சியை அடைவதற்கு எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சியை மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இன்று இலஞ்ச இலாவண்யமற்ற நிலை உருவாவதை மக்கள் பாராட்டுகிறார்கள். கல்வித் துறை, மின்சாரத் துறை, மீனளத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் அனைத்துத் துறையைச் சேர்ந்த பணிகளும் சிறப்பாக இருப்பதால் மக்கள் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறார்கள். இந்த அரசினுடைய நல்ல திட்டங்கள் மேலும் விரைந்து செயல்பட நிறைய தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு அந்தக் காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் செய்யாத நல்ல பணிகளை நம்முடைய டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் செய்து வருகிறார்கள். அதைப்போல மொழிப் போராட்ட தியாகிகளுக்கும் செய்து வருகிறார்கள். மிகுந்த நன்றியோடு பாராட்ட வேண்டிய ஒன்று. அதேநேரத்தில் சில மொழிப் போராட்டத் தியாகிகள் அந்தப் பலனைப் பெறமுடியாமல் அவதிப்படுகிறார்கள். அதை நீங்கள் மறுபரிசீலனை செய்து அவர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் பேருதவி செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டு, இந்த உரை நிகழ்த்த வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே இன்று பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து எனக்குத் தெரிந்த சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, ஆளுநர் உரை என்பது அரசினுடைய பிரதிபலிப்பாக இருக்கக்கூடிய ஒரு உரையாக அமைந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த 30 மாதங்களுக்கும் மேலாக முதல்வர் கலைஞர் அவர்கள் கடுமையாக



உழைக்கிறார்கள். தூங்குவதில்லை, விடிய விடிய தமிழகத்தின் முன்னேற்றத்தில் எண்ணம் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். இப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் கீழ்த்தட்டிலே இருக்கிற மக்களுக்கு நாமெல்லாம் நினைக்கின்ற அளவுக்கு முழுமையான பயனும், பலனும் கிடைத்ததா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

*பிற்பகல் 12-55*

குறிப்பாக, கோடிக்கணக்கான பணத்தை சாலை வசதிக்காக, பாலங்கள் அமைப்பதற்காக, குடிநீர்த் திட்டங்களுக்காக, பள்ளிகளின் மேம்பாட்டிற்காக, தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, பல்வேறு நிலைகளில் உங்களுடைய முழுமையான சிந்தனையைச் செலுத்தி செயல்படக்கூடிய காலகட்டத்திலே கீழ்த்தட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கு, நம் எண்ணங்களுக்கு ஏற்ப, நம்முடைய செயல்பாடுகளால் முழுமையாக அந்த மக்கள் பயன் அடையக்கூடிய அளவுக்குத் திட்டங்களின் பயன்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வட்ட அலுவலகங்களில் கீழ் நிலையில் இருக்கக்கூடிய அதிகாரிகள், ஒன்றிய அலுவலகங்களில் கீழ் நிலையில் இருக்கக்கூடிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கீழ் நிலையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் ஆகியோரின் முழு ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலே சமுதாய நலத் திட்டங்களான ஓய்வூதியத் திட்டம், திருமண உதவித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக--கோடிக்கணக்கான பணத்தை நாம் கொடுப்பதற்குத் தயாராக இருந்தும்கூட--கிடைக்க வேண்டிய பலன் முழுமையாக, சுலபமாக அந்த மக்களுக்குக் கிடைக்காத சூழ்நிலையின் காரணமாக அந்த மக்கள் வெறுப்படையக்கூடிய சூழ்நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த நிலையை எதிர்காலத்திலே நாம் கட்டாயமாக மாற்றியாக வேண்டும். காரணம் விடிய, விடிய உழைத்து, விடிந்தபின் என்ன பயன் ஏற்பட்டது என்று நினைத்துப் பார்க்கிறபோது நமது மனதிற்கு நிம்மதி ஏற்படக்கூடிய அளவுக்கு எதிர்காலத்திலே அரசு செய்யக்கூடிய திட்டங்களின் பயன்கள் அனைத்தும் முழுமையாக ஏழை எளியவர்களைச் சென்று அடையக்கூடிய அளவுக்கு நம்முடைய செயல்பாடுகளை, நிர்வாகத்தை மாற்றி அமைத்தாக வேண்டுமென்று அன்போடு, பணிவோடு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசுகின்றபோது 142 இலட்சம் ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டன என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குடும்பங்களுக்கான ரேஷன் கார்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள், அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. இன்னும் நிறைய குடும்பங்கள் புதிய ரேஷன் கார்டுகள் பெறமுடியாத சூழ்நிலையில், பழைய கார்டுகளை வைத்திருக்கும் அவர்களுக்கு புதிய கார்டுகள் கொடுக்கின்ற வரையில் ரேஷன் பொருட்களை, அத்தியாவசியப் பொருட்களைக் கொடுக்க வேண்டும் என்ற உறுதியான நிலையை நாம் எடுத்தாக வேண்டும். காரணம், புதிய கார்டுகள் கொடுத்தாகிவிட்டது. ஆகவே பழைய கார்டுதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் இல்லை என்று சொன்னால் அது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும். எனவே, முழுமையாக புதிய கார்டுகள் கொடுக்கப்படுகின்ற வரையில் பழைய கார்டுதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை முழுமையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான அன்றாட அத்தியாவசியப் பொருட்கள், சுலபமாக, எந்த நேரத்தில் வேண்டுமானாலும், மாதம் 30 நாட்களும் கிடைக்கக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் கிராமப் பகுதிகளிலே இரண்டு நாட்களுக்கு மட்டும் அத்தியாவசியப் பொருட்களான சீமெண்ணெய், சர்க்கரை போன்றவற்றைக் கொடுத்துவிட்டு, அதன் பிறகு ஏழை எளிய மக்கள் சென்று கேட்கும்போது, 'சீமெண்ணெய் இல்லை' 'சர்க்கரை இல்லை' என்று சொல்லப்படுகின்ற நிலையை நான் பார்க்கிறேன். இது குறித்து, பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், கோட்டாட்சியர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும் எடுத்துச் சொல்லியும்கூட அதில் முழுமையான வெற்றியை அடைய முடியவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம் கீழ்த்தட்டில் இருக்கக்கூடிய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருட்கள் கிடைத்தால்--பாலங்கள் அமைக்கின்றோம், சாலைகள் அமைக்கின்றோம், கோடிக்கணக்கில் செலவழித்து தொழிற்சாலைகள் அமைக்கின்றோம் அதைப்பற்றி கீழ்த்தட்டில் இருக்கின்ற மக்கள் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் நினைப்பதில்லை. ஆனால் தங்களுக்குத் தேவையானதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களுடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில்



மக்களுடைய தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கக்கூடிய அரசானது கீழ்த்தட்டில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தேவையானதைக் கொடுத்தும் அவற்றின் பலன் அவர்களுக்கு முழுமையாகக் கிடைக்காத சூழ்நிலையை மாற்றி, எதிர்காலத்திலே அவர்கள் முழுமையாகப் பலன் அடையக்கூடிய அளவில் நம்முடைய செயல்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக, இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய நம் போன்ற அரசியல்வாதிகள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள், அத்தனைபேரும், மாண்புமிகு முதல்வர் அ[illegible] ஒத்துழைப்புக்கு, கடுமையான உழைப்புக்கு ஏற்ற வகையில், வேலை செய்தால்தான் அந்த மக்களுக்கான பயன் முழுமையாக அவர்களைச் சென்றடையும். அந்த நிலையை எதிர்காலத்திலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ரேஷன் கடைகளிலே நல்ல அரிசி வருகின்றபோது அங்கே இருக்கக்கூடிய பணியாளர்கள் அந்த நல்ல அரிசியை மறைத்து வைத்துவிட்டு, ஊளை அரிசியைக் கொடுக்கிறார்கள். பொதுமக்கள் அந்த அரிசி வேண்டாம் என்று சொன்ன உடனே நல்ல அரிசியை அவர்கள் வெளியே விற்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறேன். எதிர்காலத்திலே நல்ல அரிசி வெளியிலே விற்கப்படாமல் தடுக்கக்கூடிய சூழ்நிலையைக் கண்டிப்பாக நாம் ஏற்படுத்தியாக வேண்டும். மேலும் 11.00 மணிக்கு கடையைத் திறந்து 2.00 மணிக்கு மூடிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு ஏழைப் பெண்களும், கூலித் தொழிலாளர்களும் சென்று ரேஷன் பொருட்களைக் கேட்கிறபோது 'போம்மா சரிதான், நீ யாரிடம் வேண்டுமானாலும் புகார் சொல்லிக்கொள், எங்களுக்குக் கவலை இல்லை' என்று அவர்கள் சொல்லக்கூடிய சூழ்நிலையை நான் பார்க்கின்றேன். இன்றைய அரசு நல்ல பல திட்டங்களை முழுமையாகச் செய்து வருவதாக கிராமப்புறங்களிலே சொல்லுகிறார்கள். ஆனால் கீழ்நிலையில் இருக்கக்கூடிய மக்களுக்கு முழுமையாக திருப்தி ஏற்படாத நிலை இருக்கிறது. எதிர்காலத்தில் அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று அன்போடும், வணக்கத்தோடும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தாங்கள் பொறுப்பேற்ற நேரத்தில் 5 ஆம் இடத்தில் இருந்த தொழில் துறையை 2ஆம் இடத்திற்குக் கொண்டு

வந்திருக்கிறீர்கள். அது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகும். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் யாருக்கும் இருக்க முடியாது. உங்களுடைய கடுமையான உழைப்பால், முயற்சியால், எங்கெங்கெல்லாம் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறமுடியுமோ அத்தனையையும் பெற்று எப்படியாவது நாட்டை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்திலே நீங்கள் செய்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், மகிழ்ச்சி. தொடர்ந்து செயல்பட வேண்டும்.

*பிற்பகல் 1-00*

அதேநேரத்தில், ஒருபுறத்திலே நூற்பு ஆலைகளும், ஒருபுறத்திலே விசைத்தறிகளும், சர்க்கரை ஆலைகளும், போக்குவரத்துத் துறையும் நஷ்டத்திலே இயங்கி வருகின்ற ஒரு சூழ்நிலை இப்போது இருக்கிறது. தொழில் துறையிலே ஒரு மந்தமான சூழ்நிலை இருக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன என்ற விளக்கத்தை முழுமையாக--நான் ஒரு பொருளாதார நிபுணர் அல்ல--விளக்கமாகச் சொல்லக்கூடிய அளவிலே இல்லாவிட்டாலும்கூட, இங்கே பல்வேறு நிலையிலே இருக்கக்கூடியவர்கள் அவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்று நாட்டினுடைய பொருளாதாரம் ஒருபுறத்திலே வளர்ந்திருப்பதாகக் கருதினாலும்கூட, முழுமையாக, பொருளாதாரம் தத்தளித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல; இந்தியப் பொருளாதாரம், உலகப் பொருளாதாரம் மோசமான சூழ்நிலையில் இருக்கக்கூடிய ஒரு நிலையில், கார்த் தொழிற்சாலைகளைப் புதியதாக ஒருபுறத்திலே ஏற்படுத்தினாலும்கூட, இன்னொருபுறத்திலே நூற்பு ஆலைகளும், விசைத் தறிகளும், சர்க்கரை ஆலைகளும், பல்வேறு ஆலைகளெல்லாம் மூடப்படுகின்ற மிக மோசமான நிலைகளையெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே, அவற்றையெல்லாம் புதுப்பித்து, அவையும் எதிர்காலத்திலே சிறப்பாகச் செயல்படக்கூடிய அளவிற்கு உங்களுடைய செயல்பாடுகள், திட்டங்கள் அமைய வேண்டுமென்று அன்போடு இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று போக்குவரத்துக் கழகத்திலேகூட, ஜீவா போக்குவரத்துக் கழகம், அதேபோல சேரன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை, இப்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்-1, 2 என்ற



நிலையில் உள்ளன. முன்பெல்லாம் இலாபத்திலே இயங்கிய இவையெல்லாம் இப்போது நஷ்டத்திலே இயங்குவதாகக் கூறுகின்றார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதையெல்லாம் சிந்தித்தாக வேண்டும். ஏதோ நான் பேசுவதற்காக அல்ல. உண்மையான நிலையிலே நாடு நன்றாக இருந்தாக வேண்டும். எதிர்காலத்திலே நாட்டு மக்களுடைய முன்னேற்றம் ஒழுங்காக இருந்தாக வேண்டும். இந்த நஷ்டத்தை எவ்வாறு நாம் எதிர்காலத்தில் சரிகட்டப் போகிறோம் என்பதையெல்லாம் சிந்தித்து, இந்த நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பான முறையிலே திட்டத்தைத் தீட்டி, எதிர் காலத்திலே சிறப்பாக, இலாபகரமாக ஓடக்கூடிய அளவிற்கு செயல்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீருக்காக கோடிக்கணக்கான ரூபாயை அள்ளியள்ளிக் கொடுத்து, இன்று பல்வேறு நிலையிலே, பல்வேறு இடங்களில் வேலைகள் நடந்து வருகின்றன; பாராட்டத்தக்கவையாக இருக்கின்றன. அதேநேரத்தில் கிராமப் பகுதிகளிலேயெல்லாம், வேலைகள் இன்னும் வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். போடப்பட்ட பழைய திட்டங்களிலே, அடிக்கடி பைப்புகள் எல்லாம் உடையக்கூடிய நிலையிலே இருக்கின்றன. அவை விரைவாகப் பழுதுபார்க்கப்படுவதில்லை. அவை விரைவாகப் பழுதுபார்க்கப்பட வேண்டும். காரணம், பைப் லைனைப் போட்டுவிட்டு, ஐந்து நாட்களுக்கு, ஆறு நாட்களுக்குக் குடிநீர் செல்லவில்லையென்றால், அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு 10 நாட்களுக்கு உணவு அளித்துவிட்டு, ஒருநாள் உணவு அளிக்கவில்லை என்று சொன்னால், எவ்வளவு மனவேதனை அடைவார்களோ அதைப் போன்ற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, எதிர்காலத்திலே எங்கெங்கெல்லாம் பழுது வருகின்றதோ அங்கெல்லாம் உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, கிராமப் பகுதியிலே வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு கொடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். குடிநீர் இணைப்பு கொடுக்கின்ற அதேநேரத்தில், பொதுக் குடிநீர்ப் பைப்புகளுக்குத் தண்ணீர் குறைவில்லாத அளவிற்கு வரக்கூடிய சூழ்நிலையிலேதான் வீடுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டுமேயொழிய, வீடுகளுக்கு இணைப்பைக் கொடுத்துவிட்டு, பொதுமக்கள் பயன்படுத்தும் நிலையில் பொதுக் குடிநீர்ப் பைப்புகளில் தண்ணீர் வராத சூழ்நிலை உருவாகிவிடக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இப்போது பள்ளிகளிலே ஆசிரியர்களை முதுநிலை அடிப்படையில் நியமனம் செய்து, சிறப்பான முறையிலே அரசு பணியாற்றியிருக்கிறது. ஆனால், இப்போது மத்திய அரசுக்கு ஈடாக நிதியாதாரம் சிறிது குறைவாக இருந்தாலும்கூட, அள்ளியள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, ஆசிரியர்கள் முழுமையாக பொறுப்பை உணர்ந்து செயல்படாத சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். குறிப்பாக, ஐந்து ஆசிரியர்கள் இருப்பார்களேயானால், பல்வேறு பள்ளிகளுக்கு நான் 9-00 மணிக்குச் செல்கின்றபோது, மூன்று ஆசிரியர்கள் இருப்பார்கள். மாலை 3-00 மணிக்குச் செல்கின்றபோது மூன்று ஆசிரியர்கள் இருப்பார்கள். காலையிலே நேரம் கழித்து வரக்கூடியவர்கள், மாலையிலே 4-30 மணி வரை இருக்கின்றார்கள். காலையிலே முன்னதாக வரக்கூடியவர்கள் மாலையிலே, 3-00 மணிக்கெல்லாம் செல்லக்கூடிய காட்சியை நான் பார்க்கிறேன். இதனை மாற்றிட, அந்தந்தப் பகுதிகளிலே என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களிலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு, 1964-க்கு முன்பாக பொறுப்புள்ள ஆசிரியர்களையெல்லாம் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுத்தோமே அதேபோல இப்போது செய்தோமேயானால், எதிர்காலத்தில் சிறப்பாக இருக்கும். அதைப்பற்றி நம்மைப் போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; பாராட்டக்கூடிய திட்டங்கள். நமக்கு நாமே திட்டத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, பத்து கோடி அல்ல, பதினைந்து கோடி அல்ல, நூறு கோடி வேண்டுமானாலும் நீங்கள் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும். காரணம், மக்களை வேலையோடு இணைக்கக்கூடிய அளவிற்கு, மக்களே ஒன்றிச் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினோமேயானால்தான், எதிர்காலத்திலே வேலையும் ஒழுங்காக இருக்கும். அவர்களுக்கும் வேலையினுடைய அருமை தெரியும்; பெருமை தெரியும். (மணியடிக்கப்பெற்றது). இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமக்கு நாமே திட்டத்திற்கு வரப்போகின்ற நிதியாண்டிலே 100 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்றும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஒரு கிராமம் என்பதை



இரண்டு கிராமமாக எடுத்து சிறப்பான முறையிலே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற அளவிலே செய்ய வேண்டுமென்றும் நான் அன்போடு இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கால்வாய்களெல்லாம் சிறப்பாகத் தூர் எடுக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில்....(மணியடிக்கப்பெற்றது).

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஐந்து நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அடித்தது துணைத் தலைவர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய்களெல்லாம் தூர் எடுக்கப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் கீழ்பவானி பாசன வாய்க்காலில் முழுமையாகத் தூர் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

பூக்கள், காய்கறிகள் எல்லாம் நீண்டகாலம் கெடாமல் இருக்கக்கூடிய அளவுக்கு குளிர்சாதன வசதிகளை மாவட்டந்தோறும் செய்து கொடுத்தாக வேண்டும். தாம்பரத்திலே 20 கோடி ரூபாய் செலவிலே குளிர்சாதன வசதி செய்துகொடுக்கப்போவதாக கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு உங்களுடைய அறிக்கையிலே தெள்ளத் தெளிவாகக் கூறினீர்கள். அதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் காய்கறிகளும், பூக்களும் கெடாமல் இருப்பதற்கு குளிர்சாதன வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்திலே மஞ்சள் வளாகம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்தீர்கள். ஆனால் அதற்கு இன்னும் இடம்கூடத் தேர்வு செய்யப்படாத மிக மோசமான நிலையைப் பார்க்கிறேன். இதில் தாங்கள் தலையிட்டு உடனடியாக ஈரோட்டில் மஞ்சள் வளாகத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு 15 விழுக்காடு இடஒதுக்கீடு என்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். பாராட்டுக்கள். பேரூராட்சிப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு, வறுமைக்கோட்டிற்குகீழே உள்ள மாணவர்களுக்கு அந்த 15 விழுக்காடு இடஒதுக்கீடு என்பதை 25 விழுக்காடாக உயர்த்த வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கினால்தான் உங்களுடைய திட்டம் முழுமையாக வெற்றியடையும்.

அதேபோல, S.C.,S.T. வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 19 விழுக்காடு இடஒதுக்கீடு என்றிருக்கிறது. அந்த 19 விழுக்காட்டிலே சென்னை நகரம், கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற நகரங்களிலே படிக்கக்கூடிய S.C.,S.T. வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பயனடையக்கூடிய அளவிற்கு கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய குப்பனும், சுப்பனும் பயனடைவதில்லை. இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த 19 விழுக்காட்டிலே 10 விழுக்காட்டை கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய குப்பனுக்கும், சுப்பனுக்கும் ஏன் கொடுக்கக்கூடாது என்பதை உங்களுடைய சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். இந்த 19 விழுக்காட்டில் இப்போது நகரங்களிலுள்ள மாணவர்களே அதிகமாகப் பயனடையக்கூடிய நிலையை மாற்றி, எதிர்காலத்தில் கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய S.C.,S.T. வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் பயனடையக்கூடிய அளவிற்கு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

***திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களை அறிவித்து, தொழில் துறையில் 5-வது இடத்திலிருந்த தமிழகத்தை 2-வது இடத்திற்குக் கொண்டு வந்து, தமிழகத்தை உயர்த்தியதற்கு நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக்



கடமைப்பட்டிருக்கிறேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களைச் சிறப்பான இடத்திற்குக் கொண்டு வருவதற்காக ஒரு குழு அமைத்து, நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆதிதிராவிடர் நலனுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அவர்கள் எல்லாம் பெருமைப்படத்தக்க அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கித் தந்த தங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் அவர்கள்தான் இந்த நாட்டுக்குத் தியாகம் செய்த தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவு இல்லத்தை அமைத்துத் தந்தார்கள். அந்த நினைவு இல்லம் நீண்டகாலமாக பராமரிக்கப்படாமல் பாழ்பட்டு இருந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் வந்தபிறகுதான் அந்தத் தியாகச் செம்மல் தில்லையாடி வள்ளியம்மை நினைவு இல்லத்தைச் சீரமைக்க 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து சிறப்பாக அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த அளவிற்குப் போற்றுதலுக்கு உரியவராக நம்முடைய முதல்வர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

தரிசு நிலங்கள் எல்லாம் மேம்பாடு செய்யப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பாராட்டுக்குரியது. அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தியிருந்தாலும் நம்முடைய முதல்வர் அவர்கள் ஏழைகளின் பங்காளன் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் ஏழைகளின்மீது அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தால் 1,179 கோடி ரூபாயை அரிசிக்கு மானியமாக வழங்கி இருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய அரசு பாராட்டுக்குரிய அரசாக இருக்கிறது.

அடுத்து விவசாயிகளின் கோரிக்கைகள் சிலவற்றை நான் முன்வைக்க விரும்புகிறேன். கரும்புக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை இல்லாத காரணத்தால் கரும்பை விவசாயம் செய்யும் விவசாயிகள் எல்லாம் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். எனவே கரும்புக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், கூட்டுறவு ஆலைகள் எல்லாம் சரியான முறையிலே பராமரிக்கப்படாத காரணத்தினால், சென்ற ஆட்சியிலே ஏராளமான நட்டத்திற்கு உட்பட்ட காரணத்தினால், இப்போது அவை நலிவடைந்து இருக்கின்றன.

அந்தக் கூட்டுறவு கரும்பாலைகளுக்கு ஏதாவது தனி நிதி ஒதுக்கித் தந்து, அந்த ஆலைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

நாகை, திருவாரூர் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் ஆறுகள் எல்லாம் தூர் வாரப்பட்டு சிறப்பான முறையில் இருந்த காரணத்தினால், இப்போது விவசாயிகள் எல்லாம் காப்பாற்றப்பட்டு, ஓரளவுக்கு விவசாயம் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. இதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், இதற்கு உறுதுணையாக இருந்த எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத்தர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஆய்வுகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அங்கு துறைமுகம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளாகமும் அங்கு அமைக்க வேண்டும். 1974-75 ஆம் ஆண்டுகளில் அங்கே தொழில் மையம் அமைக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிலமெல்லாம் ஆர்ஜிதம் செய்ய முற்பட்டார்கள். ஆனால், ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால், அது நிறைவேற்றப்படாமல் இருந்தது. இப்போது, தொழில் வளாகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், திருவெண்காடு என்னும் ஊரில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு 110 கிலோவாட் துணை மின் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், திருவெண்காட்டிலே, அறநிலையத் துறை மூலமாக இரண்டு உயர்நிலைப் பள்ளிகள், ஆண்கள், பெண்கள் பள்ளிகள்



சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து பார்வையிட்டு அவற்றின் சிறப்பையெல்லாம் அறிந்தார்கள். அந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள சங்கரன்பந்தலில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்

செம்பனார்கோவிலில் ஒரு மேல்நிலைப் பள்ளி இந்த ஆண்டு தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. இந்தப் பள்ளி இடவசதி இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் அந்தப் பள்ளிக்கு அருகிலே இருக்கிறது. அதை நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொறையாரில் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற நிதிநிலை அறிக்கையின்போது, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பொறையாரில் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு முன்னாலே, அங்கு நீதிமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் இடையிலே நிறுத்திவிட்டார்கள். அங்கு மீண்டும் நீதிமன்றம் ஆரம்பிக்க வேண்டுமென்று சட்ட அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடியில் கடலரிப்பால் ஏராளமான வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன. அங்கு கடலரிப்பைத் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே வேலை நடைபெற்று, அதைப் பாதியிலே நிறுத்திவிட்டார்கள். கேட்டால், பணம் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்த வேலையைத் துரிதமாக முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பூம்புகாரில் கடலரிப்பைத்

தடுப்பதற்காக 86 இலட்சம் ரூபாய்க்கு tender விடப்பட்டு இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுச்சேரி என்ற ஊரில் சமத்துவபுரம் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, துரிதமாக சமத்துவபுரத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். சமத்துவபுரத்திலே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒருவர் மனு கொடுத்த பிறகு, அந்த மனுவை காலத்தில் கொடுக்கவில்லை என்று திருப்பியனுப்புகிற நிலை இருக்கிறது. எனவே, தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன்; அப்படிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து காலம் கடந்து கொடுத்திருந்தாலும், அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வழங்கவேண்டும்.

பிள்ளைபெருமாள்நல்லூரில் 330 மெகாவாட் மின்சார உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று சென்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. இப்போது அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே ஏராளமான சாலைகள் மோசமாக இருக்கின்றன. செம்பனார்கோவில்-நல்லாடை சாலை மிகவும் மோசமாக உள்ளது. அந்தச் சாலையை NABARD திட்டத்தின் மூலமாகச் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், காவிரிப்பூம்பட்டினம்-கல்லணை சாலையை NABARD திட்டத்தின் மூலமாகச் செய்து தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

கீழையூர்-கடாரம்கொண்டான் சாலை, புஞ்சை-செம்பனார் கோவில் சாலை, நல்லாடை-கொங்கானோடை சாலை, கொங்கானோடை-வெளாகம் சாலை, பொறையார்-மங்கநல்லூர் சாலை போன்ற சாலைகள் எல்லாம் மிகவும் பழுதுபட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சீரமைத்துக் கொடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-15

காளஹஸ்திநாதபுரம் என்ற ஊராட்சியில் ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டியைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல செம்பனார்கோவிலில் முதலில் இயங்கி வந்த நிலவள வங்கியை இப்போது மயிலாடுதுறையோடு சேர்த்துவிட்டார்கள். எனவே, ஒரு நிலவள வங்கியைத் திரும்பவும் செம்பனார்கோவிலிலே ஆரம்பித்துக் கொடுக்குமாறு கேட்டு, எனக்கு தந்த வாய்ப்பினுக்கு நன்றி கூறி, ஆளுநர் உரையை வரவேற்று முடிக்கிறேன் வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இரா[illegible]

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பங்குகொள்ள அனுமதி கொடுத்ததற்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் இப்போது பல நல்ல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில், விவசாயிகள் அரசிடம் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள். விவசாயத்திற்காக அவர்கள் என்னென்ன கேட்கிறார்கள் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டு, ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன வேண்டுமென்பதைத் தெரிந்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு விலை மிக மிகக் குறைவாக இருக்கிறது. நெல்லினுடைய விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கரும்பினுடைய விலையையும் நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நல்ல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா பகுதிகளிலேயும் கண்மாய்களிலும், கால்வாய்களிலும் தூர் வாரப்படுகின்றன. இப்போது இது ஒன்றுதான் விவசாயிகளுக்கு நல்ல செயலாக அமைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும், எல்லாப் பகுதிகளிலும் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் தேவையான பொருட்களுக்கு அதிக மானியம் வழங்கவேண்டும். இடுபொருட்களையும், தரமான விதைகளையும் மானிய விலையிலே நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பள்ளிகளைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, ஆசிரியர் பணியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில் எந்தவித இலஞ்ச இலாவண்யத்திற்கும் இடமில்லாமல் நியமிக்கப்பட்டதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஆரம்பக் கல்வியிலே இருக்கக்கூடிய சிறிய பள்ளிக் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லை. மருத்துவர்கள் இல்லாமல் இருப்பதால் அதிக தூரத்திற்குச் சென்று மக்கள் வைத்தியம் பார்க்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பணிபுரியும் மருத்துவர்கள் அந்தந்தப் பகுதியிலேயே தங்கி மருத்துவம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். கிராமங்களிலே இருக்கக்கூடிய அத்தனை வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட இருப்பதாக கூறியிருப்பது நல்ல திட்டம், அதை வரவேற்கிறேன்.

காவிரியிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் குடிநீர் எடுத்துச் செல்வதற்காக ஒரு திட்டத்தை நிறைவேற்றயிருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், நீங்கள் ஒரு குழுவை இதற்காக அமைத்தீர்கள். அந்தக் குழுவும் ஏதோ சிபாரிசு செய்து கொடுத்திருக்கிறது. இப்போது, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. இன்னும் சிபாரிசு



செய்யப்பட்டதற்கு என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதை இன்னும் காலதாமதம் இல்லாமல்.....

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையில் குழுவின் அறிக்கையை இங்கேதான் வைக்க இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் படிக்காமல் இருந்தால், அதற்கு அரசாங்கத்தைக் குறை சொல்லி என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று சொல்கிறாரே? முடிவுகள் எல்லாம் ஆளுநர் உரையிலே இருக்கும். அதை நீங்கள் படித்துப் பார்க்கவில்லை என்றால், அரசு என்ன செய்ய முடியும்?

**திரு. கே.ஆர். இராமசாமி:** இன்னும் வைக்கவில்லை. சட்டம் pass ஆகவில்லை. அதிகாரம்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக அதிகாரங்கள் உள்ளாட்சிகளுக்கு இன்னும் தேவை என்பதற்காக போடப்பட்ட அந்தக் குழு இன்னும் அறிக்கை தரவில்லையா என்று கேட்டார்கள். அந்த ஆளுநர் உரையிலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இந்தக் கூட்டத் தொடரிலேயே வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கே.ஆர் இராமசாமி:** அறிக்கை பெறப்பட்டு இருந்தால், அதனுடைய நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அறிக்கையினுடைய முடிவின்படி என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதிலே காலதாமதம் ஏற்பட்டால் உள்ளாட்சி அமைப்புகளிலே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய காலம் முடிவு அடையக்கூடிய நிலை வந்துவிடும். அந்த அளவிற்குச் செல்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் மேலும் அதிகாரங்கள் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படுவது பற்றி, 13 ஆம் பக்கத்தில் "பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 11-1-1999

அன்று அளித்துள்ளது, அப்பரிந்துரைகளின்மீது அரசு விரைவில் முடிவு எடுக்கும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். என்னென்ன முடிவுகள் என்பதை நம்முடைய நண்பர் இராமசாமி அவர்கள், அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வது மிகச் சுலபம்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நன்றி. இதை விரைவிலே செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை. போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டில், பேருந்துகள் மிக, மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள்கூட கூறினார்கள். அவர்கள் ஊருக்கு அருகிலே, பேருந்திலே சென்று கொண்டு இருக்கும்போது, படிக்கட்டிலே நின்றவர்கள், படிக்கட்டே கீழே விழுந்ததினால், அவர்களும் கீழே விழுந்து காயம் அடைந்தார்கள் என்று கூறினார்கள். பேருந்திற்குள் இடம் இல்லாததால் அவர்கள் படிக்கட்டிலே பயணம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்கள் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே இயங்கக்கூடிய பேருந்துகள் மிக, மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. அவற்றை நீங்கள் மாற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகங்களிலே பெருத்த நஷ்டம் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். 400 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறுகிறார்கள். அது எந்த அளவிற்கு சரி என்று எனக்குத் தெரியவில்லை. கடந்த 3 ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையிலே என்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டும். புதிய வழித்தடங்கள் எத்தனை? எத்தனை புதிய பேருந்துகளை இயங்கி இருக்கிறீர்கள் என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, தமிழகத்திலே மினி பேருந்து திட்டத்தை அமல்படுத்தினீர்கள். ஆனால், அது சரிவர செயல்படவில்லை.....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரை சுமார் 2 ஆயிரம் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அரசு பொறுப்பேற்கிறபோது 15 ஆயிரம் அளவிலே இருந்த பேருந்துகள், இப்போது 17 ஆயிரம் என்ற



அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுவரை முதல்வர் அவர்கள் அளித்த நிதியுதவியின் காரணமாக 7,200 புதிய பேருந்துகள் விடப்பட்டு இருக்கின்றன.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகள் போதுமான அளவு எங்கள் பகுதியிலே இல்லை என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பேருந்துகள் மிக, மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. புதிய பேருந்துகளை ஒதுக்கும்போது, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நீங்கள் அதிகமான பேருந்துகளை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது 400 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அதைப்பற்றி நமது அரசு ஒரு வெள்ளை அறிக்கையை இந்த சபைக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பாக இருந்த அரசிற்கும், இப்போது இருக்கும் அரசிற்கும் இதிலே என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்வதற்காக நான் கூறுகிறேன். அதைத் தரவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்தபடியாக நமது முதல்வர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்தார்கள். சமத்துவபுரம் என்ற ஒரு முயற்சியை உலகத்திலேயே முதல் முறையாக நமது தமிழகத்திலே செய்திருக்கிறார்கள். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நல்ல முயற்சி வெற்றி பெறவேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்.

தமிழகத்திலே சாதிச் சண்டைகள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த சாதிச் சண்டைகளை ஒழிப்பதற்கு என்ன வழி என்பதை நன்றாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சாதிச் சண்டைகளை யார் தூண்டிவிடுகிறார்கள் என்பதை நன்றாக அறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சாதிகளுடைய தலைவர்களாக இருப்பவர்கள் தங்களது செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் சில பிரச்சினைகளை முன்வைத்து அப்பாவி ஏழையெளிய மக்களைத்

தூண்டிவிடுகின்ற நிலை இருக்கிறது. அதைத் தாங்கள் உன்னிப்பாக கவனித்து அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, 1957-ல் தமிழகத்தில் சாதி ஒழிப்புப் போராட்டத்தை தந்தை பெரியார் அவர்கள் ஆரம்பித்தார்கள். சமூக நல்லிணக்கம் தேவைப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் புதியதாக சாதி ஒழிப்புப் போராட்டம் தேவைப்படுகிறது. மொழிப் போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கி, இலவசப் பேருந்துப் பயணம் செய்வதற்கு வசதி செய்திருப்பது போல், சாதி ஒழிப்புப் போராட்டத்திலே சிறை சென்றவர்களுக்கும் இந்த வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக 29-12-1998 அன்று தேவக்கோட்டையிலே ஓர் ஊர்வலம் நடந்தது. ஆனால் தேவக்கோட்டை பகுதியிலே தொடர்ந்து 144 தடை உத்தரவு இருக்கிறது. அவ்வாறு இருக்கும்பொழுது அன்றைக்கு ஓர் ஊர்வலம் நடந்தது. அந்த ஊர்வலத்தில் மாவட்ட ஆட்சியரும், S.P.-யும் கூடவே வருகின்றார்கள். அப்படி வருகின்றபோது என்னுடைய வீடு தாக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய வீடு தாக்கப்பட்டதற்கு நடவடிக்கை சரியாக எடுக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. அதில் முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு--என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன்--அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் கள்ளச் சாராயப் பிரச்சினையைத் தடுப்பதற்கு ஒரு சரியான திட்டத்தை வகுக்கவேண்டுமென்று நான் எண்ணுகிறேன். நான் சென்ற தடவைகூட சட்டமன்றத்திலே பேசும்போது இதுபோன்று மதுபானம் அருந்தக் கூடாது என்று சட்டத்தை இயற்றுகின்றபோது பொறுப்பிலே இருக்கின்ற நாமாவது முதலிலே மதுபானங்களை அருந்தாமல் இருக்கவேண்டுமென்று நான் கூறினேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணியைப் பாருங்கள். சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.



**திரு. கே.ஆர். இராமசாமி:** உரையை முடித்துவிடுகிறேன். அதேபோன்று இந்தப் பகுதியிலே, தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லா இன மக்களையும் சேர்த்து இதில் விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு பிரச்சாரக் குழுவையே அமைத்து இன்னும் முடுக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, புதிய குடும்ப அட்டைகள் நிறைய வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னும் வழங்கப்பட வேண்டியது இருக்கிறது. புதிய அட்டைகள் வழங்குவதிலே அதிக அக்கறை காட்டி நமது அரசு குடும்ப அட்டைகளை வழங்கினாலும், இன்னும் புதிய அட்டைகள் வழங்கப்படாமல் இருப்பவர்களுக்கு உடனடியாக அந்த அட்டைகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எங்களுடைய மாவட்டத்தில் கிராஃபைட் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. உடனடியாக அங்கே அதனுடைய பிற தொழில்களை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-2-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. வருவாய்த் துறையின் அறிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. 2437/1962-ல் திருத்தம் ஒன்று செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 27-04-1998-ஆம் நாளிட்ட 127-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[1999 பிப்ரவரி 19

33. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 4-5-1998-ஆம் நாளிட்ட 139-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

34. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ் அல்லது 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் அல்லது இவ்விரு சட்டங்களின் கீழ் வணிகர் ஒருவர், ஓர் ஆண்டில் விற்பனை செய்கின்ற விசைத்தறியில் உற்பத்தி செய்த அல்லது தயாரித்த காஸ் துணி அல்லது காயக் கட்டுத் துணியின் மொத்த விற்பனைத் தொகை ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, அந்த வணிகர், மேற்சொன்ன காஸ் துணி அல்லது காயக் கட்டுத் துணியின் விற்பனை மீது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 25-6-1998-ஆம் நாளிட்ட 187-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

35. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் ஒன்று செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-9-1998-ஆம் நாளிட்ட 261-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

36. வருவாய்த் துறையின் அறிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. II (1)/2437/1962-ல் திருத்தம் ஒன்று செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 5-10-1998-ஆம் நாளிட்ட 289-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).



1999 பிப்ரவரி 19]

37. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

38. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

39. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

40. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

41. 1996-97-ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

220161

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.